REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2021 டிசம்பர் 2 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

89 1932 - 2021

வரு. 89 இல. 286 | Thursday 02,December, 2021 | 20பக்கங்கள் | 30/-

## நிதி நெருக்கடி மிகு காலத்திலும் கல்வித்துறைக்கு அதிக நிதி

### அரசு பொறுப்புடன் செயற்படுவதாக தினேஷ் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



நாட்டில் நிதி நெருக்கடி நிலவுவதை காரணங்காட்டி அரசாங்கம் அனைத்து துறைகளையும் மூடி விடவில்லை என சபை முதல்வரும் கல்வி அமைச்சருமான தினேஷ் குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சிறந்த வழிகாட்டல் மூலம் அனைத்து துறைகளையும்

06

## கிளிநொச்சி காணிகளை மக்களிடம் கையளிப்பதற்கு உத்தரவு



### டக்ளஸின் கோரிக்கைக்கு ஜனாதிபதி செவிசாய்ப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பொருத்தமான காணிகள் அனைத்திலும் பிரதேச மக்கள் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில்

06

## இந்திய பிரதமர் மோடியை சந்திக்கிறார் பசில் ராஜபக்ஷ

### இந்திய ஊடகம் செய்தி வெளியீடு

புதுடில்லிக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்க உள்ளதாக இந்திய ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

அத்துடன், சிரேஷ்ட அமைச்சர்களையும், பசில் ராஜபக்ஷ சந்திக்க உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

06





எரிபொருள் விலையில் மாற்றம் மேற்கொள்ளாமையினால்;

## 10 மாதங்களில் மட்டும் 7000 கோடி ரூபா நட்டம்

### பாராளுமன்றத்தில் அமைச்சர் உதய கம்மம்பில தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

**கடந்த பத்து மாதங்களில் ஏற்பட்ட நட்டத்தை கருத்திற் கொண்டு எரிபொருள் விலையில் மாற்றம் மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம்**

எரிபொருள் விலையில் கடந்த காலங்களில் திருத்தம் மேற்கொள்ளாத காரணத்தினால் கடந்த பத்து மாதங்களில் மாத்திரம் 7ஆயிரம் கோடி ரூபா நட்டத்தை எதிர்கொள்ள நேர்ந்துள்ளதாக பெற்றோலிய வளத்துறை அமைச்சர் உதய கம்மம்பில பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதனைக் கவனத்தில் கொண்டு எரிபொருள் விலையில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சபையில் தெரி வித்தார். பாராளுமன்றத்தில் நேற்று, வாய்மூல விடைகளுக்கான வினாக்கள் வேளையில் எதிர்கட்சியினர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் 52 ஆண்டுகள் பழைமையானது. அதனை எவருக்கும் விற்பனை செய்வதற்கு இதுவரை எந்த தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை.

உலகில் வளர்ச்சியடைந்துள்ள தற்போதைய

06



இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, நேற்று (01) இந்திய நிதியமைச்சர் ஸ்ரீமதி நிர்மலா சீதாராமனை புதுடில்லியில் சந்தித்து இருநாட்டு பொருளாதார விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதையும் இந்தியாவிற்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் மிலிந்த மொறகொடவும் படத்தில் காணப்படுகிறார்.

WORLD AIDS DAY

## நாட்டில் HIV நோயாளர் தொகையில் திடீர் அதிகரிப்பு

### அரச தகவல் திணைக்களம் அறிக்கை

03

## மஹிந்த சமரசிங்கவின் இடத்திற்கு மஞ்சு வர்ணகுமார

### பாராளுமன்ற உறுப்பினராக சத்தியபிரமாணம்



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

மஹிந்த சமரசிங்கவின் இராஜினாமா காரணமாக வெற்றிடமாகவுள்ள பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு மஞ்சு லலித் வர்ணகுமார நியமிக்கப்பட்டுள்ளார்.

மஞ்சு லலித் வர்ணகுமார களுத்துறை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் நேற்றைய தினம் பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய முன்னிலையில் மஞ்சு லலித் வர்ணகுமார பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

லலித் வர்ணகுமாரவின் பாராளுமன்ற

06

## தமிழ் முற்போக்கு கூட்டணி அரசியல் கட்சியாக தெரிவு

### 'மின்சூள்' சின்னத்தையும் வழங்கி அங்கீகாரம்



தமிழ் முற்போக்கு கூட்டணி ஒரு பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியாக தேர்தல் ஆணைக்குழுவினால் அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. "டோர்ச் லைட்" என்ற மின்சூள் சின்னம் கூட்டணியின் அதிகாரபூர்வ சின்னமாக

06

2022ஆம் ஆண்டுக்கான பாடசாலை

## முதலாம் தவணைகள் ஏப்ரல் 18 இல் ஆரம்பம்

### கல்வியமைச்சு சுற்றறிக்கை வெளியீடு



அனைத்துப் பாடசாலைகளுக்கும் 2022 ஆம் ஆண்டின் முதலாம் தவணை ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்று

06

## TNA பிரதேச சபை உறுப்பினர் நேற்று சடலமாக மீட்பு



யாழ். வலிகாமம் கிழக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரதேச சபை உறுப்பினர் சுப்பிரமணியம் சிவபாலன்

06

## உறங்கிய நிலையில் தீயில் சிக்கி சிறுமி பலி

**வெலிகம வீடொன்றில் அனர்த்தம்**



வெலிகம, வெவெகெதர வத்த பிரதேசத்தில் வீடொன்று தீப்பிடித்து எரிந்ததில் சிறுமி

06

வீதிகளில் மலிந்து போய் காணப்படும்

## பட்டங்கள் வழங்கும் கல்வி நிறுவனங்கள்



### தரத்தை உறுதி செய்யுமாறு வேண்டுகோள்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

கொழும்பு வீதிகளெங்கும் பட்டங்களுக்கான சான்றிதழ்களை வழங்கும் கல்வி நிறுவனங்கள் காணப்படும் நிலையில் அவற்றின் தரத்தை உறுதி செய்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் அவற்றை

06

## தோட்டத் தொழிலை மட்டுமே நம்பியிருந்த காலம் இன்றில்லை

### மலையகம் கல்வித்துறையில் பெரும் முன்னேற்றம்

**-சபையில் மருதபாண்டி ராமேஸ்வரன் பெருமிதம்**




**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

15 இலட்சம் மக்கள் தோட்டத்துறை தொழிலை மட்டுமே நம்பியிருந்த காலம் மாற்றம் பெற்று தற்போது மலையகம் கல்வித்துறையில் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது என இ.தொ. கா. எம்.பி மருதபாண்டி ராமேஸ்வரன்

06

### விக்கல் வீராச்சாமி



மலையகத்தில தமிழ் பேசும் தாதியர், சுகாதார அதிகாரிகள் அவசியம் தேவை எண்டு வடிவேல் ஐயா சபையில கவலைப்–பட்டிருக்கிறார்.....

நல்ல விஷயம்தான், ஆனா ஐயா அஞ்சு வருஷமா சுகாதார பிரதி அமைச்சரா இருந்தப்ப இத பத்தி கவனிச்சதா பதிவுகள் எதுவும் இல்லை.. !!!

தமிழ், முஸ்லிம் கிராம எல்லைப் பிரச்சினை;

## பாராளுமன்றில் மு.கா எம்.பிக்கும் சந்திரகாந்தனுக்குமிடையில் தர்க்கம்



பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக அமைச்சர் சமல் ராஜபக்ஷ உறுதி

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் நிர்வாக கட்டமைப்பில் கோரளைப் பற்று மத்தி பிரதேச செயலகம் மற்றும் கோரளைப்பற்று

06

## எரிவாயு சிலிண்டர் வெடிப்பதை தடுக்க பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்



### லிட்ரோ Gas நிறுவனம் விளக்கமளிப்பு



எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பதை தடுப்பதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து லிட்ரோ நிறுவனம் விளக்கமளித்துள்ளது.

சிலிண்டரில் எரிவாயு எவ்வளவு இருந்தாலும் ரெகுலேட்டர் மூலம் ஒரு சரியான அளவை தான் வெளியேற்றும். யாரிடத்திலும் தவறான எண்ணம் இருந்தால் எரிவாயு சிலிண்டரின் பாவனை அதிகரிக்க அதிகரிக்க எரிவாயு வெளிவரும் அளவு அதிகரிக்கும்

06



# இஸ்லாமிய நாடுகளின் தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் பிரதமருடன் சந்திப்பு







இஸ்லாமிய நாடுகளின் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களுக்கு இடையிலான சந்திப்பொன்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் இரவு கொழும்பு ஷங்கிரில்லா ஹோட்டலில் நடைபெற்றது.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸின் அழைப்பின் பேரில் இவ்விசேட சந்திப்பும் இரவு விருந்துபசாரமும் இடம்பெற்றது. இதன்போது வருகைத் தந்திருந்த தூதுவர்கள் மற்றும் உயர் ஸ்தானிகர்களுடன் பிரதமர் நட்பு ரீதியாக கலந்துரையாடினார்.

கொவிட்19 தொற்று நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட துரித செயற்பாட்டிற்கு வருகைத்தந்திருந்த தூதுவர்கள் மற்றும் உயர் ஸ்தானிகர்கள் பாராட்டு தெரிவித்தனர்.

இஸ்லாமிய நாடுகளுடனான இருதரப்பு உறவை தொடர்ந்து பேணுதல் மற்றும் பரஸ்பர செயற்பாடுகள் மற்றும் திட்டங்கள் ஊடாக இலங்கையின் பொருளாதார மேம்பாட்டிற்கு பங்களிப்பு செய்வது தொடர்பில் இதன்போது தூதுவர்கள் கருத்து தெரிவித்தனர்.

தொற்று நிலைமைக்கு சவால்களை வெற்றி கொண்டு இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு தற்போதைய அரசாங்கம் மேற்கொண்டுவரும்முயற்சிகள்தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இதன்போது தெளிவுபடுத்தினார்.

இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு இஸ்லாமிய நாடுகளின் ஒத்துழைப்பினை தொடர்ச்சியாக எதிர்பார்ப்பதாக இதன்போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ,தூதுவர்கள் மற்றும் உயர் ஸ்தானிகர்கள் மத்தியில் குறிப்பிட்டார்.

இஸ்லாமிய நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கையின் 15 தூதுவர்கள் மற்றும் உயர் ஸ்தானிகர்கள் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

ஓமான், பலஸ்தீன், குவைத், சவுதி அரேபியா, மலேசியா, கடார், துருக்கி, ஈரான், லிபியா, ஐக்கிய அரபு இராச்சியம், இந்தோனேசியா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளுக்கான இலங்கை தூதுவர்கள் மற்றும் மாலைதீவு, பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகிய நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தி அந்நாடுகளின் இலங்கை உயர் ஸ்தானிகர்கள் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.





பொதுஜன பெரமுன கட்சியின் ஊடக மத்திய நிலையத்தின் நான்கு ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு நேற்று முன்தினம் கட்சியின் ஊடக மத்திய நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வில் நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷ மங்கள விளக்கேற்றுவதையும் ஊடக மத்திய நிலைய உறுப்பினர்களையும் படத்தில் காணலாம்.



பம்பலப்பிட்டி ஸ்ரீ கதிரேஷன் ஆலயத்தில் இந்து கலாசார திணைக்களத்தினால் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் நாட்டு மக்களுக்கும் நலன் வேண்டி விசேட பூஜை வழிபாடுகள் செய்யப்பட்டன.அதன் தெய்வீக பிரசாதத்தினை அலரி மாளிகையில் வைத்து பிரதமரிடம் சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா கையளிப்பதை படத்தில் காணலாம்.



இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட ஆன்மீகத் தலைவர் அஷ்ஷெய்க் அப்லலுல் உலமா கலாநிதி தைக்கா அஹ்மத் நாஸிர் ஆலிம் நேற்று பயணமானார். அன்னாரை வழியனுப்பி வைக்கும் முகமாக கொழும்பு நாராஹேன்பிட்ட அக்போதி விகாரையின் விகாராதிபதி கொழும்பு மாநகர சபை உறுப்பினர் அதி சங்கைக்குரிய கலாநிதி கலகம தம்மாரன்சி நாயக தேரர், பிரதமரின் முஸ்லிம் சமய மற்றும் கலாசார விவகாரங்களுக்கு பொறுப்பான இணைப்பாளர் அல்ஹாஜ் அஸ்ஸெய்யத் கலாநிதி ஹஸன் மௌலானா ஆகியோர் கலந்து கொண்ட போது பிடிக்கப்பட்ட படம்.

## யாழில் தியாகி வாமதேவன் தியாகேந்திரனின் 70வது பிறந்ததினம் நிகழ்வுகள்



வடக்கில் பல்வேறு சமூக மற்றும் உட்கட்டுமான பணிகளை முன்னெடுத்த சமூகசோதியும் தியாகி அறக்கொடை நிதிய ஸ்தாபக தலைவர் தியாகி வாமதேவன் தியாகேந்திரனின் 70 வது பிறந்த தினத்தை முன்னிட்டு யாழில் பல நிகழ்வுகள் நடைபெறுகிறது. மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கந்தசாமி கருணாகரன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறும். வடக்கில் பல்வேறு உட்கட்டுமான அபிவிருத்திகளை மேற்கொண்டு சமூகத்திற்கு எண்ணற்ற சேவைகளை மேற்கொண்டுள்ளார்.

## சிவனொளிபாதமலை யாத்திரை தொடர்பான கலந்துரையாடல்

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

சிவனொளிபாதமலை பருவகால யாத்திரை ஆரம்பிப்பதை முன்னிட்ட கலந்துரையாடல் நேற்றுக் காலை 10 மணிக்கு சிவனொளிபாத மலைக்கு பொறுப்பான சப்ரகமுவ பல்கலைக்கழக வேந்தர் பெங்கவே ததம்மின்ன தேரர் தலைமையில், நல்ல தண்ணி சுகாதார அத்தியட்சகர் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கலந்துரையாடலில் நுவரெலிய மாவட்ட அரச அதிபர், அம்பகமுவ பிரதேச செயலாளர், ஹற்றன் வலய பொலிஸ் அத்தியட்சகர், மஸ்கெலியா பிரதேச சபையின் தவிசாளர், ஹற்றன், வட்டவளை, கினிகத்தேனை, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, நோட்டன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, போகவாந்தலாவ பொலிஸ் நோர்வூட், மஸ்கெலியா, நல்ல தண்ணி போன்ற பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், ரக்காடு கிராமத்தில் உள்ள அதிரடிப்படையினர், மவுசாகலை சந்தியில் உள்ள இராணுவத்தினர், வைத்திய அதிகாரி மற்றும் பொது சுகாதார அதிகாரிகள், கிராம சேவகர்கள், தேசிய நீர் வடிகாலமைப்பு அதிகாரிகள, வன பாதுகாப்பு,மின்சாரத்துறை, தனியார் பேருந்து மற்றும் அரசு பேருந்து அதிகாரிகள்,பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகள் மற்றும் நல்ல தண்ணீர் வர்த்தகர்கள், விடுதி உரிமையாளர்கள், சிவனொளிபாத மலைக்கு பொருட்களைக் கொண்டு செல்வோர் ஆகிய அனைவரும் கலந்து கொண்டனர்.



**இதில் கலந்து கொண்டு பேசிய நுவரெலியா மாவட்ட அரச அதிபர்**

2021/ 2022 ஆம் ஆண்டுக்கான சிவனொளிபாதமலை பருவகாலம் யாத்திரை எதிர்வரும் 18ஆம் திகதி பௌர்ணமி தினம் ஆரம்பமாக உள்ளது.இதற்கான ஏற்பாடுகளை இரத்தினபுரி கல்பொத்தாவில ரஜமகா விகாரையின் தேரரினால் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

எதிர்வரும் 17ஆம் தேதி வரும் சுப நேரத்தில் இரத்தினபுரி கல்பொத்த ரஜமஹா விஹாரையில் இருந்து மூன்று வழிகளில் சுவாமிகள் ஊர்வலமாக கொண்டு வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2021 டிசம்பர் 2 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN




**தொழுகை நேரம்**

01 முதல் 03 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.47 |
| லுஹர் | 12.01 |
| அஸர் | 03.23 |
| மஃரிப் | 05.53 |
| இஷா | 07.07 |

**இன்றைய சுபதினம்**

பிலவ வருடம் ஐப்பசி 16

ராகுகாலம் : பகல் : 1.30 - 03.00வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை

யோகம்: அமிர்தசித்த யோகம்

திதி: திரையோதசி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | வெற்றி |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | செலவு |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | சுகம் |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | கோபம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)



இந்தியாவுக்கான இலங்கையின் பிரதி உயர்ஸ்தானிகர் கலாநிதி துரைசாமி வெங்கடேஸ்வரன், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து சென்னையில் உள்ள பிரதி உயர்ஸ்தானிகராலய செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடிய போது எடுக்கப்பட்ட படம்.

# அடுத்த 15 நாட்களுக்கு புதிய சுகாதார வழிமுறை

சுகாதார அமைச்சு MINISTRY OF HEALTH

**நேற்று முதல் அமுலாகியது**

கொவிட்19 வைரஸ் தொற்று நிலைமைக்கு மத்தியில் புதிய பொதுமைப்படுத்தலின் கீழ் நாடு வழமைக்கு திரும்பியுள்ள நிலையில் நேற்று (01) முதல் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை பின்பற்றப்பட வேண்டிய புதிய சுகாதார வழிகாட்டல்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

அதற்கமைய திருமணங்களின் போது மண்டபத்தின் கொள்ளளவில் மூன்றில் ஒரு பகுதியினர் என்ற ரீதியில் ஆகக்கூடியது 200 பேர் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதோடு, பரந்த வெளிகளில் இடம்பெறும் திருமணங்களுக்கு 250 பேர் கலந்து கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்தோடு திரையரங்குகளில் ஆசன எண்ணிக்கையில் 75 சதவீத மானோருக்கு பங்குபற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. விளையாட்டுக்களை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும், பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

மண்டபங்களில் நடத்தப்படும் ஏனைய வைபங்களுக்கு அதிகபட்சம் 100 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதோடு, பரந்த வெளிகளில் 150 பேர் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. விற்பனை நிலையங்கள், மருந்தகங்கள், பல்பொருள்

06

## நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு புதிய தலைவர்

நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவராக நீல் டி அல்விஸ் நியமிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கான நியமனக் கடிதம் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவினால் புதிய தலைவரிடம் நேற்று (01) காலை நெல் சந்தைப்படுத்தல் சபையின் பிரதான அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னதாக பிரதேச செயலாளர், அரசாங்க அதிபர் மற்றும் பொது நிர்வாக அமைச்சின் செயலாளராகவும் நீல் டி அல்விஸ் பதவி வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




எரிவாயு சம்பந்தமான சிக்கல்கள் இருக்குமாயின் **1311** என்ற அவசர இலக்கத்துக்கு அழைக்குமாறு லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

### எரிவாயு சிலிண்டர் வெடிப்பு தொடர்பில்

# விசேட அமைச்சு சார் ஆலோசனை கூட்டத்தில் நேற்று கூடி ஆராய்வு

**(லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்)**

எரிவாயு கலவை மாற்றம் காரணமாக எரிவாயு சிலிண்டர் வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெறுகின்றதா என்பது குறித்தும் ஜனாதிபதி நியமித்துள்ள குழுவின் அறிக்கையை இரு வாரங்களில் பெற்று அதன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது குறித்தும் நேற்று நடைபெற்ற விசேட வர்த்தக அமைச்சு சார் ஆலோசனைக் குழுவில் ஆராயப்பட்டது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் இருந்து இடம்பெறுகின்ற எரிவாயு சிலிண்டர் வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்கும் அதற்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கிலும் வர்த்தக அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் விசேட கூட்டம் பாராளுமன்றில் நேற்று (01) நடைபெற்றது.




- எரிவாயு கலவை மாற்றம் காரணமா எனவும் அவதானிப்பு
- ஜனாதிபதி நியமித்த குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்தவும் முடிவு

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றதோடு இதில் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண, எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட அமைச்சர்களும் கலந்து கொண்டனர்.

எரிவாயு சிலிண்டர் வெடிப்பு சம்பவங்கள் தொடர்பில் எதிர்க்கட்சியினர் பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விகள் தொடர்பிலும் இதனுடன் தொடர்புபட்ட ஏனைய தரப்பினர்களையும் இணைத்துக் கொண்டு கலந்துரையாடும் நோக்கிலும் வர்த்தக அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் இந்த விசேட கூட்டம் நடத்தப்பட்டது.

வர்த்தக அமைச்சு, கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க

06

### நாட்டின் பல பகுதிகளில் மின் துண்டிப்பு

## நவம்பர் 29 சம்பவத்திற்கு சதி முயற்சிகள் காரணமா?

*CIDயில் மின்சார சபை தலைவர் முறைப்பாடு*



29ம் திகதி நாட்டின் பல பகுதிகளில் ஏற்பட்ட மின் துண்டிப்பிற்கு சதி முயற்சிகள் காரணமாகயிருக்கலாம் என இலங்கை மின்சார சபையின் தலைவர் எம்.எம்.சி பெர்டினான்டோ பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். சதிமுயற்சி இடம்பெற்றதா என விசாரணைகள் இடம்பெறும் அதேவேளை இது குறித்து பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மின்சார சபைக்கும் உள்ளேயும் வெளியேயும் உள்ள பலர் மின்துண்டிப்பு குறித்து கவலை கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

06

## நாட்டில் HIV நோயாளர் தொகையில் திடீர் அதிகரிப்பு

**அரச தகவல் திணைக்களம் அறிக்கை**

WORLD AIDS DAY

இலங்கையில் கடந்த சில வருடங்களாக எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருவதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு நேற்று (01) அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் எமது நாட்டில் எயிட்ஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 'சமத்துவமின்மைக்கு முடிவு கட்டுங்கள், எயிட்ஸை முடிவுக்குக் கொண்டு வாருங்கள்' என்பதுதான் இந்த ஆண்டு எயிட்ஸ் தின கருப்பொருளாகும்.

06

### வரலாற்றின் முதல் தடவையாக

## யாழ். மாநகர சபைக்கு புதிதாக செங்கோல்

வரலாற்றின் முதல் தடவையாக யாழ். மாநகரசபை அமர்வு செங்கோலுடன் மாநகர முதல்வர் மணிவண்ணன் தலைமையில் நடைபெற்றது.

மாநகர முதல்வர் வி. மணிவண்ணனின் வேண்டுகோளுக்கு அமைய அண்மையில் குகபதமடைந்த நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் 10ஆவது நிர்வாக அதிகாரி குகஸ்ரீ குமாரதாஸ மாப்பாண முதலியாரின் நினைவாக நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானம் யாழ். மாநகர சபைக்கு செங்கோல் ஒன்றினை வழங்கியது.

நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் 11ஆவது நிர்வாக அதிகாரி குமரேஷ் சயந்தன குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் வடிவமைப்பில் உருவாக்கப்பட்ட செங்கோலுடன் வரலாற்றில் முதல் தடவையாக நேற்றைய மாநகர அமர்வு மாநகர முதல்வர் தலைமையில் நடைபெற்றது.

## நாவலர் கலாசார மண்டபம் தொடர்பான இணைந்த செயற்பாடு வரவேற்கத்தக்கது

**அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு**




நாவலர் கலாசார மண்டபம் தொடர்பாக எதிர்காலத்தில் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினதும் யாழ். மாநகர சபையினதும் இணைந்த செயற்பாட்டுக்கான முன்மொழிவு வரவேற்கத்தக்கது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக, குறிப்பாக இந்து ஆலயங்களின் அபிவிருத்தி மற்றும் பரிபாலனச் செயற்பாடுகளைச் செழுமைப்படுத்துவதற்கான

06

## வாகனங்களின் விலை அதிகரிப்பு; சில நிறுவனங்கள் தீர்மானம்

வாகனங்களின் விலையை அதிகரிக்க வாகன தயாரிப்பாளர்கள் தீர்மானித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பல தயாரிப்பு நிறுவனங்களின் தலைவர்களை மேற்கோள் காட்டி வெளிநாட்டு ஊடகங்கள் இதனைத் தெரிவித்துள்ளன. வாகன உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களின்விலையேற்றம்காரணமாகவே வாகனங்களின் விலையை அதிகரிக்க நேரிட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், இந்த வருடத்தில் நான்காவது தடவையாக வாகனங்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

06

## கிரிக்கெட் நூதனசாலை மீண்டும் திறப்பு

ஸ்ரீ லங்கா கிரிக்கெட் நூதனசாலை பொதுமக்களின் பார்வைக்காக மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, பிரதி திங்கட்கிழமை முதல் சனிக்கிழமை வரை காலை 09.00 மணியிலிருந்து மாலை 05.00 வரை பார்வையாளர்களுக்காக குறித்த நூதனசாலை திறந்திருக்குமென ஸ்ரீ லங்கா கிரிக்கெட் நூதனசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

சுகாதார விதிமுறைகளை பின்பற்றி இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் நூதனசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

### எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பு சம்பங்கள்

## உடனடியாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்

**செந்தில் தொண்டமான் கோரிக்கை**

நாடளாவிய ரீதியில் பதிவாகும் எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பு சம்பவங்கள் தொடர்பாக உடனடியாக விசாரணைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை எரிசக்தி அமைச்சு நடவடிக்கையெடுக்க வேண்டும். எரிவாயுக்கள் தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டுமென இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உபத் தலைவரும் பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கடந்த 48 நாட்களில் 11 சம்பவங்கள் இவ்வாறு பதிவாகியுள்ளன. இதனால் எரிவாயுவைப் பயன்படுத்தும் மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது. உடனடியாக இது குறித்த விசாரணைகளை

06

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 140.10 | 146.33 |
| கனடியன் டொலர் | 154.48 | 160.62 |
| யூரோ | 223.52 | 232.08 |
| ஜப்பான் யென் | 1.7356 | 1.8048 |
| சிங்கப்பூர் டொலர் | 144.42 | 149.28 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 263.33 | 271.99 |
| சுவிஸ் பிராங்க் | 213.00 | 220.95 |
| அமெரிக்க டொலர் | 198.50 | 202.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 535.11 | கட்டார் ரியால் | 55.08 |
| குவைத் டினார் | 666.41 | சவூதி ரியால் | 53.78 |
| ஓமான் ரியால் | 524.04 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 54.92 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் கார்த்திகை மாதம் 16ம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரபீஉனில் ஆகிர் பிறை 26

### குறள் தரும் சிந்தனை



நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு

சேர்ந்த நிலத்தின் தன்மையால் நீரானது வேறுபட்டு அந்த நிலத்தின் தன்மையை அடைந்து விடும். அது போல மக்களின் அறிவும், தாங்கள் சேர்ந்த இனத்தின் தன்மையைப் பெற்றதாகி விடும்.

# கருத்து முரண்பாடுகள் நிலவுவது பிளவு என்ற அர்த்தத்தை தராது!

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையில் பல அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சியமைத்துள்ளன. பொதுஜன பெரமுன கட்சியின் கொள்கை, கோட்பாடுகள் மற்றும் வேலைத் திட்டங்களுடன் உடன்பாடு கண்டுள்ள கட்சிகளே அவையாகும். கடந்த 2020 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலை பொதுஜன பெரமுன தலைமையில் இந்த கட்சிகள் ஒன்றிணைந்து எதிர்கொண்டு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பெற்று ஆட்சியமைத்திருக்கின்றன. பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களும் உறுப்பினர்களும் அமைச்சர்களாகவும் இராஜாங்க அமைச்சர்களாகவும் பதவிகளை வகிக்கின்றனர்.

வெவ்வேறு கொள்கை, கோட்பாடுகளைக் கொண்டுள்ள கட்சிகள் பெரமுன தலைமையில் ஒன்றிணைந்து ஆட்சியமைத்துள்ள போதிலும் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தியே அவை ஒன்றிணைந்து செயற்பட்டு வருகின்றன.

வெவ்வேறு கொள்கை கோட்பாடுகளைக் கொண்ட கட்சிகள் ஒன்றிணைந்துள்ள போதிலும், அக்கட்சிகள் அனைத்தும் பெரமுன கட்சியின் கொள்கை, கோட்பாடுகளின்படியே செயற்பட வேண்டும் என்றில்லை. கூட்டணியில் அங்கம் வகிக்கும் எல்லாக் கட்சிகளும் தத்தம் கொள்கை கோட்பாடுகளுடன் செயற்படுவதற்கான உரிமைகளைக் கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் இக்கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் ஒரிரு உறுப்பினர்கள் மத்தியில் அவ்வப்போது கருத்து முரண்பாடுகள் ஏற்படுகின்றன. இம்முரண்பாடுகளை எதிரணியைச் சேர்ந்த சிலர் 'பெரமுன கூட்டணிக் கட்சிகள் மத்தியில் பிளவு ஏற்பட்டு விட்டது, அரசாங்கம் வீழ்ச்சியடைந்து விடும்" என்று கருதுகின்றனர். ஆனால் ஜனநாயகம் தொடர்பில் போதிய தெளிவைப் பெற்றிராதவர்களே இவர்கள் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் ஜனநாயக நாடொன்றில் கூட்டணி என்பதே வெவ்வேறு கொள்கை கோட்பாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் ஒன்றிணைவாகும். பல கட்சிகள் ஒன்றிணைந்திருந்தாலும் பிரதான கட்சியின் கொள்கை, கோட்பாட்டைத்தான் அனைத்துக் கட்சிகளும் பின்பற்ற வேண்டும், அதற்கு ஏற்பவே செயற்பட வேண்டும் என்ற விதியுமில்லை. ஒவ்வொரு கட்சியும் தத்தம் கொள்கை, கோட்பாடுகளைப் பேணியபடி ஒன்றிணைந்து செயற்படுவது கூட்டணியின் பண்பாகும்.

ஜனநாயகப் பாரம்பரியத்தைக் கொண்டுள்ள நாடுகளில் அரசியல் கட்சிகள் கூட்டணி அமைத்து ஆட்சியமைப்பது வழமையானது. இது ஜனநாயகத்தின் பண்பாக மாத்திரமல்லாமல் ஜனநாயகத்தைப் பலப்படுத்தும் செயற்பாடுகளில் ஒன்றாகவும் விளங்குகின்றது. இவ்வாறு கூட்டணி அமைத்து ஆட்சியமைக்கும் எல்லா நாடுகளிலும் கூட்டணிக் கட்சிகளுக்கு இடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்படுவது வழமையானது. ஏனெனில் வெவ்வேறு கொள்கை கோட்பாடுகளை கொண்டுள்ள கட்சிகள் ஒன்றிணைந்திருப்பதன் வெளிப்பாடே அதுவாகும்.

பாராளுமன்ற ஜனநாயக ஆட்சி முறைமையின் தாயகமாக விளங்கும் பிரித்தானியாவில் கூட பல அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து கூட்டணி ஆட்சி அமைத்த சந்தர்ப்பங்களிலும், உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடாக விளங்கும் இந்தியாவிலும் பல கட்சிகள் இணைந்து கூட்டணி ஆட்சி அமைத்த சந்தர்ப்பங்களிலும் கூட இவ்வாறான கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஏனெனில் ஒவ்வொரு கட்சியும் தம் கொள்கை கோட்பாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தியபடி ஆட்சியில் அங்கம் வகிப்பது சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும்.

அந்த வகையில் இந்நாட்டில், 1956 இல் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் முதன் முதலில் கூட்டணி ஆட்சியமைக்கப்பட்டது. அதேபோன்று 1970_ 77 காலப் பகுதியிலும் கூட்டணி ஆட்சி அமைந்தது. அதன் பின்வந்த காலங்களிலும் இந்நாட்டில் கூட்டணி ஆட்சிகள் அமைந்துள்ளன. அந்த ஆட்சிகளிலும் கருத்து முரண்பாடுகள் இருந்துள்ளன. அக்கருத்து முரண்பாடுகளால் கூட்டணியில் பிளவு ஏற்படவும் இல்லை, ஆட்சி வீழ்ச்சியடையவுமில்லை.

அந்த அடிப்படையில் ஸ்ரீ.ல.பொ. பெரமுன தலைமையிலான அரசியல் அங்கம் வகிக்கும் கூட்டணிக் கட்சிகளின் அங்கத்தவர் ஒரிருவர் மத்தியில் கருத்து முரண்பாடுகள் ஏற்படவே செய்கின்றன. அதற்காக அம்முரண்பாடுகளால் கூட்டணியில் பிளவோ அல்லது அரசாங்கத்தில் பிளவோ ஏற்பட்டு விட்டது என்று அர்த்தமாகாதென வெகுஜன ஊடக அமைச்சர் டளஸ் அழகப்பெரும குறிப்பிட்டிருக்கிறார்.

அதுதான் உண்மை. இந்த அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பெற்றோலிய அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக எதிர்க்கட்சியினால் நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்றத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அப்பிரேரணையை கூட்டணியில் அங்கம் வகிக்கும் எல்லாக் கட்சிகளும் ஒன்றிணைந்தே தோல்வியுறச் செய்தனவேயொழிய, அவர் ஸ்ரீ.ல.பெரமுன அங்கத்தவரற்றவர் என்றபடி செயற்படவில்லை.

அதேபோன்று அரசாங்கத்தின் கூட்டணிக் கட்சிகளின் ஒரிரு அங்கத்தவர்கள் மத்தியில் கருத்து முரண்பாடுகள் நிலவிய போதிலும் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற கூட்டணி கட்சிகளும் அவற்றின் அங்கத்தவர்களும் ஒன்றிணைந்து ஆதரவளித்தனர்.

அதுவே ஜனநாயகத்தின் வெளிப்பாடாகும். ஆகவே கூட்டணி ஆட்சியின் ஜனநாயகப் பெருமானங்களைப் புரிந்து கொள்ளாது மனப்பால் குடிப்பதில் எவ்வித பிரயோசனமும் இல்லை என்பதை எதிரணியினர் புரிந்து கொள்ள வேண்டும். அதுவே இன்றைய தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# பிரண்டிக்ஸ் ஏழாவது தடவையாகவும் ஆண்டின் சிறந்த ஏற்றுமதியாளராக தெரிவு

*இலங்கையின் முன்னணி ஆடை உற்பத்தியாளரான பிரண்டிக்ஸ், ஆண்டின் சிறந்த ஏற்றுமதியாளராக 7ஆவது தடவையாகவும் 2019/20 மற்றும் 2020/21 காலப் பகுதிகளுக்கான 24ஆவது ஜனாதிபதி விருதுகள் வழங்கும் நிகழ்வில் தெரிவு செய்யப்பட்டிருந்தது. 2019/20 காலப் பகுதிக்காக இந்த விருதை பிரண்டிக்ஸ் சுவீகரித்திருந்தது. ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றது. நிறுவனத்தின் 60000 க்கும் அதிகமான ஊழியர்களின் பங்களிப்பினூடாக இந்தக் காலப் பகுதியில் சகல பிரிவுகளிலும் உயர் ஏற்றுமதியாளராக நிறுவனம் தேசிய பொருளாதாரத்துக்கு பங்களிப்புச் செய்திருந்தது.*



*2019/20 காலப் பகுதிக்கான பிரதான விருதுக்கு மேலதிகமாக, பிரண்டிக்ஸ் சுவீகரித்த ஏனைய விருதுகளில் 'Contributor from the Regions to the Export Supply Chain', 'Best Performing Exporter in Emerging Markets' எனும் முக்கிய விருதுகள் மற்றும் 'Best Exporter Award – Apparel – Large Category' எனும் பிரிவு விருதும் அடங்கியிருந்தன.*

*2020/21 காலப்பகுதியில், 'Contributor from the Regions to the Export Supply Chain' எனும் முக்கிய விருதை பிரண்டிக்ஸ் கைப்பற்றிக் கொண்டது. மேலும், பிரண்டிக்ஸின் கூட்டு முயற்சி பங்குதாரரான InQube Global நிறுவனம் முதல் முறையாக 2019/20 ஆண்டுக்கான வளர்ந்து வரும் ஏற்றுமதியாளராக 'Emerging Exporter of the Year' எனும் முக்கிய விருதை சுவீகரித்தது.*

## ஜனாதிபதி தலைமையில் விருது வழங்கும் நிகழ்வு

*பிரண்டிக்ஸ் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி அஷ்ரப் ஓமார் கருத்துத் தெரிவிக்கையில், "பிரண்டிக்ஸ் நிறுவன விழுமியங்களில் மதிப்பு, ஒன்றிணைவு, குழுநிலை செயற்பாடு மற்றும் சிறப்பு போன்ற பெறுமதிகள் உள்ளடங்கியுள்ளன.*

*இவை எமது 60,000 ஊழியர்கள் அடங்கிய அணியை உலகப் புகழ் பெற்ற வர்த்தக நாமங்களுக்கான தீர்வுகளை நாளாந்தம் தயாரிப்பதற்கு ஊக்குவிப்பதாக அமைந்துள்ளது. இன்று ஆடைஉற்பத்தித் துறையின் முன்னோடியாக பிரண்டிக்ஸ் திகழ்வதற்கு வழிகோலியிருந்த பல முயற்சியாளர்களுக்கும் புத்தாக்கமான சிந்தனையாளர்களுக்கும் எமது வெற்றியை நாம் சமர்ப்பிக்கின்றோம். தேசிய பொருளாதாரத்துக்கு பங்களிப்பு வழங்கி, ஆயிரக் கணக்கானவர்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தி, நிலைபேறான அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்வதற்கு பங்களிப்பு வழங்க முடிந்துள்ளதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்" என்றார்.*

*ஏற்றுமதித் துறைக்கும், நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் ஏற்றுமதி நிறுவனங்கள் ஆற்றும் பங்களிப்பை கௌரவித்து ஜனாதிபதியினால் வழங்கப்படும் மிகவும் பெருமைக்குரிய விருதாக ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள் அமைந்துள்ளன.*

*2019/20 மற்றும் 2020/21 காலப்பகுதிகளுக்கான விருதுகள் இரு பிரதான பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்டிருந்ததுடன், 12 ஒட்டுமொத்த விருதுகள் மற்றும், 53 பிரிவு சார் விருதுகளும் ஒவ்வொரு நிதியாண்டுக்காகவும் தயாரிப்புகள் மற்றும் சேவைகளுக்காக வழங்கப்பட்டிருந்தன.*

*'புத்துணர்வான தீர்வுகளை வழங்கும் புத்துணர்வான நாம்' எனும் தொனிப்பொருளுக்கமைய இயங்கும் இலங்கையின் ஆடை தொழிற்துறையைச் சேர்ந்த முன்னணி நிறுவனமாக Brandix திகழ்கின்றது. உலகப் புகழ் பெற்ற வர்த்தக நாமங்களுக்கு 50 வருடங்களுக்கு மேலாக ஆடை உற்பத்திகளை இந்நிறுவனம் வழங்கியுள்ளதுடன், ஒன்பது நாடுகளில் 60,000க்கும் அதிகமான ஊழியர்களைக் கொண்டுள்ளது. பிராந்தியத்தின் நிலைபேறான ஆடை உற்பத்தியாளராகத் திகழும் பயணத்தை முன்னெடுக்கும் Brandix, தனது சகல செயற்பாடுகளிலும் மற்றும் சகல பங்காளர்களிலும் மாற்றத்தை ஊக்குவிக்க எதிர்பார்க்கின்றது.*

*Brandix பற்றி மேலும் அறிந்து கொள்ள www.brandix.com எனும் இணையத்தளத்தைப் பார்க்கவும்.*

# ஒமிக்ரோன் வைரஸிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கு புதிய தடுப்பூசி அவசியம்

*கொரோனா வைரஸ் பரவல் தொடங்கியதில் இருந்து, புதிய மாறுபாடுகள் மற்றும் பிறழ்வுகள் தொடர்ந்து வெளிப்பட்டு வருகின்றன. இதுவரை கண்டறியப்பட்ட மாறுபாடுகளில் டெல்டா மாறுபாடு அனைத்திலும் மிகவும் ஆபத்தானது என நிரூபிக்கப்பட்டுள்ளது. இப்போது புதிய COVID மாறுபாடு Omicron உலகில் கால்பதித்துள்ளது. தென்னாபிரிக்காவில் முதலில் கண்டறியப்பட்ட பி.1.1.529 என்ற இந்த மாறுபாடு மிகவும் ஆபத்தானது எனக் கூறப்படுகிறது. தென்னாபிரிக்காவில் கோவிட் நோயாளிகளின் எண்ணிக்கை திடீரென அதிகரித்து வருவதால், புதிய மாறுபாடு அதிக பரவும் வீதத்தைக் கொண்டுள்ளது என்று நிபுணர்கள் நம்புகின்றனர்.*

*உலக மருத்துவ நிபுணர்கள் சமீபத்தில் இந்த புதிய வைரஸ் பிறழ்வின் பல்வேறு குணங்களைப் பற்றியும், தற்போதுள்ள தடுப்பூசிகளின் முன்னேற்றத்தை அது எவ்வாறு பாதிக்கலாம் என்பதைப் பற்றியும் விவாதித்துள்ளார்கள். உலக சுகாதார நிறுவனம் ஒமிக்ரோனை கவலைக்குரிய மாறுபாடாக அறிவித்துள்ளது. வல்லுநர்கள் இந்த விரைவான தாவலை ஒரு கவலையான காரணியாக பார்க்கிறார்கள். கவலையின் மாறுபாடானது 'பரவுதல் அதிகரிப்பு, மிகவும் கடுமையான நோய்' ஆகிய ஆபத்துகளைக் கொண்டுள்ளது.*

*பெரும்பாலான கொவிட் தடுப்பூசிகள் வைரசின் ஸ்பைக் புரதத்திற்கு எதிராக எதிர்ப்புசக்தியை உருவாக்குவதற்காக உருவாக்கப்பட்டிருப்பதால், ஸ்பைக் புரதத்தில் உள்ள பல பிறழ்வுகள் தடுப்பூசிகளின் செயல்திறன் குறைவதற்கு வழிவகுக்கும். புதிய மாறுபாடு தோன்றிய தென்னாபிரிக்காவில் கொவிட்19 தொற்றாளர்களின் எண்ணிக்கை திடீரென அதிகரித்தது உண்மைதான். ஆனால் ஒமிக்ரோன் அதிகமாக பரவக் கூடியது என்று கூறுவதற்கு எந்தத் தரவுகளும் கிடைக்கவில்லை என்றாலும், அதன் ஸ்பைக் புரதம் அது பரவும் வீதத்தை அதிகரிக்கக் கூடும் என்று நிபுணர்கள் நம்புகின்றனர்.*



*தற்போதைய நி லைவரப்படி, SARsCOV2 வைரஸின் மிகவும் ஆபத்தான விகாரமா க டெல்டா மாறுபாடு தொடர்கிறது. நிபுணர்களின் கூற்றுப்படி, ஓமிக்ரான் மாறுபாட்டிற்கும் டெல்டா விகாரத்திற்கும் இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் எதுவும் இல்லை. காய்ச்சல், தொண்டை வலி, சோர்வு, தலைவலி மற்றும் கடுமையான சந்தர்ப்பங்களில் மூச்சுத் திணறல், மார்பு வலி போன்ற ஒரே மாதிரியான அறிகுறிகளை இரண்டும் வெளிப்படுத்துவதாக நம்பப்படுகிறது. இருப்பினும், WHO இன் கூற்றுப்படி, 'Omicron' உடன் மீண்டும் நோய்த்தொற்று ஏற்படுவதற்கான அதிக ஆபத்து இருக்கலாம் என்று ஆரம்பத் தரவு தெரிவிக்கிறது. அதாவது, இதற்கு முன்பு கொவிட்19 நோயால் பாதிக்கப்பட்டவர்கள் இந்த மாறுபாட்டின் மூலம் எளிதாக மீண்டும் நோய்த்தொற்றுக்கு ஆளாகலாம்.*

## அடுத்த ஆண்டு தொடக்கத்தில் பாவனைக்கு வந்து விடும்

*கொரோனா வைரஸின் பரவலைத் தடுப்பதில் கொவிட் தடுப்பூசிகள் முக்கிய பங்காற்றுவதால் புதிய மாறுபாடுகள் அது சீராகச் செயல்படுவதை கடினமாக்குகின்றன. புதிய கொவிட் மாறுபாடு ஒமிக்ரோன் உடல்நலக் கவலையின் முக்கிய ஆதாரமாக மாறியு ள்ளது, ஏனெனில் இது ஸ்பைக் புரதத்தில் 30+ பிறழ்வுகளை க் கொண்டுள்ளது என்று கூறப்படுகிறது. இது கிடைக்கக் கூடிய COVID தடுப்பூசிகளை குறைவான செயல்திறன் கொண்டதாக மாற்றக் கூடும். தடுப்பூசிகள் வைரஸில் இருக்கும் ஸ்பைக் புரோட்டீன்களைப் பொறுத்து உருவாக்கப்பட்டன என்பதைக் கருத்தில் கொண்டு, அதைக் கண்டறிந்து நடுநிலையாக்க, ஸ்பைக் புரதத்தில் உள்ள பல பிறழ்வுகள் தடுப்பூசிகளுக்கு புதிய மாற்றங்களை அடையாளம் காண்பதை கடினமாக்குகின்றன.*




*புதிய மாறுபாடுகளுக்கு புதிய தடுப்பூசிகள் உருவாக்கப்பட வேண்டுமென்று மருத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள். வைரஸ்கள் மாற்றத்திற்கு உட்பட்டவை என்பதால், SARsCOV2 வைரஸ் வேறுபட்டதல்ல. தற்போதைய நிலவரப்படி, உலகம் முழுவதும் பல கொவிட் வகைகள் உள்ளன. இன்ஃப்ளுயன்ஸா நோய்களைப் போலவே COVID தடுப்பூசிகளையும் புதுப்பிக்க வேண்டிய அவசியம் இருக்கலாம் என்று நிபுணர்கள் நம்புகின்றனர்.*

*இந்நிலையில் ஒமிக் ரோன் வகை தடுப்பூ சி அடுத்த ஆண்டு தொடக்கத்தில் தயாராக இருக்கும் என்று மொடர்னா அறிவித்துள்ளது. ஆனால் தடுப்பூசிகளைத் தவிர, சுகாதார வல்லுநர்கள் மற்றும் நிபுணர்கள் மக்கள் விழிப்புடன் இருக்க அறிவுறுத்துகிறார்கள். சுகாதார அதிகாரிகள் கண்காணிப்பை விரிவுபடுத்த வேண்டும், கொவிட் பரிசோதனை நிலையங்களை அதிகரிக்க வேண்டும். மக்கள் முகக்கவசம் அணிவது, சமூக இடைவெளியை பராமரிப்பது மற்றும் ஆரோக்கியமான கை சுகாதாரத்தை கடைப்பிடிப்பது போன்றவற்றை செய்ய வேண்டும்.*

*புதிதாகப் பரவி வரும் வீரியமிக்க ஒமிக் ரோன் , ஏற்கெனவே கொரோனா பாதிப்பில் இருந்து மீண்டவர்களை குறிவைத்து தாக்குவதாக தகவல் வெளியாகி உள்ளது.ஒமிக்ரோன் வைரஸ் தாக்கியவர்களுக்கு சோர்வு, இலேசான தசை வலி, தொண்டை அரிப்பு, வரட்டு இருமல் மற்றும் இலேசான காய்ச்சல் அறிகுறிகள் தென்படும் என தென்னாபிரிக்க மருத்துவர்கள் கூறியுள்ளனர்.*

*இந்த வைரஸ் தற்போது 17 நாடுகளில் பரவியுள்ளதாக கூறப்படுகிறது. இது மிகவும் கவலையளிக்கும் விடயமாகும். ஒமிக் ரோன் வைரஸ் விரைவாக ஒருவரிடம் இருந்து மற்றொருவருக்கு பரவும் தன்மை உடையது என்றும் தடுப்பூசிகள் இந்த வைரஸுக்கு எதிராக குறைந்த அளவே செயலாற்றுவதாகவும் கூறப்படுகிறது. இந்த வைரஸின் காரணமாக உலக நாடுகள் பலவும் அச்சத்துக்கு ஆளாகியுள்ளன. கனடா, அவுஸ்திரேலியா, ஜெர்மனி, இங்கிலாந்து உள்ளிட்ட 12 நாடுகளில் ஒமிக் ரோன் கொரோனா வைரஸ் பரவியுள்ளது.*

# மட்டக்களப்பு மாவட்டத்தில் எல்லை நிர்ணய ஒழுங்கீனங்களுக்கு தீர்வு காணப்பட வேண்டும்

**மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த காலத்தில் இடம்பெற்ற எல்லை நிர்ணயம் தொடர்பான ஒழுங்கீனங்கள் மற்றும் காணிப்பகிர்வில் இடம்பெற்ற அநீதிகளுக்கு முடிவு கட்டுவதுடன் ஆணைக்குழு ஒன்றை நியமித்து இந்த செய்றபாடுகளுடன் தொடர்புள்ளவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நசீர் அஹமட் பாராளுமன்றத்தில் வேண்டுகோள் விடுத்தார்.**

## ஹாபிஸ் நசீர் அஹமட் எம்.பி வேண்டுகோள்

பாராளுமன்றத்தில் விசேட பிரேரணை ஒன்றை சமர்ப்பித்து உரையாற்றுகையில் அவர் கூறியதாவது:

மட்டக்களப்பு மாவட்டத்தில் உருவாக்கப்பட்ட 12 பிரதேச செயலகங்களில் 9 தமிழ் பெரும்பான்மை பிரதேச செயலகங்களாகவும் 3 முஸ்லிம் பெரும்பான்மை பிரதேச செயலகங்களாகவும் அமைக்கப்பட்டன. இதன் போது பிரதேச செயலக வாரியாக மட்டக்களப்பு மாவட்டத்தில் சனத்தொகை விகிதாசாரத்திற்கு ஏற்ப காணி பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து நிருவாகத்தில் முஸ்லிம் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வந்துள்ளனர். இந்தக் கால கட்டத்திலே புலிகளின் ஆதிக்கத்தின் மத்தியில் அவர்கள் நிர்வாக ரீதியில் பல இன்னல்களையும் தடைகளையும் அனுபவித்து வந்தனர். அதன் பின்பு ஜூன் மாதம் 03ஆம் திகதி1999 ஆம் ஆண்டு மறைந்த ரட்ணசிறி விக்ரமநாயக்க உள்ளூராட்சி அமைச்சராக இருந்த போது பனம்பாலன ஆணைக்குழு ஜனாதிபதியாகவிருந்த சந்திரிகாவினால் அமைக்கப்பட்டது. அந்த எல்லை நிர்ணயக்குழுவின் அறிக்கை 2000ம் ஆண்டு 13ம் திகதி அஷ்ரப் மரணிப்பதற்கு 02 மாதத்திற்கு முன்பு அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது.



இதன்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட இரண்டு பிரதேச செயலகங்களையும் தவிர மற்றைய 06 பிரதேச செயலாளர் பிரிவுகளும் எல்லை நிர்ணயம் செய்யப்பட்டு வர்த்தமானியில் பிரசுரம் செய்யப்பட்டது. ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்திலே பரிந்துரைக்கப்பட்ட கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகம், கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலகம் ஆகிய இந்த இரண்டு பிரதேச செயலகங்களும் வர்த்தமானி செய்யப்படவில்லை.

பனம்பாலன ஆணைக்குழவின் சிபாரிசு மட்டக்களப்பு மாவட்டத்தில் பூரணமாக நடைமுறைப்படுத்தப்பட்டால் மாவட்டத்தில் காணப்படும் இன விகிதாசாரத்திற்கு ஏற்ப காணி பகிர்ந்தளிக்கப்படும். (2020 ஆண்டின் மாவட்டச் செயலகத்தின் புள்ளி விபரவியல் கையேட்டின் தகவல்களின் படி)

ஆனால் தற்போது மட்டக்களப்பு மாவட்ட அரச நிர்வாகத்தின் விளைவாக மாவட்ட முஸ்லிம்களின் காணிகள் கபளீகரம் செய்யப்பட்டுள்ளன. இந்த சட்டவிரோதமான செயற்பாடு நிறுத்தப்பட வேண்டும். கடந்த கால தலைமைகள் விட்ட தவறுகள் ஆகியவற்றின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த உயரிய சபை மூலமும் இதற்கு பொறுப்பாக இருக்கின்ற அமைச்சரின் ஊடாகவும் தீர்வு கிடைக்க வேண்டும் என நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

இந்த மாவட்டத்தில் முன்னர் பதவி வகித்த அரசியல் தலைமைகள் காலப் பகுதியிலாவது இந்த பன்னம்பலான ஆணைக்குழுவின் பரிந்துரையை வர்ததமானி வெளியிடப்படுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கடந்த கால தலைமைகள் முஸ்லிம் பிரதேசங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைக் கண்டு கொள்ளாமல் இருந்ததா? அல்லது தடுத்து நிறுத்த திராணியற்று இருந்ததா? என்ற சந்தேகம் எமக்கு எழுந்துள்ளது. இந்த மாவட்டத்தின் சட்டவிரோத நில அபகரிப்புக்களை இவ்வாறு எல்லோரும் பார்த்துக் கொண்டு ஏன் இருந்தார்கள் என்று எனக்கு விளங்கவில்லை. யாருக்கும் பயந்து இதனை பேசாமல் இருக்க வேண்டிய தேவை இல்லை. ஓர் இனத்திற்கு ஓரவஞ்சனை காட்டப்படுவது இனியும் பொறுத்துக் கொள்ள முடியாது. அவசரமாக இதனை முடித்து வைத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்களின் இனப்பரம்பலுக்கேற்ப நிலபுலங்களை நீதியாக வழங்கி வைக்க இந்த உயரிய சபையில் பொறுப்பு வாய்ந்த மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் கோரிக்கை விடுக்கிறேன்.

# போதைப் பழக்கத்தில் சிக்கி சீரழிந்து விடாமல் மாணவர் சமுதாயத்தை காப்பாற்ற வேண்டும்!

**மாணவர்கள் போதைக்கு அடிமையாகும் பிரச்சினை இன்று பலராலும் பேசப்படுகின்றது. திடகாத்திரமாக ஆரோக்கியமாக, ஆளுமையுள்ளவர்களாக வளர்வதற்கு போதை மற்றும் தீய நடத்தைகள் தடையாக இருக்கின்றன என்பதை மாணவர்கள் உணராமல் இருக்கின்றார்கள். எந்தவொன்றையும் அனுபவித்துப் பார்க்க வேண்டும் என்ற ஆவலும் ஆசையும் சில நேரம் அவர்களது அழிவுக்கே காரணமாகி விடுகின்றது. நண்பர்களுடன் பழகும் போது சிகரட் புகைத்தல், மதுபானம் அருந்துதல் என்ற பழக்கத்துடன் ஆரம்பமாகி இறுதியில் எல்லா போதைக்கும் அடிமையாகி விடுகின்றார்கள்.**



போதை என்றால் என்ன? அதன் விபரீதம் எப்படிப்பட்டது என்பதை அறியாமலேயே போதை பாவனையில் மாணவர்கள் ஈடுபடுகின்றார்கள். போதை என்பது தன்னிலை மறக்கச் செய்தல், உடல்உள பாதிப்புக்களை ஏற்படுத்தல் என்பனவாகும். போதையை பயன்படுத்தியதும் ஒருவன் தனது அறிவை இழக்கின்றான், உடல் பலவீனமடைகின்றது, உள்ளம் கெட்டு விடுகின்றது, தன்னால் உறுதியாக நிற்க முடியாமல் ஆடி அசைந்து விழுகின்றான். அதன் பின்னர் தனக்கு ஏற்படும் எந்தவொரு விடயத்தைப் பற்றியும் அறியாமல் இருக்கின்றான்.

மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் போதை பாவனைக்கு ஆளாகுவதற்குப் பிரதான காரணங்கள் வீட்டுச் சூழல், சமூக சூழல், குடும்பப் பிரச்சினை, போட்டி சூழலுக்கு முகம் கொடுக்க முடியாமை, ஊடகங்கள் போன்றவையாகும்.

வீட்டுச் சூழலிருந்து பல பிள்ளைகள் போதைப் பாவனைக்கு ஆளாக்குகின்றார்கள். தந்தை சிகரட் புகைப்பவராக இருந்தால், அந்த சிகரட்டை வாங்குவதற்கு பிள்ளையிடம் பணம் கொடுத்து வாங்கிக் கொள்கிறார். அந்தப் பிள்ளை தந்தையுடைய புகைத்தலைப் பார்த்து நாளடைவில் அதனை திருட்டுத்தனமாக புகைக்க ஆரம்பிக்கின்றது. வீட்டில் விருந்துபசாரத்தின் போது மது பாவிக்கப்படும் போது பிள்ளையும் அதற்கு ஈர்க்கப்படுகின்றது.

வீட்டுச் சூழலில் கண்டு பழகிய போதை பொருட்களை பிள்ளைகள் நாளடைவில் சமூக சூழலில் சக தோழர்களுடன் பழகிக் கொள்ள முனைக்கின்றது. சிலவேளை வீட்டுச் சூழலில் அவை இல்லாவிட்டாலும் சமூக சூழலில் அவை விற்பனைக்கு இருக்குமாயின் போதைக்கு ஆளாகி விடுவார்கள்.

குடும்பத்தில் எல்லாப் பிள்ளைகளிடமும் பெற்றோர் சரிசமமான அன்பு, பாசம் காட்டி அரவணைக்க வேண்டும். தாழ்வு மனப்பான்மை வளர விடாமல் காத்துக் கொள்ள வேண்டும். பெற்றோரிடம் உரிய அன்பும் அரவணைப்பும் கிடைக்காத சந்தரப்பத்தில் பிள்ளைகள் தங்களுக்கு ஏற்பட்ட கவலையை போக்க, போதையை பயன்படுத்தி தீர்வு காண முனைகின்றனர். அதுபோல் பெற்றோரிடையே பிரச்சினைகள் ஏற்படுமாயின் அல்லது பெற்றோர் பிரிந்து வாழ்வார்களாயின் அதனால் பாதிப்படைபவர்கள் பிள்ளைகள் ஆவர். அப்பிள்ளைகள் விரக்தி காரணமாக போதைக்கு அடிமையாகுவதற்கு இடமுண்டு.

பாடசாலை வாழ்க்கையில் ஏற்படும் சவால்களுக்கும் போட்டிகளுக்கும் முகம் கொடுக்க முடியாமல் தோல்வி மனப்பான்மைக்கு ஆளாகும் போது சிலர் போதையை நாடுகின்றனர்.

மேலே கூறப்பட்ட காரணிகளுக்கு உடந்தையாக இருப்பதே ஊடகங்களாகும்.காதல் தோல்வி, குடும்பத் தகராறு, வாழ்வில் தோல்வி, வேலையின்மை, விரக்தி, நண்பர்களுடன் விரிசல் போன்ற காட்சிகளில் கதாநாயகன் நாடக் கூடிய முதல் தீர்வு சிகரெட் புகைப்பது, மது அருந்துவது என்பதுதான் இந்த சினிமா மற்றும் நாடகங்களில் காட்டப்படுகின்றது.

> **இளவயதினரின் நடத்தைக் கோலத்தில் ஏற்படும் சிறுசிறு மாற்றங்களை அவதானிப்பதும், அதற்கான காரணங்களை தாமதமின்றிக் கண்டறிந்து உடன் தீர்வு காண்பதும் பெற்றோரின் முக்கிய கடமை**

பிள்ளைகள், மாணவர்கள் மற்றும் பெரியவர்கள் போதைக்கு அடிமையாகும் போது குடும்பத்திலும் சமூகத்திலும் பல்வேறு பிரச்சினைகள் உருவாகின்றன. குடும்பத்திற்குள் ஒற்றுமை குலைந்து விடுகின்றது. அவநம்பிக்கை ஏற்படுகின்றது. முரண்பாடுகள் தோற்றம் பெறுகின்றன. வீணான செலவுகளால் வறுமை ஏற்படுகின்றது. குடும்பத்திற்கென்று இருந்த மரியாதை, கௌரவம் இழக்கப்படுகின்றது. இதனால் மனச் சோர்வு ஏற்பட்டு விரக்தி நிலைக்குச் செல்கின்றனர். பிள்ளைகளுடைய எதிர்கால கனவுகள், இலட்சியங்கள் நாசமாகின்றன. புத்தகங்களை சுமந்து செல்ல வேண்டியவர்கள் பல்வேறுபட்ட நோய்களை சுமந்தவர்களாக நடமாட ஆரம்பிக்கின்றார்கள்.

போதைக்கு அடிமையானவர்களை அடையாளம் காணும் வழி:

பிள்ளைகள் பழகக் கூடிய புதிய, பழைய நண்பர்களை அடையாளம் காண வேண்டும். ஆரம்பத்தில் பிள்ளை பழகிய நண்பர்கள் யார்? அவர்களுடன் மேற்கொள்ளும் நட்பு எத்தகையது? ஏற்பட்டு வரும் மாற்றம் எத்தகையது? என்பதையெல்லாம் பெற்றோர் அறிய வேண்டும். அவர்களது செல்போன் பாவனை எத்தகையது? அதிகமாக பேசுபவர்கள் யார்? என்பதையும் அறிய வேண்டும். சிலவேளை பிள்ளை அல்லது மாணவன் பழைய நண்பர்களின் நட்பு மோசமானது எனக் கருதி புதிய நண்பர்களை தேடிக் கொள்ளலாம். அல்லது பழைய நண்பர்களின் தொடர்பை விட புதிய நண்பர்களின் தொடர்பால் திசை மாறியும் போகலாம். இதில் பெற்றோர் அவதானமாகச் செயற்பட வேண்டும்.

பாடசாலைக்கு போகும் நேரம், மேலதிக வகுப்புக்கு போய் வரும் நேரம், இதில் ஏற்படும் மாற்றங்கள், பொழுதுபோக்குகளில் இருந்து ஒதுங்கிக் கொள்வது, நல்ல பழக்க வழக்கங்களை குறைத்துக் கொள்வது, விருப்பான நல்ல விடயங்களில் ஆர்வம் குறைந்து வருவது, விளையாட்டில் நாட்டமில்லாமல், சுத்தம் பேணாமல் இருப்பது, வாயில் துர்வாடை வீசுவது போன்ற விடயங்கள் காணப்படுமாயின் பெற்றார் உடனே கவனம் செலுத்த வேண்டும்.

வீட்டில் சின்னச் சின்னப் பொருட்கள் அல்லது பணம் காணாமல் போவது, படிப்பில் ஆர்வம் குறைவது, அடிக்கடி மறதி ஏற்படுவது, பதற்றமாகவும் ஆக்ரோக்ஷமாகவும் நடந்து கொள்வது போன்ற நடத்தைகள் காணப்படுமானால் பெற்றோர் கண்டிப்பாக பிள்ளைகள் விடயத்தில் மிக அவதானம் செலுத்த வேண்டும். பிள்ளையின் மீது அதிக அன்பு காட்டி ஏமாந்து போகாமலும், அதிக கோபத்தையும் வெறுப்பையும் காட்டி விலகல் ஏற்பட்டு விடாமலும் அவதானத்துடன் நடந்து பிள்ளையின் வாழ்வை சீர் செய்ய முனைய வேண்டும். எல்லா பிரச்சினைக்கும் தீர்வு உண்டு. அதனை சரியாக தேடிக் கொள்ளவே வழி காண வேண்டும்.



**சி.அருள்நேசன்...**
(கல்வியியல் பட்டதாரி, கிழக்கு பல்கலைக்கழகம்)

# மட்டக்களப்பும் நானும்

**கிழக்கு மாகாணம் நீண்டதொரு நிலப்பரப்பு. திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியது.**

வடக்கில் மட்டுவில் என்றொரு கிராமம் உண்டு. அதனைச் சுருக்கமாக 'மட்டு' என்றும் அழைப்பர். சில ஊடகங்கள் மட்டக்களப்பைக் குறிக்கும் பொழுது 'மட்டு மாகாணத்தில்' என்கின்றனர். இந்த குழறுபடியை நாம் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

கொலனோலியவாதிகளான டச்சுக்காரர், மட்டக்களப்பு என்பதை தமது மொழியில் *Batticaloa* என்றார்கள். பின்பு அது *Batti* என்றாயிற்று.

அண்மையில் தொலைக்காட்சியில், அறிக்கையாளர் (*Presenter*) மட்டக்களப்பு நேயர் ஒருவரின் பாட்டு ஒன்றை போடும் பொழுது, 'அந்த நேயர் *Batti* யைச் சேர்ந்தவர்' என்றார். தமிழ்ப் பெயர்களை, இடங்களைச் சரியாக உச்சரிக்கத் தெரியாதவர்களும், மின்னியக்க ஊடகங்களில் வலம் வருகின்றனர்.

இது போலவே, யாழ்ப்பாணம் என்ற தமிழ்ப் பெயரைக் கூறாமல் தாங்கள் *Jafna* வைச் சேர்ந்தவர்கள் என்று கூறுகின்றனர். இது வேடிக்கை அல்லவா?

மட்டக்களப்பு பிரதேசம் பூர்வீகக் குடியிருப்புக் கிராமங்களை உள்ளடக்கியது. தொல்பொருள் கண்டுபிடிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 13ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இருந்து வந்த கல்வெட்டுக்கள் அதிகம். இவ்விதம் இலங்கையின் வடமாகாணத்திலும் நிறைய உள்ளன.

இனி நான், மட்டக்களப்பில் 11 ஆண்டுகள் வாழ்ந்த செய்தியைக் குறிப்பிட விரும்புகிறேன். எனது தந்தைவழி உறவினர்கள், திருகோணமலையைச் சேர்ந்தவர்கள். எனது தாய்வழி உறவினர்கள் மட்டக்களப்பு மாநகரத்தைச் சேர்ந்தவர்கள். எனது தந்தையாரின் உறவினர்கள் வடக்கில் கந்தரோடை என்ற ஆய்வுநிலை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள்.

**அலசல்**
**கே.எஸ். சிவகுமாரன்**

எனது தாய்வழி உறவினர்கள் யாழ்ப்பாணம் நல்லூர் அத்தியடியைச் சேர்ந்தவர்கள். எனது பாட்டனார் ஒரு புகையிலைத் தரகர்.



டச்சுக் காலத்தில் கேரளாவுக்கும், யாழ்ப்பாணத்திற்குமிடையே புகையிலை வியாபாரம் நடந்தது. எனது அம்மம்மா கேரளத்தைச் சேர்ந்தவர். ஆகையால, நான் ஒரு *Hybrid*. அதாவது *Dna* சோதனையில், நாம்அனைவருமே கலப்பு இரத்தம் கொண்டவர்கள்.

★ நான் முதற் தடவையாக 1980 அளவில் தமிழகம் சென்ற பொழுது திருச்சிக்குத்தான் சென்றேன். அங்கிருந்து சிவகங்கைக்கு பஸ் மூலம் போய், கவிஞர் மீராவைச் சந்தித்தேன். அவர் ஒரு மனித மாணிக்கம். அவர் தனது துவிச்சக்கரவண்டியில் எனது பாரமான சூட்கேசை ஏற்றினார். இருவரும் நடந்து சென்றோம். மதுரைக்கான பஸ்ஸில் என்னை ஏற்றி விட்டார். அங்கு மோகன் வீட்டில் சமையல் ருசி. அவர்கள் பிராமணக் குடும்பத்தினர்.

எனக்கு பெயர் ஞாபகமில்லை. இரு மதுரை எழுத்தாள நண்பர்களும், நானும் திருநெல்வேலி வழியாக நாகர்கோவிலுக்குச் சென்றோம். சுந்தரராமசாமி அவர்களின் இல்லத்திற்குப் போய் அவ்வீட்டில் தங்கியிருந்தேன்.

சுந்தர ராமசாமி அவர்கள் 'காகம்' என்ற அமைப்பில் என்னைச் சந்திப்பதற்காக எழுத்தாளர் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தார். அங்கு தேவசகாய குமார் உட்பட பல நாகர்கோவில் எழுத்தாள நண்பர்கள் வந்திருந்தனர். அவர்கள் விடைபெற்றுப் போகும் போது "நாங்கள் பொயிட்டு வரட்டே" என்று கூறினர். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. "நீங்கள் யாழ்ப்பாணமா?" என்று நான் வினவிய போது "இல்லை" என்றார்கள்.

தமிழகத்திற்கும் கேரளாவுக்கும் இடையே தான் நாகர்கோவில் இருக்கிறது. இது காட்டுவது என்னவென்றால், யாழ்ப்பாண மக்களில் பலர் நாகர்கோவில் பகுதியிலிருந்து வந்தவர்கள் என்பதாகும்.

தமிழக எழுத்தாளர்களை நான் முன்பின் அறிந்திருக்கிவில்லை. அவர்களிற் பலர், என்னை இலங்கை வானொலி மூலம் அறந்திருந்தனர். சுந்தரராமசாமி அவர்கள் கூட என்னை வானொலி நிகழ்ச்சிகள் மூலம் அறிந்து வைத்திருந்தார்.

★ இலங்கையின் கொழும்பு, பேராதனை, கண்டி, காலி, கதிர்காமம், கல்முனை, அக்கரைப்பற்று, ஏறாவூர் போன்ற இடங்களுக்குச் சென்றிருக்கிறேன். மாலைதீவு மாலே, ஓமான் மஸ்கட், இந்தியாவின் திருச்சி, மதுரை, சென்னை, புதுடில்லி, கொல்கொத்தா, உடைப்பூர், மும்பாய், ராஜஸ்தான், பெங்களூர், மைசூர், கோயம்புத்தூ ர், சேலம் போன்ற இடங்களுக்கு ம் போய் வந்துள்ளேன். பின்பு கலிபோர்னியா, நியூயோர்க், சிகாகோ, சின்சினாட்டி, தைவான், சிங்கப்பூர், மலேசியா, டோக்கியோ போன்ற இடங்களில் நான் பெற்ற அனுபவங்கள் ஏராளம். ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற அடிப்படையில்தான் எனது பார்வைகள் அமைகின்றன.

## விசேட அமைச்சுசார்... 03ஆம் பக்கத் தொடர்

அமைச்சு, திறன்கள் அபிவிருத்தி, தொழில்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு, இலங்கை பொலிஸ், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை, அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம், லிட்ரோ எரிவாயு நிறுவனம், லாஃப்ஸ் எரிவாயு நிறுவனம், இலங்கை தரநிர்ணய கட்டளைகள் நிறுவனம், இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டுக்கான தராதர அங்கீகார சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், எரிசக்தி அமைச்சு மற்றும் அரச பகுப்பாய்வுத் திணைக்களம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர். இது தவிரவும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் டபிள்யூ.டி.டபிள்யூ.ஜயதிலக மற்றும் மொரட்டுவை பல்கலைக்கழகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பேராசிரியர்.ஷாந்த வல்பொலகே, பெற்றோலியத்துறை நிபுணர் நிமல்.டி.சில்வா ஆகியோரும் இக்கூட்டத்தில் பங்கெடுத்திருந்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் பல்வேறு கேள்விகளை முன்வைத்திருந்ததுடன் எழுத்துமூலம் அவற்றுக்குப் பதில் வழங்குமாறும் கோரிக்கை விடுத்தார்.

எரிவாயு சிலிண்டர்களில் ஏற்படும் வெடிப்புச் சம்பவங்கள் குறித்து அனைத்துத் தரப்பினரினதும் கருத்துக்களும் பெறப்பட்டன.

## நவம்பர் 29 சம்பவத்திற்கு... 03ஆம் பக்கத் தொடர்

மின்சாரசபை ஊழியர்களே இதற்கு காரணம் என சிலர் முறைப்பாடு செய்கின்றனர் என அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை இது வழமையான விடயம் என சிலர் தெரிவித்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது பாரதூரமான விடயம். இது குறித்து விசாரணைகள் இடம்பெற வேண்டும் என பொதுமக்கள், ஊழியர்கள், அதிகாரிகள் என பலர் வேண்டுகோள் விடுத்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இலங்கை மின்சார சபையின் தலைவர் என்ற வகையில் எனக்கு விசாரணைகளை மேற்கொள்வதற்கான அதிகாரம் இல்லை. இதனால் நான் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழ் முற்போக்கு கூட்டணி...

அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான கடிதத்தை தேர்தல் ஆணைக்குழு ஆணையாளர் நிமல் புஞ்சிஹேவா, தமிழ் முற்போக்கு கூட்டணியின் செயலாளர் சந்திரா சாப்டருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இதுபற்றி கூட்டணி தலைவர் மனோ எம்பி ஊடகங்களுக்கு கூறியுள்ளதாவது,

2015 வருடம் ஜூன் 3ம் திகதி கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில், ஜனநாயக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய முன்னணி, மலையக மக்கள் முன்னணி ஆகிய மூன்று கட்சி தலைவர்களால் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் முற்போக்கு கூட்டணி இன்று ஆறு ஆண்டுகளை கடந்த நிலையில், இடையில் இரண்டு பாராளுமன்ற தேர்தல்கள், ஒரு ஜனாதிபதி தேர்தல், ஒரு உள்ளூராட்சி மன்ற தேர்தல் ஆகியவற்றை வெற்றிகரமாக எதிர்கொண்டு இந்நாட்டின் தேசிய அரங்கில் தவிர்க்க முடியாத ஒரு அரசியல் இயக்கமாக வளர்ந்து, இன்று தேசிய தேர்தல் ஆணைக்குழுவினால் அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளோம். தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள், தமிழ் பேசும் மக்களை பிரதிநிதித்துவம் கட்சிகள், தேசிய அரங்கில் ஒன்றுசேர வேண்டும் என்ற பேரவா இன்று தமிழ் முஸ்லிம் மக்கள் மனங்களில் ஆழமாக வேரூன்றி இருப்பதை நானறிவேன். எமது மக்களின் இந்த மன உணர்வுக்கு உயிர் கொடுத்து முழு நாட்டுக்கும் முன்மாதிரியாக நாம் இன்று நிற்கிறோம். “ஒற்றுமை நிலைக்க வேண்டும்” என எதிர்பார்த்த பெருந்திரளான மக்கள் மத்தியில், இது “தேர்தல் வரையிலான உறவு”, ஆகவே தேர்தல்கள் முடிந்த பின் உடைந்து விடும், உடைய வேண்டும் என்று எதிர்பார்த்த வினோதமானவர்களும் நம் மத்தியில் இருந்தார்கள், இருக்கிறார்கள். அவர்களை நாம் இன்று ஏமாற்றி இருக்கிறோம் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துகொள்கிறேன் என்றார்.

## நாட்டில் HIV நோயாளர்... 03ஆம் பக்கத் தொடர்

2020 ஆம் ஆண்டில், நாட்டில் 363 புதிய எயிட்ஸ் நோயாளிகள் இனங்காணப்பட்டதாகவும் 2019 இல் பதிவான நோயாளிகளின் எண்ணிக்கை 439 ஆகும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## முதலாம் தவணைகள்...

கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைவாக 2021ஆம் ஆண்டின் பாடசாலைகளின் மூன்றாம் தவணை 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. 2021 ஆம் ஆண்டுக்கான பாடசாலை பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் அரச பாடசாலைகள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் பாடசாலை தவணை முடிவடைவது தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா கடந்த 26 ஆம் திகதி விடுத்துள்ள சுற்றறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள், மாகாண கல்வி செயலாளர்கள், மாகாண, வலய மற்றும் பிரதேச கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்களுக்கும் ,பிரிவேனாக்களுக்கும் இந்த சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. அதன்படி, 2021 ஆம் ஆண்டிற்கானதரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, 2022 ஜனவரி மாதம் 22 ஆம் திகதி நடைபெறும். க.பொ.த உயர்தரப் பரீட்சை பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. க.பொ.த சாதாரண தரப் பரீட்சை மே மாதம் 23 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 1 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் 10 மற்றும் 11 ஆம் வகுப்புகளின் கற்றல் மற்றும் கற்பித்தல் செயல்முறையை நடைமுறைப்படுத்துவதற்கான அத்தியாவசிய கற்றல் உள்ளடக்கம் குறித்த வழிகாட்டுதல்களில் வெளியிடப்பட்ட ED/01/44/01/012 மற்றும் 2021.11.09 திகதியிட்ட கடிதம் இரத்து செய்யப்படும். தற்போதைய தரங்களில் உரிய பாடத்திட்டங்களை உள்ளடக்குவதற்கு போதிய கால அவகாசம் உள்ளதால், அந்தப் பாடத்திட்டங்களை முழுமையாக உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இந்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2021 கிறிஸ்துமஸ் பண்டிகைக்காக அனைத்து பாடசாலைகளும் டிசம்பர் மாதம் 23 ஆம் திகதி அன்று விடுமுறை வழங்கப்படும். அந்த விடுமுறையின் பின்னர் டிசம்பர் மாதம் 27ம் திகதி பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும். க.பொ.த உயர்தரப் பரீட்சையை நடத்துவதற்காக அனைத்துப் பாடசாலைகளும் 2022 பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி விடுமுறை வழங்கப்படும். எவ்வாறாயினும், இந்த பரீட்சையை நடத்துவதில் ஆரம்ப பிரிவு வகுப்புகளுக்கு விடுமுறை வழங்காமல் இருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. க.பொ.த உயர்தரப் பரீட்சை முடிவடைந்ததன் பின்னர் மார்ச் மாதம் 07 ஆம் திகதி பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும். சித்திரை புத்தாண்டுக்காக ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி வரை பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படும். முஸ்லிம்களுக்கான நோன்பு காலங்களில் ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதி முதல் மே மாதம் 3 ஆம் திகதி வரை முஸ்லிம் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டு, மே மாதம் 4 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படும். 2021 க.பொ.த க.பொ.த சாதாரணதர மாணவர்களின் கல்வியாண்டு 2022 ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

## வாகனங்களின் விலை... 03ஆம் பக்கத் தொடர்

இதனை மாருதி சுஸுகி மற்றும் மஹேந்திரா நிறுவனங்களின் தலைவர்கள் உறுதி செய்துள்ளனர்.இதனிடையே, வாகன விலை உயர்வு, சந்தையில் வாகனங்களின் விலையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் என்று மஹிந்திரா நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி வீஜய் நக்ரா தெரிவித்துள்ளார்.

## நாவலர் கலாசார மண்டபம்... 03ஆம் பக்கத் தொடர்

வழிமுறைகள், நாவலர் கலாசார மண்டபத்தின் புனரைமைப்பு மற்றும் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் யாழ் மாநகர சபை இணைந்து கூட்டு முயற்சியில் நாவலர் கலாசார மண்டபம் தொடர்பான பணிகளை முன்னெடுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக, புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்களுக்கான அமைச்சர் பிரதமர் மகிந்த ராஜபக்சவின் இந்து மத விவகாரங்களுக்கான இணைப்பாளர் கலாநிதி இராமச் சந்திரக் குருக்கள் பாபு சர்மா மற்றும் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு. அ.உமாமகேஸ்வரன் ஆகியோர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அமைச்சின் அலுவலகத்தில் சந்தித்தனர். இந்த வேளையிலே நாவலர் கலாசார மண்டபம் தொடர்பாகப் பிரஸ்தாபிக்கப்பட்ட வேளை மேற்படி விடயத்தினைத் தெரிவித்தார்.

மேலும், இந்த விடயம் தொடர்பாகக் கூறுகையில், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு முழு உரிமையுடைய நாவலர் கலாசார மண்டபத்தைத் தற்போது யாழ்.மாநகர சபை நிர்வாகமே பராமரித்து வருகின்ற நிலையில், சில முரண்பாடுகள் நிலவிய போதும் அதனை இரு நிர்வாகமும் இணைந்து பராமரிப்பது தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானத்தைப் பெரிதும் வரவேற்கிறேன் என்றார்.

எதிர்வரும் ஆண்டு நாவலரின் இருநூறாவது பிறந்த ஆண்டு. இந்த ஆண்டிலே புதுப்பொலிவோடு கூடியதாகச் செயற்பாடுகள் அமையவேண்டும் என்றும் அதற்குக் கிடைத்திருக்கின்ற இந்த வாய்ப்பினைச் சிறந்த முறையிலே பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும், சைவ சமய மறுமலர்ச்சியின் தந்தையான நாவலர் பெருமானுக்கு இப்படி ஒரு விழா எடுப்பதற்கும் வரப்போகின்ற ஆண்டினை நாவலர் ஆண்டாகப் பிரகடனம் செய்வதற்கும் தயாராகவுள்ள நாட்டின் பிரதமர் மகிந்த ராஜபக்ச அவர்களுக்கும் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம் என்றும் இந்தக் கட்டத்தில் நிலையறிந்து கூட்டாக இணைந்து செயற்படுவதற்கான தீர்மானத்திற்கு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்துக்கும் யாழ். மாநகர சபைக்கும் எனது பாராட்டுகள் என்று தெரிவித்தார்.

## அடுத்த 15 நாட்களுக்கு... 03ஆம் பக்கத் தொடர்

அங்காடிகள் ஒரே நேரத்தில் மூன்றில் ஒரு பகுதியினர் மாத்திரமே உட் செல்ல முடியும்.

சிகை அலங்கார நிலையங்களுக்கு முன் அனுமதி பெற்று நேரத்தை ஒதுக்கிக் கொண்டு செல்ல வேண்டும். பொருளாதார மத்திய நிலையங்கள் , வாராந்த சந்தைகள், நடமாடும் வியாபாரிகள் உரிய வழிகாட்டல்களை பின்பற்றி அதன்படி செயற்பட வேண்டும்.

மத வழிபாட்டு ஸ்தலங்களில் பக்தர்கள் சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டல்களை பின்பற்ற வேண்டும். சம்மேளனங்களை நடத்தும் போது சுகாதார வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும் என்பதோடு , இவற்றுக்கு அதிகபட்சம் 150 பேர் மாத்திரமே கலந்து கொள்ள முடியும். கல்விப் பொதுத் தராதர சாதாரணதரம் மற்றும் உயர்தர பரீட்சைகளுக்காக தோற்றவுள்ள மாணவர்களுக்காக மாத்திரம் மேலதிக வகுப்புக்களை நடத்த முடியும். இதன் போது 50 சதவீதமானோர் மாத்திரமே கலந்து கொள்ள முடியும். இவை தவிர தொழிற்சாலைகளிலும் சுகாதார விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எரிவாயு சிலிண்டர் வெடிப்பதை தடுக்க...

என்பது தவறான கருத்தாகும்.

எரிவாயு சிலிண்டரில் கசிகிறதா என்பதைப் பரிசோதனை செய்து பார்க்க சீல் பொறிக்கப்பட்ட பகுதியை அகற்றுவதற்கு முன்னர் சீல் பொறிக்கப்பட்டுள்ள சுற்றுப்பகுதிக்கு சவக்கார நுரைகளை விசிற வேண்டும்.

அதன் பின்னர் எரிவாயு கசிகிறதா என்று பார்க்க வேண்டும்.

எரிவாயு அடுப்பை திறப்பதற்கு முன்னர் எரிவாயு சிலிண்டரை திறந்து சவக்கார நுரைகளைச் சகல இடங்களுக்கும் விசிறி எரிவாயு கசிவு ஏற்படுகின்றதாக என பரிசோதனை செய்து பார்க்க வேண்டும். அதன்பின்னர் தான் எரிவாயு அடுப்பை மூட்ட வேண்டும்.

எரிவாயு சிலிண்டர் என்பது வெடிகுண்டு அல்ல எனவும், எந்த அழுத்தத்தையும் தாங்கும் வகையில் அவை வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## உறங்கிய நிலையில்..

ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. நேற்று முன்தினம் (30) இரவு இடம்பெற்ற இந்த தீ விபத்தில் 8 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீட்டில் உள்ள ஒரு அறையில் தீ விபத்து ஏற்பட்டு வீட்டின் மேற்கூரை எரிந்து நாசமானது.

வீட்டின் அறையில் உறங்கிக் கொண்டிருந்த சிறுமி தீ விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். அவரது பாட்டியும், 13 வயது சகோதரியும் அருகில் உள்ள அறையில் தூங்கிக் கொண்டிருந்த போது, வீட்டை விட்டு வெளியே ஓடிவந்து உயிர் தப்பியதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் அறிவிக்கப்பட்டவுடன் வெலிகம பொலிஸார் தீயை அணைக்க மாத்தறை தீயணைப்பு வாகனங்களை வரவழைத்துள்ளனர். தீ விபத்துக்கான காரணம் இதுவரையில் தெரிய வரவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வீட்டில் இருந்த எரிவாயு சிலிண்டர், எரிவாயு அடுப்பு அல்லது மற்ற உபகரணங்களுக்கு எந்த சேதமும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

வெலிகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பட்டங்கள் வழங்கும்...

கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாரிய சவால்களை எதிர்கொள்ள நேரும் கல்வி அமைச்சுக்கு இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்விதத்திலும் போதுமானதாக இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கல்வித்துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியானது பாடசாலைகளின் பெயர்ப் பலகைகளை அமைப்பதற்கு கூட போதுமானதாக இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அதற்கிணங்க கல்வி அமைச்சானது எதிர்காலத்தில் பெரும் சவால்களை எதிர்நோக்க நேரிடும் என்றும் சபையில் தெரிவித்த அவர், சர்வதேச நிதி உதவிகளுடன் கல்வியமைச்சை முன்னெடுத்துச் செல்வது தொடர்பிலேயே கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கல்வி அமைச்சு உள்ளிட்ட மூன்று இராஜாங்க அமைச்சுக்கள் மீதான வரவு செலவு திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

கொவிட் தொற்று காரணமாக எதிர்காலத்தில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கவேண்டிவரும் என்பதை நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ புரிந்து கொண்டே வரவு செலவு திட்டத்தை சமர்ப்பித்துள்ளார்.

பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் வகையில் பிரேரணைகள் இல்லை. குறிப்பாக கல்வி அமைச்சை எடுத்துக் கொண்டால் எந்த விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என்ற தெளிவு இல்லாமல் எடுக்கப்பட்ட தீர்மானமாகவே பார்க்க முடிகிறது.

உயர்கல்விக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் நிதியானது 80வீதம் வரை வெளிநாடுகள் மூலம் கிடைக்கும் நிதியாகும்.

எனினும் பாதுகாப்பு அமைச்சுக்கு முழுமையாக உள்நாட்டு நிதியே ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

மேலும் கூடிய தொகையை கிராம தேர்தல் தொகுதிகளின் அடிப்படைத் தேவைகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இலங்கை போன்ற நாட்டுக்கு, அடிப்படை தேவைகளுக்கு அதிக நிதி ஒதுக்கி பொருளாதார பிரச்சினையில் இருந்து மீளமுடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மஹிந்த சமரசிங்கவின்...

உறுப்பினர் பதவி குறித்து தேர்தல் செயலகம் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றையும் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 10 மாதங்களில் மட்டும் ...

தொழிநுட்பத்துடன் ஒப்பிடும்போது இது 52 ஆண்டுகள் பழைமையான தொழிநுட்ப முறைமையுடன் இயங்குகின்ற நிறுவனமாகும். அதனைக் கொண்டு நடத்துவதே மிகவும் கடினமாக உள்ளது. ஆகவே சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை விற்கும் எந்த நோக்கமும் எமக்கு கிடையாது.50 நாட்களுக்கு இந்த நிலையத்தை மூடவே தீர்மானிக்கப்பட்டது, ஆனால் அதற்குள் மீண்டும் அதனை இயல்பு நிலைக்கு கொண்டுவர முயற்சிக்கின்றோம்.

அதேபோல் எரிபொருள் விலையில் மாற்றங்களை செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தில் நாம் தற்போது உள்ளோம், கடந்த காலத்தில் இதில் மாற்றங்களை செய்யாத காரணத்தினால் கடந்த இறுதி பத்து மாதங்களில் மாத்திரம் 7 ஆயிரம் கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

எனவே விலை மாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டும் அல்லது திறைசேரியின் மூலமாக நிவாரணம் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். அது தொடர்பில் நிதியமைச்சரிடம் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளோம்.

எவ்வாறெனினும், கடந்த ஆறு மாதங்களில் எரிபொருள் விலையில் மாற்றம் மேற்கொள்ளாத உலகின் ஒரே நாடு இலங்கை என்பதையும் தெரிவிக்க விரும்புகின்றேன் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## தோட்டத் தொழிலை மட்டுமே...

பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மலையக கல்வி வீழ்ச்சியுற்ற காலம் மாறி தற்போது பல்வேறு துறைகளிலும் படித்த மலையக இளைஞர், யுவதிகள் சிறப்பாக பிரகாசிப்பது மகிழ்ச்சி தருகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்திலேயே கல்வித்துறை உள்ளிட்ட மலையகத்தின் அனைத்து துறைகளும் முன்னேற்றம் அடைந்தது என தெரிவித்த அவர், அப்போதிருந்த கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த போன்று தற்போதைய கல்வி அமைச்சரும் மலையக கல்வித்துறைக்கு பெரும் ஒத்துழைப்பை வழங்குவார் என்ற நம்பிக்கையுண்டு என்றும் அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கல்வி அமைச்சு மற்றும் நான்கு இராஜாங்க அமைச்சுக்களின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,மலையக கல்வியில் ஒருகாலத்தில் நாம் வீழ்ச்சி கண்டிருந்த போதிலும் இன்று அந்த நிலைமைகள் மாற்றம் பெற்றுள்ளன. பல துறைகளில் எமது சமூகம் தற்போது வீறுநடை போட கல்வியே காரணம். அதற்கு முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் உள்ளிட்ட எமது தலைவர்கள் முன்னெடுத்த வேலைத்திட்டமே காரணமாகும் என்றார்.

## உடனடியாக விசாரணைகள்... 03ஆம் பக்கத் தொடர்

எரிசக்தி அமைச்சு ஆரம்பிக்க வேண்டும். எரிவாயுக்கள் வெடிப்பதற்கான காரணத்தை கண்டறிவதுடன், எரிவாயுக்கள் குறித்து மக்களுக்கு போதிய விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும்.

## TNA பிரதேச சபை உறுப்பினர் ...

(வயது 51) சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த நபர் சாவகச்சேரி தனங்கிளப்பு, அறுகுவெளியில் வீடு ஒன்றிலிருந்து வெளிநாட்டவர் ஒருவருடைய தென்னம் காணியை குத்தகைக்கு எடுத்து பராமரித்து வந்த நிலையில் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் வீட்டில் நடமாட்டமில்லாததை அவதானித்த அயல்வீட்டுக்காரர், வீட்டை எட்டிப் பார்த்த போது துர்நாற்றம் வீசியுள்ளது. இது குறித்து உடனடியாக சாவகச்சேரி பொலிஸாருக்கு அவர் தகவல் வழங்கியுள்ளார். இதனடிப்படையில் ஸ்தலத்திற்கு விரைந்த சாவகச்சேரி பொலிஸார் சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## இந்திய பிரதமர் மோடியை இந்திய பிரதமர்...

இரண்டு நாட்களுக்குள் இந்தச் சந்திப்புகள் இடம்பெறவுள்ளன.

நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று முன்தினம் (30) இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டார்.

நிதி அமைச்சராக பதவியேற்றதன் பின்னர், அவர் மேற்கொள்ளும் முதலாவது உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயம் இதுவாகும்.முதலீடு மற்றும் மேம்படுத்தப்பட்ட சுற்றுலா பரிமாற்றங்கள் மூலம் இந்தியாவிடமிருந்து முக்கியமான பொருளாதார உதவிகளை பெறுவதற்கான வாய்ப்புள்ளதாக கொழும்பின் அதிகாரபூர்வ வட்டாரங்களை மேற்கோள்காட்டி இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## பாராளுமன்றில் மு.கா எம்.பிக்கும்...

தெற்கு பிரதேச செயலக பிரிவுகளில் முஸ்லிம் கிராமங்களின் எல்லைகள் விஸ்தீரணங்களில் திட்டமிட்ட முறையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு முஸ்லிம்களுக்கு பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் எம்.பி. ஹாபிஸ் நஸீர் அஹமட்டினால் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட தனிநபர் பிரேரணையின் போது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்களுக்கும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட எம்பி.யுமான சிவநேசதுரை சந்திரகாந்தனுக்குமிடையில் தர்க்கம் ஏற்பட்டது.

கோரளைப்பற்று மத்தி பிரதேச செயலகம் மற்றும் கோரளைப்பற்று தெற்கு பிரதேச செயலகம் என்பன தொடர்பிலேயே இந்த பிரேரணை கொண்டுவரப்பட்டது. இந்த பிரேரணைக்கு ஆதரவாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் ஹரிஸ் எம்.பி. ஆகியோரும் உரையாற்றியிருந்தனர். திட்டமிட்ட வகையில் முஸ்லிம்களின் காணிகள், நிலங்கள், ஆளுகை எல்லைகள் கபளீகரம் செய்யப்படுவதாக இவர்கள் சபையில் சுட்டிக்காட்டியதுடன், மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர்களாக இருந்தவர்கள் மீதும் மாவட்ட செயலகம் மீதும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.

இந்த பிரேரணை மீது விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.யுமான சிவநேசதுரை சந்திரகாந்தன் உரையாற்றும்போதே தர்க்கம் ஏற்பட்டது. சந்திரகாந்தன் எம்.பி. பேசுகையில், முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி.க்கள் வாழைச்சேனை தொடர்பில் கொண்டு வந்த பிரேரணை அப்பட்டமாக இனவாத ரீதியானது. இந்த பிரேரணையை கொண்டு வந்த எம்.பி.க்கள் எவரும் வாழைச்சேனையை சேர்ந்தவர்கள் அல்ல. நான் அங்கு பிறந்து வளர்ந்து அரசியல் செய்பவன்.

இதன்போது இடையில் எழுந்த நசீர் எம்.பி. நானும் மட்டக்களப்பை சேர்ந்தவன் தான் எனக்கூறி மேலும் ஏதோ கூற முற்பட சபைக்கு தலைமை தாங்கிய உறுப்பினர் அதற்கு இடமளிக்க வில்லை. இதேபோன்று ஹரீஸ், ஹக்கீம் எம்.பி.க்களும் இடையிடையில் சில கருத்துக்களை முன்வைத்துக்கொண்டிருந்தனர்.

இறுதியில் இதற்கு பதிலளித்து பேசிய அமைச்சர் சமல் ராஜபக்ஷ, மட்டக்களப்பு மாவட்டத்தின் உள்ளூர் நிர்வாகத்தில் முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள எல்லை நிர்ணய குழுவின் ஊடாக தீர்வை காணமுடியும் என்றார்.

## கிளிநொச்சி காணிகளை...

கடந்த காலங்களில் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்ட காணிகளில் ஒரு பகுதியும், பயிர்ச் செய்கைக்குப் பொருத்தமான ஒரு பகுதி காணிகளிலும் விவசாய நடவடிக்கை மேற்கொள்ள முடியாமை தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புக்களை தொடர்ந்து ஜனாதிபதியினால் குறித்த பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், எதிர்வரும் வாரங்களில் சுமார் 2119 ஏக்கர் காணிகள் விவசாய நடவடிக்கைகளுக்காகவும், 850 ஏக்கர் காணிகள் மேச்சல் தரைக்காகவும் கையளிக்கப்படவுள்ளது.

கடந்த கால யுத்த சூழல் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் பல்லாயிரம் ஏக்கர் விவசாய நிலங்களும் மேய்ச்சல் தரைகளும் கைவிடப்பட்டன.

இந்நிலையில், வனவளப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்பு தொடர்பான திணைக்களங்களினால் கணிசமானளவு விவசாய நிலங்களும் மேய்ச்சல் தரைகளும் பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசங்களாக அடையாளப்படுத்தப்பட்டிருந்தன.

இதனால் பிரதேச மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டதுடன் நாட்டிற்கு பொருளாதார நன்மைகளை ஏற்படுத்தக் கூடிய விவசாய நடவடிக்கைகளிலும் பாதிப்பு ஏற்பட்டிருந்தது. இந்நிலையில், குறித்த விடயம் தொடர்பில் அவதானம் செலுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதி, துறைசார் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் தொடர்ச்சியாக கலந்துரையாடல்களை மேற்கொண்ட நிலையில், ஜனாதிபதியினால் மேற்குறித்த பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஜனாதிபதி மற்றும் துறைசார் அமைச்சர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தில், கரைச்சி பிரதேச செயலக பிரிவில் 1299 ஏக்கர் காணிகளும் கண்டாவளைப் பிரதேச செயலக பிரிவில் 280 ஏக்கர் காணிகளும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் 453 ஏக்கர் காணிகளும் பூநகரி பிரதேசத்தில் 87 ஏக்கர் காணிகளும் வன வளம் மற்றும வனஜீவராசிகளுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பொருத்தமான காணிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று, கிளிநொச்சி மாவட்டத்தினை சேர்ந்த சுமார் 850 ஏக்கர் காணிகள் மேய்ச்சல் தரைக்குப் பொருத்தமானது எனவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நிதி நெருக்கடி மிகு காலத்திலும்...

சாத்தியமானதாக முன்னெடுத்துச் செல்ல முடிந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

காலங்காலமாக தீர்க்கப்படாத பல பிரச்சினைகளுக்கு எமது அரசாங்கம் தீர்வு காண நேர்ந்துள்ளது என்பதை சுட்டிக்காட்டிய அமைச்சர், கல்வித்துறை முன்னேற்றத்திற்காக பாரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று கல்வியமைச்சு, கல்வி மறுசீரமைப்பு திறந்த பல்கலைக்கழகங்கள் இராஜாங்க அமைச்சு, தொழிற் கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்கள் இராஜாங்க அமைச்சு, அறநெறிப் பாடசாலைகள் கல்வி இராஜாங்க அமைச்சுக்கள் மீதான வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் தினேஷ் குணவர்தன இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்:

கல்வி அமைச்சானது பாடசாலை கல்வி முதல் பல்கலைக்கழக கல்வி வரை சிறந்த கல்வியை பெற்றுக் கொடுப்பதற்கு உரிய கவனம் செலுத்தியுள்ளது. நாட்டின் சிறந்த பிரஜைகளாக மாணவர்களை உருவாக்குவதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.நாட்டில் இலவச கல்விக்கான சட்டம் கொண்டுவரப்பட்டு நூறு வருடங்கள் நிறைவடைகிறது. இத்தருணத்தில் அனைவரும் ஒன்றிணைந்து எமது எதிர்கால சந்ததியான பிள்ளைகளுக்கு சிறந்த அறிவைப் பெற்றுக் கொடுத்து அவர்களை சிறந்த பிரஜைகளாக உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும்.

பத்திரிகைகளில் வெளியிடுவது போல் சட்டங்கள் உருவாக்கப்படுவதில்லை. கல்வியமைச்சை பொருத்தவரை தொடர் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு பாராளுமன்ற அனுமதியுடனேயே சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

சுபிட்சத்தின் நோக்கு கொள்கை திட்டத்திற்கிணங்க கல்வித்துறை சம்பந்தமான நிறுவனங்களுக்கு பயிற்சிகளை வழங்குவது உட்பட பல்வேறு நடவடிக்கைகள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ளன.

நாட்டில் நிலவிய கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பாடசாலை மாணவர்களையும் பல்கலைக்கழக மாணவர்களையும் பாதுகாப்பதற்காகவே நாம் பாடசாலைகளை மூடினோம். நாம் கடந்த 21 ஆம் திகதியே பாடசாலைகள் உத்தியோகபூர்வமாக திறக்கப்பட்டன. எதிர்காலத்திலும் சர்வதேச நாடுகளின் நிலைமையை கருத்திற் கொண்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தேசிய பாடசாலைகள் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ள நிலையில் கிராமிய பாடசாலைகளை முன்னேற்றுவதற்கும் ஆசிரியர்,அதிபர்களுக்கான பயிற்சிகளை வழங்குவதற்கும் இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கல்வித்துறையை முன்னேற்றுவதற்கான பாரிய நிதி மாகாணசபைகளில் உள்ளது. அதன்மூலம் ஒருங்கிணைந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றார்.

# தகவல் அறியும் உரிமை தொடர்பாக அரச நிறுவனங்களுக்கு அறிவூட்டுதல்

வவுனியா விசேட நிருபர்



வெகுசன ஊடக அமைச்சின் வழி நடத்தலில் தகவல் அறியும் உரிமை தொடர்பாக அரசாங்க நிறுவனங்களின் தலைவர்களை அறிவூட்டும் இரு நாள் செயலமர்வு கொழும்பில் இடம்பெற்றது.

வெகுசன ஊடக அமைச்சின் வழிநடத்தலில் ஏப்ரியல் இளைஞர் வலையப்பின் நிதியுதவியில் 2016 ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவலறியும் சட்டம் தொடர்பில் அரசாங்கத்தின் அனைத்து அமைச்சுக்கள் மற்றும் அதன் கீழ் இணைக்கப்பட்ட நிறுவனங்களின் தகவல் உத்தியோகத்தர்கள் 100 பேரிற்கு தகவல் அறியும் உரிமை சட்டம் குறித்து தெளிவுபடுத்தும் இருநாள் செயலமர்வு 2021 நவம்பர் மாதம் 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் கொழும்பு 03 மென்டரீனா ஹோட்டலில் நடைபெற்றது.

இதன்போது, "அரசு மற்றும் பிரஜைகளிற்கிடையே தகவல் பரிமாறப்படுவதன் மூலம் அரசானது தமது பிரஜைகளுக்கு சேவை செய்வதற்கான சமூக பொறுப்பை வெளிப்படையாக செய்வதற்காக தகவல் சட்டத்தை பயன்படுத்தல் தொடர்பில் அனைத்து அரச உத்தியோகத்தர்களையும் தெளிவுபடுத்தல் மற்றும் அதற்கான தீர்வு தகவல் சட்டத்தை தொடராக ஏற்புடையதாக்குவதன் ஊடே மேற்கொள்ள முடியும் " என வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் ஜகத் பீ. ஜயவீர தெரிவித்தார். இச்செயலமர்வில் வளவாளர்களாக தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் பியதிஸ்ஸ ரணசிங்க மற்றும் சட்டத்தரணி ஜகத் லியனாரச்சியும் கலந்து கொண்டனர்.



மன்னார் மாவட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்ட இரண்டு தடுப்பூசிகளையும் பெற்று மூன்று மாதம் நிறைவடைந்தவர்களுக்கான மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை மன்னாரில் நேற்று புதன்கிழமை (01) காலை தொடக்கம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
( மன்னார் குறூப் நிருபர்)

# ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடல் திறப்பு விழா இன்று

யாழ்.விசேட நிருபர்

யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனின் "தூய நகரம்" திட்டத்திற்கு அமைவாக தியாகி அறக்கொடை நிறுவனத்தின் வாமதேவன் தியாகேந்திரனின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்ட ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடல் திறப்பு விழா இன்று வியாழக்கிழமை (2) மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ் மாநகர முதல்வரின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக தியாகேந்திரன் அர்ச்சுனா மற்றும் நிலாஜினி தியாகேந்திரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும், மாநகர சபை உறுப்பினர்கள், மாநகர சபை ஆணையாளர். மாநகர சபை உத்தியோகத்தர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் இசைக் கலைஞர்களுக்கான கௌரவிப்பு இடம்பெற உள்ளதோடு, கே.பி. குமரன் பஞ்சமூர்த்தி குழுவினரின் நாதசங்கம், வாண வேடிக்கைகள், தண்ணீர் விசிறல் போன்ற நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

## அப்புத்தளை நகரிலும் எரிவாயு

# சிலிண்டர்களில் வாயு கசிவு சம்பவங்கள்

பதுளை தினகரன் விசேட நிருபர்

அப்புத்தளை நகரில் நேற்று பகல் இடம்பெற்ற எரிவாயு சிலிண்டரில் கசிவை தொடர்ந்து மக்கள் பெரும் பதட்டத்துடனும், பீதியுடனும் காணப்படுகின்றனர்.அப்புத்தளை நகரமே பெரும் பரபரப்பு அடைந்துள்ளது. அப்புத்தளை நகரின் உணவகமொன்றிற்கு, நேற்று புதிய எரிவாயு கேஸ் சிலிண்டரொன்று கொண்டு செல்லப்பட்டது. குறிப்பிட்ட உணவகத்தில் அவ் எரிவாயு சிலிண்டரை இயக்க ஆரம்பிக்கு முன், உணவக உரிமையாளர் சவர்க்கார நீரை சிலிண்டர் மீது தடவியதும், எரிவாயு கசிவு ஏற்படுவது கண்டுப்பிடிக்கப்பட்டது.

உடனடியாக அவ் எரிவாயு சிலிண்டரை, உணவக உரிமையாளர் எரிவாயு சிலிண்டர் கொள்வனவு செய்த கடைக்கு கொண்டு சென்று ஒப்படைத்துள்ளார்.இச் செய்தி பரவத் தொடங்கியதும், ஏற்கனவே எரிவாயு சிலிண்டர்களை பெற்றுக் கொண்டவர்களும், எரிவாயு சிலிண்டர்களை பரிசோதனைகளை செய்ய ஆரம்பித்துள்ளனர்.


திகதி 30.11.2021 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB NATIONAL LOTTERIES

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4602
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 9,727,320.00
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 7 2 1 1 9 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.19,890,690.00

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு இலக்கம் :1640
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,097,680.00
சுப்பர் இலக்கம் 09
வெற்றி இலக்கங்கள் 26 36 48 50
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,124,464.00

Mega POWER மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 950
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,001,640.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.156,564,474.80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து N
சுப்பர் இலக்கம் 01
வெற்றி இலக்கங்கள் 04 25 32 67

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 632
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,819,520.00
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 05 15 29 36
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 85,680,931.60

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் :2897
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ.18,912,500.00
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 43 54 76 79
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 75,521,484.16

விசேட சீட்டிழுப்பு

| கை உழவு இயந்திரத்தை வென்ற விசேட இலக்கம் | Apple iPhone கையடக்கத் தொலைபேசியை வென்ற விசேட இலக்கம் | ரூ.100,000/- பெறுமதியுடைய வவுச்சர்கள் 03ஐ வென்ற விசேட இலக்கங்கள் | Mountain சைக்கிள்கள் 10ஐ வென்ற விசேட இலக்கங்கள் | |
|---|---|---|---|---|
| 0314468 | 1462537 | 2434256 | 0499272 | 0866943 |
| தங்கச் சங்கிலியை வென்ற விசேட இலக்கம் | Android Smart phone கையடக்கத் தொலைபேசியை வென்ற விசேட இலக்கம் | 0240992 | 0013051 | 0156129 |
| | | | 2105159 | 1833067 |
| | | | 0053919 | 0442716 |
| 2037051 | 2476201 | 1584136 | 2485205 | 1759246 |

- ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
- பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
- வெற்றி பெரும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01



## விவசாய, நீர்ப்பாசன, கால்நடை உற்பத்தி அபிவிருத்தி, மீன்பிடி, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் உணவு வழங்கலும் விநியோகத்திற்குமான அமைச்சு, கிழக்கு மாகாணம்.

# கேள்வி கோரல்

கிழக்கு மாகாண விவசாய, நீர்ப்பாசன, கால்நடை உற்பத்தி அபிவிருத்தி, மீன்பிடி, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் உணவு வழங்கலும் விநியோகத்திற்குமான அமைச்சின் பெறுகைக் குழுவின் தலைவரினால் பின்வரும் விடயம் தொடர்பான பெறுகைக்கான கேள்வி கோரப்படுகின்றது.

| கேள்வி இல. | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| GOSL/EP /06/AC/F/5/Pro/02 | விவசாய இரு சக்கர கை இயந்திரம் பிரட்டு கலப்பையுடன் | 32 |

மேற்படி கேள்வி கோரலுக்கிணங்க கிழக்கு மாகாண விவசாய, நீர்ப்பாசன, கால்நடை உற்பத்தி அபிவிருத்தி, மீன்பிடி, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் உணவு வழங்கலும் விநியோகத்திற்குமான அமைச்சின் மீன்பிடிப் பிரிவிலிருந்து படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இதற்காக இலங்கை வங்கி, திருகோணமலை பிரதான கிளையில் (கிளை இல: 006) செயலாளர், விவசாய அமைச்சு என்ற பெயரில் கணக்கு இல, 005849124 இற்கு மீளளிக்க முடியாத வைப்புப் பணமாக ரூபா 1,000.00 செலுத்தி அப்பற்றுச்சீட்டை சமர்ப்பித்து கேள்வி ஆவணங்களை 2021.12.02 தொடக்கம் 2021.12.21 வரை அலுவலக கடமை நாட்களில் (காலை 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணிவரை) அமைச்சிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

கேள்விகள் மூடப்பட்ட உறையிலிட்டு 2021.12.21ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முதல் கிடைக்கக் கூடியதாக தலைவர், அமைச்சு பெறுகைக்குழு, விவசாய, நீர்ப்பாசன, கால்நடை உற்பத்தி அபிவிருத்தி, மீன்பிடி, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் உணவு வழங்கலும் விநியோகத்திற்குமான அமைச்சு, கன்னியாவீதி, வரோதயநகர், திருகோணமலை எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (தபால் உறையின் இடது பக்க மேல்மூலையில் ஒப்பந்த இலக்கத்தையும் அதன் உபதலைப்பையும் எழுதி அனுப்பவும்).

கேள்வி ஆவணங்கள் 2021.12.21 ஆம் திகதி பி.ப. 2.01 மணிக்கு திருகோணமலை, கன்னியாவீதி, வரோதயநகரில் அமைந்துள்ள கிழக்கு மாகாண விவசாய, நீர்ப்பாசன, கால்நடை உற்பத்தி அபிவிருத்தி, மீன்பிடி, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் உணவு வழங்கலும் விநியோகத்திற்குமான அமைச்சில் திறக்கப்படும். இதற்காக கேள்விகாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் உரிய அத்தாட்சி ஆவணத்துடன் பங்குபற்ற முடியும்.

கேள்வி ஆவணங்களை அலுவலக நேரத்தில் திருகோணமலை கன்னியாவீதி, வரோதயநகரில் அமைந்துள்ள கிழக்கு மாகாண விவசாய, நீர்ப்பாசன, கால்நடை உற்பத்தி அபிவிருத்தி, மீன்பிடி, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் உணவு வழங்கலும் விநியோகத்திற்குமான அமைச்சில் இலவசமாக பார்வையிடலாம்.

மேலதிக விபரங்களை கன்னியாவீதி, வரோதயநகர் திருகோணமலை கிழக்கு மாகாண விவசாய, நீர்ப்பாசன, கால்நடை உற்பத்தி அபிவிருத்தி, மீன்பிடி, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் உணவு வழங்கலும் விநியோகத்திற்குமான அமைச்சின் பிரதம கணக்காளரிடம் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

தொலைபேசி இல : 026 - 2220393
தொலைநகல் இல : 026 - 2222025

**கலாமதி பத்மராஜா,**
**தலைவர் பெறுகைக்குழு,**
**விவசாய, நீர்ப்பாசன, கால்நடை உற்பத்தி அபிவிருத்தி,**
**மீன்பிடி, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் உணவு வழங்கலும்**
**விநியோகத்திற்குமான அமைச்சு, கிழக்கு மாகாணம்.**
**கன்னியாவீதி, வரோதயநகர், திருகோணமலை.**



# கேள்விமனுக் கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பிரிவு மற்றும் கிளை | கேள்வி மனு இலக்கம் மற்றும் பொருள் விளக்கம் | கேள்வி மனு முடிவுத் திகதி மற்றும் நேரம் | கேள்வி மனு ஆவணம் வாங்கும் இடம் மற்றும் தொடர்பு இலக்கம் | கேள்வி மனு ஆவணத்தின் விலை | கேள்வி மனு வகை ச.போ.கே.(ICB )/ தே.போ.கே.(NCB) |
| சேவைகள் | | | | | |
| பிறப்பாக்கல் (மன்னார் காற்றாலை மின்னுற்பத்தி நிலையம்) | MC/DGM/PROC/2021/003 மன்னார் காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்திற்கான சாரதி மற்றும் எரிபொருளுடனான பயணிகள் வேன் (Van) ஒன்றினை வாடகைக்கு எடுப்பதற்கானகேள்வி மனு கோரல். | 23/12/2021 14:30மணிக்கு | தலைமை பொறியியலாளர் அலுவலகம், தம்பபவனி காற்றாலை மின்னுற்பத்தி நிலையம், இலங்கை மின்சார சபை, நடுக்குடா, மன்னார், 41000. தொ. இல.: 023 2031020 மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம் (மகாவலி வளாகம்), இல. 42, அம்பிட்டிய வீதி, கண்டி, 20000. தொ. இல.: 081-2224568 | ரூ. 1,000/= அனைத்து கட்டணங்களையும் மக்கள் வங்கியின் (தலைமையகக் கிளை) மகாவலி வளாக 204-2002-30085-134 என்ற சேமிப்பு கணக்கிற்கு மக்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலும் பணம் செலுத்தப்பட்டு வங்கிச் சீட்டை சமர்ப்பிக்க வேண்டும். | தேசிய போட்டி கேள்வி மனு (NCB) |

மேற்படி கொள்முதல் குழுவின் தலைவர், இலங்கை மின்சார சபையின் சார்பாக, சர்வதேச/தேசிய போட்டி கேள்வி மனுவின் அடிப்படையில் மேற்கூறப்பட்டுள்ள பொருட்கள், கட்டுமானங்கள் மற்றும் சேவைகளுக்கு சாத்தியமான வழங்குநர்களிடமிருந்து மூடப்பட்ட கேள்வி மனுக்களை இப்போது அழைக்கிறார். மின்சார சபையிடமிருந்து வாங்கப்பட்ட கேள்வி மனு ஆவணங்களில் மட்டுமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கடைசி வரிசையில் வழங்கப்பட்ட இணைப்பிலிருந்து "தகவல் நகல்" (ஏலத்திற்கு அல்ல) இனை ('Information copy' not for bidding) பதிவிறக்கம் செய்யலாம்.

கேள்வி மனு ஆவணங்கள் வருங்கால மனுதாரர் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். தேவையான சந்தர்ப்பங்களில் அவர்கள் 1987 ஆம் ஆண்டின் பொது ஒப்பந்தச் சட்டம் எண் 3 இன் அடிப்படையில் பதிவு செய்யப்பட வேண்டும்.

கேள்வி மனு ஆவணங்களின் ஒவ்வொரு தொகுப்பிற்கும் மேலே உள்ள அட்டவணையின் 6 ஆம் வரிசையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை செலுத்தி, கேள்வி மனு முடிவடையும் திகதிக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு வரை எந்த வேலை நாட்களிலும் 0900 மணிமுதல் 1500 மணி வரை இ.மி.ச. யின் பிரதிப் பொது முகாமையாளர்/தலைமைப் பொறியியலாளரிடம் எழுத்துப்பூர்வ கோரிக்கையைச் சமர்ப்பிப்பதன் மூலம், கேள்வி மனு ஆவணங்களை எந்தவொரு வருங்கால மனுதாரரோ அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற முகவரோ பெற்றுக்கொள்ளலாம். பொது முகாமையாளர், இ.மி.ச.யின் பெயரில் பணம் அல்லது வங்கி வரைவோலையாக (Bank Draft) பணம் செலுத்தப்படவேண்டும்.

வெளிநாட்டு இராஜதந்திர தூதரகங்கள்/வர்த்தக ஆணைக்குழுக்கள் எழுத்துப்பூர்வ கோரிக்கையை சமர்ப்பித்தால் கேள்வி மனு ஆவணங்களின் தகவல் நகல்களை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி மனு ஆவணங்களை வருங்கால மனுதாரர் அல்லது அவர்களின் முகவர்கள் சம்பந்தப்பட்ட பி.பொ.மு/த.பொ. (DGM/CE) அலுவலகத்தில் இலவசமாக ஆய்வு செய்யலாம்.

கேள்வி மனு கோரல் முடிவடைந்த பின்னர் ஏலதாரர்கள் மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில், வரிசை 9 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் ஏலம் திறக்கப்படும். தாமதமான கேள்வி மனுக்கள் நிராகரிக்கப்படும்

ஏல ஆவணங்களை வழங்கிய இ.மி.ச. யின் அந்தந்த பி.பொ.மு/த.பொ. இடமிருந்து, ஏல இறுதித் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் அனைத்து விளக்கங்களும் கோரப்படலாம்

* **ICB – International Competitive Bidding (சர்வதேச போட்டி கேள்வி மனுக்கோரல்)**
* **NCB – National Competitive Bidding (தேசிய போட்டி கேள்வி மனுக்கோரல்).**

**பொது முகாமையாளர்**
**இலங்கை மின்சார சபை**

வளமான வாழ்விற்கு மின்சாரம்

**விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையத்தளத்திலிருந்து பதிவிலக்கம் செய்யப்படலாம்.**

## அரச மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் பதவிகளுக்கு பெயர் குறிப்பிடப்பட்ட/நியமிக்கப்பட்ட ஆட்களின் தகுதி பற்றி ஆராய்வதற்கான இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு

இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு பின்வரும் பதவிகள் தொடர்பாக பெயர் குறிப்பிடப்பட்ட/நியமிக்கப்பட்டவர்களின் தகுதிகளை ஆராயும்: -

| இல. | பெயர் மற்றும் விலாசம் | பதவி |
|---|---|---|
| 1. | திரு.மஹிந்த புத்ததாச சமரசிங்க இலக்கம். 53/2, டொரிங்டன் பிளேஸ், கொழும்பு 07 | அமெரிக்கா மற்றும் மெக்சிகோவுக்கான இலங்கையின் தூதுவராக பெயர் குறிப்பிடப்பட்டவர் |
| 2 | திரு. எம். மஹிந்த சாலிய, 126/2எப், மஹாபோதி மாவத்தை, பஹல கரகஹமுன, கடவத்த | பிரதேச அபிவிருத்தி வங்கியின் தலைவராக நியமிக்கப்பட்டவர் |
| 3 | திரு. சிறினிமல் பெரேரா, 125 ஏ, மாக்கேவிட்ட, ஜா-எல | ஹோட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) பிஎல்சியின் தலைவராக நியமிக்கப்பட்டவர் |
| 4 | திரு. ஏ.எல்.ஏ.ஏ. சிறிவர்தன, இலக்கம். 28/38, “அலுத்வத்த” படுவன்துடாவ வீதி, ஹபுகல வக்வெல்ல | தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர் |
| 5 | திரு. ஸ்ரீமால் விஜேசேகர, இலக்கம். 67/38, ப்ரிம்ரோஸ் பார்க், மொரிஸ் வீதி, கபுஹேன்பொல, வெலிபத்த, அக்மீமன, காலி | அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர் |

மேற்குறிப்பிட்ட பெயர் குறிப்பிடப்பட்ட/நியமிக்கப்பட்ட நபர்கள் தொடர்பில் எவரேனும் அல்லது எந்தவோர் அமைப்பும் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பினால் முறையாகக் கையொப்பமிட்டு, **“செயலாளர், உயர் பதவிகள் பற்றிய குழு, குழுப் பணியகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே”** என்ற விலாசத்திற்கு **2021 டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் இன்றேல் தொலைநகல் இல. 011-2777300 ஊடாக அல்லது highposts_c@parliament.lk எனும் மின்அஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

அவ்வெழுத்து மூல கருத்துக்களுக்கு மேலதிகமாக வாய்மூல கருத்துக்களையும் முன்வைக்குமாறு குழுவினால் பணிக்கப்படலாம். இந்த விளம்பரம் பாராளுமன்ற இணையத்தளத்திலும் இடம்பெற்றுள்ளது (www.parliament.lk).

**குழுச் செயலாளர்**
**பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.**

**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே.**
**2021 டிசம்பர் 02 ஆம் திகதி**

---

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை | பெசேவ அடங்கலாக ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/05/ PT/6222(civil) | 04 Nos. Cell Fenders for Island B/W | 30,000.00 | 1,000.00 | 2022.01.06 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/03/ PT/6240(EL) | 120 Nos. Status Indicator Led Lamp Assembly for Spreaders | 20,000.00 | 1,000.00 | 2022.01.06 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/06/ PT/6243(EL) | 100 Nos. Normally Close Inductive Proximity Switches for JCT Cranes | 20,000.00 | 1,000.00 | 2022.01.06 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/05PT/ 6237(EL) | 100 Nos. Kokosha Receptacles for Reefer Sockets | 35,000.00 | 1,000.00 | 2022.01.11 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/03/ PT/6250(EL) | 100 Nos. Reefer Socket Interior assembly for Reefer Sockets of ECT | 40,000.00 | 1,000.00 | 2022.01.11 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/04/ PT/6251(EL) | 50 Nos. of PG6A Tacho Generators for the Transfer Cranes of JCT | 40,000.00 | 1,000.00 | 2022.01.11 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CMS/LP/21/ PT/20/025 | 01 No. Automated Computer System Monitoring Software Tool & Licenses for SLPA | 30,000.00 | 1,000.00 | 2021.12.16 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/20/ PT/07/002 | Chemical Suits | 40,000.00 | 1,000.00 | 2021.12.16 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/21/ PT/13/59 | Motor Tyres 21.00X25 40 PLY Tubeles – 15 Nos. | 100,000.00 | 3,500.00 | 2021.12.22 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/21/ PT/17/059 | 35MM$^2$ CU/XLPE/PVC 4 Core Power Cables | 45,000.00 | 1,000.00 | 2021.12.22 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/21/ PT/13/060 | 100 Nos. Motor Tyres 1000X20 16 PLY (Cross PLY) | 35,000.00 | 1,000.00 | 2021.12.22 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான மொத்த ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படும். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு விலைமனுதாரரும் முகவரொருவராக, உபமுகவராக, பிரதிநிதியொருவராக அல்லது எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளரின் அல்லது ஒரு வழங்குநராக பெயர் குறிப்பிடப்படுபவராக செயற்பட விரும்பின், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தம்மை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான பண்டங்களை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2021 டிசம்பர் 3 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டியுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம் பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் நேரடியாவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

---

## தேசிய போக்குவரத்து வைத்திய நிலையம்

(வாகன ஒழுங்குபடுத்தல், பஸ் போக்குவரத்துச் சேவைகள், ரயில் பெட்டிகள் மற்றும் மோட்டார் கார் தொழில் இராஜாங்க அமைச்சு)

## பதவி வெற்றிடங்கள்

1997 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகச் சட்டத்தின் மூலம் தாபிகக்ப்பட்டுள்ள வாகன ஒழுங்குறுத்துகை, பேருந்துப் போக்குவரத்துச் சேவைகள் மற்றும் புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சின் கீழ் தொழிற்படுகின்ற நிறுவனமாக காணப்படுகின்ற அதேவேளைஇ ஒவ்வொரு வழிச்செலுத்துகைக்குப் பின்னாலும் ஆரோக்கியமான சாரதி ஒருவரை அமர்த்துதல் எமது நோக்கமாகும். போக்குவரத்து மருத்துவ துறையின் முன்னோடி என்ற வகையில் எமது நிறுவனம் மேற்குறிப்பிட்ட நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு தொழில் வல்லுநர்களின் பங்களிப்பு தேவையாக இருக்கின்றபடியினால் பின்வரும் வெற்றிடமாகியுள்ள பதவிகளுக்காக நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### பணிப்பாளர் சபையின் செயலாளர் / சட்ட அலுவலர்

**1. பணிப்பாளர் சபையின் செயலாளர் /சட்ட அலுவலர் MM 1-1 வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01**

### தகைமைகள்

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

1. பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டப் பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன்
2. ஒரு வழக்கறிஞராக இருத்தல் மற்றும் வழக்கறிஞராக சத்தியப் பிரமாணம் செய்ததன் பின்னர்' 01 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்வாரியான விண்ணப்பதாரர்கள்**

1. மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

• வயதெல்லை: 22 வயதிற்கு குறையாதவராக இருகக் வேண்டிய அதேவேளையில் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரியான விண்ணப்பதாரர்களுக்கான உயர்ந்தபட்ச வயது எல்லை ஏற்புடையதாகாது.

• **சேவை வகுதிக்குரிய சம்பள குறியீட்டு இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம்**

| | |
|---|---|
| **சம்பள அளவுத்திட்டம்** முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 02/2016 இன் II ஆவது உப அட்டவணையின்படி சம்பளக் கொடுப்பனவு மற்றும் பதவிக்கு உரித்தான ஏனைய கொடுப்பனவுகளும் உரித்தாகும். | **MM 1-1** ரூபா. 53,175 - 10 x 1,375 - 15 x 1,910 - 95,575 |

**மேற்குறிப்பிட்ட பதவிக்குத் தேவையான பொதுவான தகைமைகள்**

சகல விண்ணப்பதாரர்களும்

i. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
ii. பதவிக்காக ஒப்படைக்கின்ற பணிகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கும் அதே போன்று நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகுதியினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
iii. சிறந்த நடத்தையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

தகைமையுள்ளவர்களைத் தெரிவுசெய்வது சம்பந்தமான இறுதித் தீர்மானம் தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தைச் சார்ந்ததாகும்.

சகல சுய விபரத் தகவல்களையும் உள்ளடக்கியதாக விண்ணப்பங்களைத் தயாரித்து தொடர்புடைய சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் உறவினரல்லாத இருவரின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை உள்ளடக்கி, விண்ணப்பிக்கும் பதவியினை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு கீழ் காணப்படும் முகவரிக்கு **2021.12.14 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக பதிவுத் தபால் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் மூலம் அனுப்பவும் அல்லது நேரிலும் ஒப்படைக்க முடியும்.**

**தலைவர்,**
**தேசிய போக்குவரத்து வைத்திய நிலையம்**
**இல. 170, ஹைலெவல் வீதி, நுகேகொடை**
**தொலைபேசி : 0112 852 868 / 0112 814 849 தொலைநகல் : 0112 809 305**
**மின்னஞ்சல் : ntmi@sltnet.lk**

---

**அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு**

**வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்**

## விலைமனுக்கோரல்

**வரையறுக்கப்பட்ட சிலாபம், பேருவளை மற்றும் மிரிஸ்ஸ மீன்பிடித் துறைமுகங்களுக்காக மூன்று எரிபொருள் தொட்டிகளை வழங்குதல், ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்துதல்**

### CFHC/SD/OT/CHI, BER, MIR/2021-58

கொழும்பு 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கையில், இல-15 இல் காணப்படும் வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவரினால் **2021.12.17** ஆம் திகதி **பி.ப.02.00** மணி வரை முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்த இல. | விபரம் | அளவு | மனுப்பிணைத் தொகை | ஒப்பந்த கட்டணம் (ரு) | முடிவுறும் திகதி |
|---|---|---|---|---|---|---|
| 01 | CFHC/SD/OT/ CHI,BER,MIR/ 2021-58 | I. வரையறுக்கப்பட்ட சிலாபம், பேருவளை மீன்பிடித் துறைமுகங்களுக்காக 5000 கெலன்ஸ் கொள்ளளவுடைய 02 எரிபொருள் தொட்டிகளை வழங்குதல், ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்துதல்<br>நீளம் :- 4500mm<br>விட்டம் :- 2720mm<br>தாங்கியின் கொள்ளளவு :- 5000 கேலனஸ்<br>கட்டமைப்பு :- CDC தரநிலையில் காணப்படுதல் வேண்டும்<br>நிறச் சாயம் :- 1வது மேல் பூச்சு மெரைன் ப்ரிமியர் (வர்ணத்தின் அடர்த்தி - 25μm) 2வது மேல் பூச்சு மெரைன் ∴பினிஷிங் (பட தடிமன் - 50 μஅ) - சாம்பல் நிறம் பட வரைபுக்கு ஏற்ப | 02 | 1% ஒப்பந்த தொகை | 1,000/= | 2021.12.17 ஆம் திகதி பி.ப.2.00 |
| | | II. வரையறுக்கப்பட்ட மிரிஸ்ஸ மீன்பிடித் துறைமுகத்துக்காக 8000 கெலன்ஸ் கொள்ளளவுடைய எரிபொருள் தொட்டிகளை வழங்குதல், ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்துதல்<br>நீளம் :- 6405mm<br>விட்டம் :- 2720mm<br>தாங்கியின் கொள்ளளவு :- 8000 கேலன்ஸ்<br>கட்டமைப்பு :- CDC தரநிலையில் காணப்படுதல் வேண்டும்<br>நிறச் சாயம் :- 1வது மேல் பூச்சு மெரைன் ப்ரிமியர் (வர்ணத்தின் அடர்த்தி - 25μm) 2வது மேல் பூச்சு மெரைன் ∴பினிஷிங் (பட தடிமன் - 50 μஅ) - சாம்பல் நிறம் பட வரைபுக்கு ஏற்ப | 01 | | | |

இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2021.12.02 ஆம் திகதியிலிருந்து 2021.12.16 ஆம் திகதி மு.ப.09.00 தொடக்கம் பி.ப.03.00 வரையான** காலப்பகுதியினுள் மேற்கூறப்பட்ட மீளச்செலுத்தப்படாத கட்டணத்துடன் எழுத்து மூல விண்ணப்பத்தை **கொள்முதல் முகாமையாளர், கொழும்பு 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கையில் இல-15 இல் காணப்படும் வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தில்** கையளிப்பதன் மூலமாக ஆங்கில மொழியினாலான விண்ணப்பப்படிவத்தினை பெற்றுக்கொள்ள முடியும். கட்டண முறையானது பணமாக செலுத்தப்பட வேண்டும் அல்லது **2021.12.02 ஆம் திகதியிலிருந்து 2021.12.16 ஆம் திகதி மு.ப.09.00 தொடக்கம் பி.ப.03.00** வரையான காலப்பகுதியினுள் எழுத்துபூர்வமான கோரிக்கை மூலமாக மற்றும்காசாளரிடம் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி விண்ணப்பப்படிவத்தினை பெற்றுக்கொள்ள முடியும்.

ஒப்பந்தத்தில் குறிப்பிட்டப்படி முத்திரையிடப்பட்ட மனுப் பிரதிகள் இரண்டுடன் **2021.12.17** ஆம் திதி **பி.ப.02.00** மணி வரையான காலத்திற்குள் கிடைக்குமாறு **முகாமையாளர் (கொள்முதல்), வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம், இல-15, ரொக் ஹவுஸ் ஒழுங்கையில் கொழும்பு 15** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது கொள்முதல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் இடலாம். **2021.12.17** ஆம் திகதி **பி.ப.02.00** மணிக்கு பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மனு ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற உடனேயே ஒவ்வொரு மனுக்களாக திறக்கப்படும்.

மனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிக்கு பங்கேற்க முடியும்.

முழுமையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களை நிராகரிக்கும் உரிமையினை ஆணைக்குழு கொண்டுள்ளது. இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முகாமையாளர் (கொள்முதல்), தொலைபேசி இலக்கம் : **011-2525063** மற்றும் முகாமையாளர் (இயந்திர பொறியியலாளர்) தொலைபேசி இலக்கம் : **011-2529364** அவர்களை தொடர்புகொள்ளவும்.

**தலைவர்**
**வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்**
**இல- 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை,**
**கொழும்பு 15.**

# சர்வதேச செய்திகள்

# ஓமிக்ரோன் திரிபு மேலும் பல நாடுகளில் பரவல்: எல்லைக் கட்டுப்பாடுகள் தீவிரம்

## உலக சுகாதார அமைப்பு புதிய அறிவுரை

ஓமிக்ரோன் கொரோனா தொற்று திரிபின் வீரியம் மற்றும் அதன் தடுப்பூசி பாதுகாப்பை தடுக்கும் திறன் பற்றிய நிச்சயமற்ற தன்மைக்கு மத்தியில் அமெரிக்காவுக்கான விமானப் பயணங்களில் கொவிட்–19 பரிசோதனை விதிகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதோடு பல நாடுகளும் தமது எல்லை கட்டுப்பாடுகளை மேலும் கடுமையாக்கியுள்ளன.

பயணக் கட்டுப்பாடுகளை விரிவுபடுத்துவதாக ஜப்பான் மற்றும் ஹொங்கொங் நாடுகள் அறிவித்திருப்பதோடு அச்சுறுத்தல் உள்ள நாடுகளின் பயணிகளுக்கு மலேசியா தற்காலிக தடை விதித்துள்ளது. ஏற்கனவே வெளிநாட்டவர்கள் நாட்டுக்குள் வருவதற்கு தடை விதித்திருக்கும் ஜப்பானில் நேற்று இரண்டாவது ஓமிக்ரோன் திரிபு சம்பவம் பதிவாகியுள்ளது.

ஏனைய நாடுகளிலும் புதிய சம்பவங்கள் பதிவாக ஆரம்பித்துள்ளன. சிட்னியில் பல இடங்களுக்கு பயணித்த ஒருவருக்கு இந்த புதிய திரிபு தொற்றியிருக்கும் வாய்ப்பு உள்ளதாக அவுஸ்திரேலியா குறிப்பிட்டுள்ளது. தொற்றுக்குள்ளான நபர் பெரிய இசை நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டிருப்பதாக டென்மார்க் குறிப்பிட்டுள்ளது.



எனினும் பொதுப்படையான பயணத் தடைகள் இந்த வைரஸ் திரிபு உலகெங்கும் பரவுவதை தடுக்காது என்றும் அது வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரத்தில் பெரும் சுமையையே ஏற்படுத்தும் என்றும் உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது. பதிலாக உடல்நிலை சரியில்லாதவர்கள், அச்சுறுத்தல் ஏற்படக்கூடியவர்கள் அல்லது 60 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் மற்றும் தடுப்பூசி போடாதவர்கள் அச்சுறுத்தல் கொண்ட பகுதிகளுக்குச் செல்வதை ஒத்திவைக்கும்படி அந்த அமைப்பு அறிவுறுத்தியுள்ளது. முன்னதாக மொடர்னா மருந்து உற்பத்தி நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி இந்த திரிபு பற்றி எச்சரிக்கும் வகையில் கருத்துக்கூறிய நிலையில் கடந்த செவ்வாயன்று நிதிச் சந்தைகள் வீழ்ச்சி கண்டதோடு நேற்று புதன்கிழமையும் முதலீட்டாளர்கள் நிச்சமற்ற சூழலையே வெளியிட்டுள்ளனர்.

கொரோனா தொற்றுக்கு எதிராக தடுப்பூசி பெறுவதற்கு உலகளாவிய சுகாதார அதிகாரிகள் மீண்டும் ஒரு முறை வலியுறுத்தியுள்ளனர்.

“எமது சிறந்த தற்பாதுகாப்பாக தொடர்ந்தும் தடுப்பூசியே உள்ளது” என்று பிரிட்டன் சுகாதார அமைச்சர் சாஜித் ஜாவிட், ஸ்கை நியூஸ் தொலைக்காட்சிக்கு தெரிவித்தார்.

“அது போதுமான செயல்திறன் இன்றி இருக்கலாம் என்பது உண்மையே. அது பற்றி இன்னும் எமக்கு உறுதியாக தெரியாது. ஆனால், அது தீவிரமான நோய் நிலைக்கு எதிராக தொடர்ந்து செயல்திறன் கொண்டதாக இருக்க வாய்ப்பு உள்ளது” என்று அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில் இங்கிலாந்தில், பொதுப் போக்குவரத்து வாகனங்கள், கடைகள், வங்கிகள், முடிதிருத்தும் இடங்கள் போன்றவற்றில், மீண்டும் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஓமிக்ரோன் வைரஸ் திரிபை கட்டுப்படுத்தும் நோக்கில், மேலும் சில கட்டுப்பாடுகளும் மீண்டும் நடப்புக்கு வந்துள்ளன. இதுவரை, பிரிட்டனில் 11 பேரிடம் ஓமிக்ரோன் வைரஸ் திரிபு அடையாளம் காணப்பட்டுள்ளது. அந்த எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என, பிரிட்டிஷ் அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

புதுவகைக் கிருமியைப்பற்றி மேல் விவரம் கிடைக்கும்வரை அதன் பரவலைத் தடுப்பதும் கட்டுப்படுத்துவதும் மிக முக்கியம் என, அது கருதுகிறது.

தடுப்பூசி பெற்றவர்களின் இரத்தத்தில் புதிய வைரஸ் திரிபை எதிர்ப்பதற்கு போதுமான உடல் எதிர்ப்புச் சக்தி இருக்கிறதா என்பதை கண்டறியும் ஆய்வுகூட சோதனை முடிவுகள் அடுத்த சில வாரங்களில் கிடைக்கப்பெறும் என்று ஐரோப்பிய மருந்துகள் நிறுவன நிறைவேற்று பணிப்பாளர் எமிர் குக் தெரிவித்துள்ளார்.

வரும் டிசம்பர் 13 ஆம் திகதி தொடக்கம் ஐந்து முதல் 11 வயது சிறுவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் திட்டத்தை ஐரோப்பிய ஒன்றியம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பைசர் மருந்து உற்பத்தி நிறுவனத்துடன் இணைந்து தயாரிக்கும் தடுப்பூசி ஓமிக்ரோனில் இருந்து கடுமையான நோய் நிலைமைக்கு எதிராக வலுவான பாதுகாப்பை அளிக்கும் என்று பயோஎன்டென் தலைமை நிறைவேற்று அதிகாரி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

புதிய கொரோனா வைரஸ் திரிபுக்கு பதில் நடவடிக்கையாக பிரிட்டன் மற்றும் அமெரிக்கா கூடுதல் தடுப்பூசி வழங்கும் பூஸ்டர் திட்டத்தை விரிவுபடுத்தியுள்ளன.

கடந்த வாரம் தென்னாபிரிக்காவில் முதல் முறை கண்டுபிடிக்கப்பட்ட பல எண்ணிக்கையாக மரபணு பிறழ்வுகளைக் கொண்ட ஓமிக்ரோன் திரிபு தற்போது பல நாடுகளுக்கும் பரவி உள்ளது. இதில் புதிதாக சவூதி அரேபியா, நைஜீரியாவிலும் தொற்றுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

பிரேசிலில் முதன்முறையாக இருவருக்கு ஓமிக்ரோன் திரிபு அடையாளம் காணப்பட்டுள்ளது. லத்தீன் அமெரிக்க நாடுகளில் பிரேசிலில் தான் முதன்முறை புதுவகை வைரஸ் உறுதி செய்யப்பட்டுள்ளது. எனினும் தென்னாபிரிக்காவில் ஓமிக்ரோன் வகை வைரஸ் கண்டறியப்படுவதற்கு முன்பே அது ஐரோப்பாவில் இருந்ததாகப் புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஓமிக்ரோன் திரிபை பற்றித் தென்னாபிரிக்கா அதிகாரப்பூர்வமாக அறிவிப்பதற்கு முன்னரே, நெதர்லாந்தில் அது இருவரிடம் அடையாளம் காணப்பட்டதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அவர்களில் ஒருவர் வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொள்ளாதவர்.

புதிய கொரோனா திரிபுக்கு எதிராக சுமார் 56 நாடுகளில் பயணக் கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்பட்டிருப்பதாக உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

உறுப்பு நாடுகள் பொதுப்படையாக கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்திருப்பது ஏற்றத்தாழ்வையே அதிகரிக்கும் என்று உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதனொம் கப்ரியேசுஸ் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவுக்கு வரும் விமானப் பயணிகள் அனைவரும் புறப்படுவதற்கு ஒரு நாளைக்குள் கொவிட்19 தொற்று இல்லை என்பதை உறுதி செய்யும் பரிசோதனை முடிவுகளை காட்டுவதற்கு புதிய கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டுள்ளது. முன்னதாக புறப்படுவதற்கு முன்னர் மூன்று நாட்களுக்குள் எடுக்கப்பட்ட சோதனை முடிவுகளை காண்பிக்க வசதி இருந்தது.

# அமெ. உயர் பாடசாலையில் துப்பாக்கிச் சூடு: மூவர் பலி

அமெரிக்காவின் மிச்சிகன் மாநிலத்தில் உள்ள உயர் பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் மூன்று மாணவர்கள் கொல்லப்பட்டதோடு ஆசிரியர் ஒருவர் உட்பட மேலும் எட்டுப் பேர் காயமடைந்தனர்.




இதில் 16 வயது சிறுவன் மற்றும் 14 மற்றும் 17 வயது சிறுமிகள் கொல்லப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். இதே பாடசாலையின் 15 வயது மாணவன் ஒருவனே இந்த தாக்குதலை நடத்தியதாக சந்தேகிக்கப்படுவதாக குறிப்பிட்டிருக்கும் பொலிஸார், ஒரு நாளைக்கு முன்னரே எடுத்து வந்த தனது தந்தையின் கைத் துப்பாக்கியை பயன்படுத்தி இந்தத் தாக்குதலை நடத்தி இருப்பதாக தெரிவித்தனர். பாடசாலைக்கு பொலிஸார் அழைக்கப்பட்ட ஐந்து நிமிடத்திற்குள் இந்த மாணவன் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளான். கடந்த செவ்வய்க்கிழமை இடம்பெற்ற இந்தத் தாக்குதலின் போது மேசைகளுக்குக் கீழ் ஒளிந்துகொண்டதாக மாணவர்கள் குறிப்பிட்டுள்ளனர். தாக்குதலுக்கான நோக்கம் இன்னும் கண்டறியப்படவில்லை என்றும் தடுப்புக் காவலில் இருக்கும் மாணவன் பேச மறுப்பதாகவும் செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

# ஹொன்டுராஸின் முதல் பெண் ஜனாதிபதியாகிறார் காஸ்ட்ரோ

ஹொன்டுராஸ் தேர்தலில் ஆளும் கட்சி தோல்வியை ஒப்புக்கொண்டிருக்கும் நிலையில் அந்நாட்டின் முதல் பெண் ஜனாதிபதியாக சியோமாரா காஸ்ட்ரோ நியமிக்கப்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த நவம்பர் 28 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் இடதுசாரி லிப்ரே கட்சியின் வேட்பாளரான காஸ்ட்ரோ தனது போட்டியாளரை விடவும் 20 வீத புள்ளிகளால் முன்னிலை பெற்றிருப்பதாக ஆரம்பக் கட்ட முடிவுகள் தெரிவிக்கின்றன.



அவரது வெற்றி வலதுசாரி தேசிய கட்சியின் 12 ஆண்டு ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவருவதாக உள்ளது. அந்த ஆட்சி முறைகேடுகள் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு முகம்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. இதன்படி ஜனாதிபதி ஜுவான் ஓர்லன்டோ ஹெர்னான்டஸுக்கு பதிலாகவே காஸ்ட்ரோ புதிய ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

ஹெர்னான்டஸின் சகோதரர் போதைக்கடத்தல் குற்றச்சாட்டில் அமெரிக்காவில் சிறை வைக்கப்பட்டிருக்கும் நிலையில் அவர் போதை வர்த்தகத்தில் ஈடுபடுவதாக குற்றச்சாட்டுக்கு முகம்கொடுத்தார். “போதை சர்வாதிகாரம் மற்றும் ஊழல்” படுகுழியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதாக காஸ்ட்ரோ உறுதி அளித்துள்ளார்.

# கொவிட்–19 மாத்திரைக்கு அமெரிக்காவில் ஒப்புதல்



கொவிட்–19 வைரஸ் தொற்றால் அதிகப் பாதிப்புக்கு ஆளாகும் சாத்தியமுள்ளோருக்கு மெர்க் நிறுவனத்தின் மாத்திரை மூலம் சிகிச்சையளிக்க அமெரிக்கச் சுகாதார நிபுணர் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோருக்கு மோல்னுபிரவீர் மாத்திரை மூலம் சிகிச்சையளிப்பது எளிமையானது. ஓமிக்ரோன் உட்படப் புதிதாக உருமாறும் வைரஸ்களுக்கு எதிரான செயல்திறன் கொண்டதாக அந்த மாத்திரை கருதப்படுகிறது.


மோல்னுபிரவீர மாத்திரைக்கு பிரிட்டன் ஏற்கனவே ஒப்புதல் அளித்துவிட்டது.

வைரஸ் தொற்று அறிகுறி தெரிய வந்ததும் 5 நாள் அந்த மாத்திரையை எடுத்துக்கொள்ள வேண்டும். மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதையும் நோயாளிகள் உயிரிழப்பதையும் மாத்திரை பாதியாகக் குறைப்பதாகக் கூறப்படுகிறது.

அவசரகாலத்தில் மாத்திரையைப் பயன்படுத்த அமெரிக்கா விரைவில் ஒப்புதல் அளிக்கும் என்று தெரிகிறது.

# கிரேக்கத்தில் தடுப்பூசி பெறாவிட்டால் அபராதம்

கிரேக்கத்தில் 60 வயதுக்கு மேற்பட்டோர் கொவிட்–19 தடுப்பூசி பெறுவது கட்டாயமாக்கப்படவுள்ளது. அவ்வாறு தடுப்பூசி பெற மறுப்போருக்கு ஜனவரி நடுப்பகுதியில் இருந்து மாதத்திற்கு 113 டொலர் அபராதம் விதிக்கப்படும் என்று பிரதமர் கிரியாகோஸ் மிட்சோடகிஸ் தெரிவித்துள்ளார்.



இந்த பணம் கிரேக்க சுகாதார கட்டமைப்புக்கு வழங்கப்படவுள்ளது. அந்நாட்டில் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுவோர் அதிகரித்து சுகாதார கட்டமைப்பு நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


கிரேக்கத்தில் மக்கள் தொகையில் 63 வீதமான 11 மில்லியன் மக்கள் முழுமையாக தடுப்பூசி பெற்றபோதும், 60 வயதுக்கு மேற்பட்ட 520,000க்கும் அதிகமானவர்கள் இன்னும் தடுப்பூசி பெறவில்லை என்று தரவுகள் காட்டுகின்றன.

“60 வயதுக்கு மேற்பட்ட கிரேக்கர்கள் முதல் ஊசியை பெறுவதற்கான முன்பதிவை ஜனவரி 16க்கு முன் மேற்கொள்ள வேண்டும்” என்று பிரதமர் வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் பாராளுமன்றத்தின் ஒப்புதலை பெற வேண்டி இருந்தபோதும் இதற்கு எம்.பிக்கள் ஆதரவளிப்பார்கள் என்று நம்புவதாக அவர் குறிப்பிட்டார்.

# உலகில் செலவுமிக்க நகரம் டெல் அவிவ்

உயர்ந்துவரும் பணவீக்கம் உலகளவில் வாழ்க்கைச் செலவுகளை உயர்த்தியுள்ள நிலையில், உலகின் வாழ்வதற்கு அதிக செலவு கொண்ட நகராக இஸ்ரேலின் டெல் அவிவ் முதலிடத்தை பிடித்துள்ளது.




தி எகொனமிஸ்ட் சஞ்சிகையின் பொருளாதார புலனாய்வு பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி இந்த இஸ்ரேலிய நகரம் ஐந்து இடங்கள் முன்னேறி முதல் முறையாக முதல் இடத்தைப் பிடித்துள்ளது.

உலகளாவிய வாழ்க்கைச் செலவு குறியீடு, 173 நகரங்களில் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு அமெரிக்க டொலரில் விலை ஒப்பிடப்பட்டு தொகுக்கப்படுகிறது.


இஸ்ரேலிய நாணயமான சேக்கல் அமெரிக்க டொலருக்கு எதிராக வலுப்பெற்றது.

அதேபோன்று போக்குவரத்து மற்றும் மளிகை பொருட்களின் விலை அதிகரிப்பு டெல் அவிவ் நகர் வேகமாக முன்னிலைக்கு வருவதற்கு காரணமாகியுள்ளது. பாரிஸ் மற்றும் சிங்கப்பூர் இரண்டாவது இடத்தை பகிர்வதோடு அதனை அடுத்து சூரிவ் மற்றும் ஹொங்கொங் காணப்படுகின்றன. நியூயோர்க் ஆறாவது இடத்திலும் ஜெனீவா ஏழாவது இடத்திலும் உள்ளன.

உலகில் மிகக் குறைந்த செலவு கொண்ட நகராக சிரிய தலைநகர் டமஸ்கஸ் பதிவாகியுள்ளது.

# ஓமிக்ரோன் வைரஸ் திரிபு: பயோஎன்டெக் நம்பிக்கை

பைசர்–பயோஎன்டெக் நிறுவனங்களின் கொவிட் –19 தடுப்புமருந்து ஓமிக்ரோன் வைரஸ் திரிபு கடுமையாகப் பாதிக்கப்படுவதிலிருந்து வலுவான பாதுகாப்பு அளிக்கக்கூடும் என பயோஎன்டெக் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி உகர் சாஹின் கூறியுள்ளார்.



தடுப்பூசியின் செயல்திறனை ஓமிக்ரோன் பாதிக்குமா என்பதைக் கண்டறிய ஆய்வுகள் நடைபெறுவதாக அவர் கூறினார். அதன் மூலம், புதிய தடுப்புமருந்து தேவைப்படுமா என்பதை நிர்ணயிக்கலாம் என்றார் அவர். மேம்படுத்தப்பட்ட தடுப்பு மருந்தை உருவாக்கும் பணிகளில் தற்போது பயோஎன்டெக் ஈடுபட்டுள்ளது. எனினும் அது தேவைப்படுமா என்பது இன்னும் தெரியவில்லை என்று சாஹின் குறிப்பிட்டார்.

பூஸ்டர் என்ற மூன்றாவது தடுப்பூசியைப் போட்டுக்கொள்வதும் ஓமிக்ரோன் திரிபுக்கு எதிராகப் பாதுகாப்பு அளிக்கலாம் என்று அவர் குறிப்பிட்டார். பைசர், பயோஎன்டெக் நிறுவனங்கள் ஆல்பா, டெல்டா ஆகிய வகை வைரஸ் திரிபுகளுக்கு எதிராக தடுப்புமருந்தை ஏற்கனவே உருவாக்கிவிட்டன. அவை சோதிக்கப்பட்டு வருகின்றன.

இதற்கிடையில் ஐரோப்பிய ஒன்றிய மருந்து ஒழுங்குமுறை ஆணையம், ஓமிக்ரோன் வைரஸுக்கு எதிரான தடுப்புமருந்துக்கு 3 முதல் 4 மாதங்களுக்குள் ஒப்புதல் அளிக்கப்படலாம் என்று தெரிவித்துள்ளது.

# காதலை மட்டுமல்ல காமத்தையும் முகம்சுழிக்க செய்யாமல் ரசிக்கும்படியாக யாத்தவர்கள் பெண்புலவர்கள்...

## துளிர்



பவதாரணி ராஜசிங்கம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் நீங்காத இடம்பெற்ற ஔவை எனும் புலவர்களைபற்றி எழுதியிருந்தேன். ஔவையை தவிர்த்து நாம் பெண்புலவர்களை வரிசைப்படுத்த முடியாது. பொதுவாக பெண் புலவர்களாகட்டும் எழுத்தாளர்களாகட்டும் அவர்கள் கையாள்கின்ற சொற்கள், உணர்சிகளை வெளிப்படுத்தும் தொனி, அதற்கென அவர்கள் காட்டும் உவமைகள் என்பன ஆண் எழுத்தாளர்களிலிருந்து வேறுபட்டதாகவே அமைந்துள்ளது.

ஔவையை பொறுத்தமட்டில் இதே பெயர் கொண்ட பல புலவர்கள் இருந்ததாக நாம் அறிவோம். சங்ககாலத்தில் வாழ்ந்ததாக அறியப்படும் இருவர் தவிர 12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஔவையாரும் உள்ளார். நமது வாழ்க்கைக்கு தேவையான அறநெறி நூல்களான ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி, மூதுரை, அசதிகோவை போன்ற நூல்களை இயற்றியுள்ளார். இந்த கருத்துக்கள் இன்றுமட்டுமல்ல இன்னும் பலநூற்றாண்டுகளுக்கும் மனிதச மூகம் பின்பற்ற வேண்டிய ஒழுக்க நெறிகளாக அமைந்துள்ளன.

“ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது” என்ற பழமொழிக்கு ஏற்றவாறு குழந்தைகள் மனதில் நிலைக்கும்படியாக இலகுவாக கருத்துக்களை முன்வைக்கின்றார். ஒரு பெண்ணாக, எதிர்கால சமூகத்தின் தூணாக சிறார்களே உள்ளனர் என்பதனை அறிந்து அவர்களுக்கு முன்னுரிமை அளித்து சொற்களை செதுக்கி இணைத்து நூலாற்றினார். இளம் பருவத்திலேயே மனப்பாடம் செய்து மனதில் நிலைநிறுத்திக் கொள்ளும் வகையில் சிறுசிறு சொற்றொடர்களால் எளிமையாக அமைந்த ஆத்திச்சூடி இன்றுவரை சிறுவர்களுக்கான முதல் அறிவுரையாக அமைந்துள்ளது. ஆத்திச்சூடியின் அடிப்படையிலேயே அகரவரிசையை குழந்தைகள் நினைவில் கொள்கின்றனர் என்பது மறுப்பதற்கில்லை.



ஔவையாரின் இன்னுமொரு நூலாக “நல்வழி ”அமைந்துள்ளது. பெயரிலேயே நெறியை கொண்டதாக அமைந்த இந்த நூல் சாதாரண மக்களுக்கு மட்டுமன்றி ஆட்சியாளர்களுக்கும் நல்வழி கூறுகின்ற நூலாக அமைந்துள்ளது. அந்த தைரியமும் தெளிவும் அன்றைய கால கட்டத்திலே பெண்களிடம் இருந்தது என்பதற்கு இதுவே சான்று.





ஔவையார் சமயநூல்களை யாத்தபுலவராக அமைந்துள்ளார். 14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவராக இவர் அடையாளப்படுத்தப்படுகின்றார். “விநாயகர் அகவல்”,”ஔவை குறள்” என்னும் இவரது நூல்கள் ஆதாரமாக உள்ளன.முற்காலத்தில் இறைவனே இறங்கிவந்து தன்னுடன் பேசியதாக புலவர்கள் இயற்றும் பாமாலைகள் அதிகம். அவற்றில் விநாயகரே ஔவையிடம் தன்னைப் பாட பணித்ததாகவும் அதன் வழிவந்ததே இந்த செய்யுளாகவும் அமைந்துள்ளது.

சுட்டபழம் வேண்டுமா? சுடாதபழம் வேண்டுமா? என்று முருகன் வினவியதுவும், தும்பிக்கையால் தூக்கிச்சென்று கைலாயத்தில் விநாயகர் இறக்கியதாக கூறப்படுவதும் இந்த ஔவையாரையே ஆகும்.

இப்படி ஔவை என்ற பெயர் தாங்கிய பல புலவர்களும் வாழ்வியல், பண்பாடு, ஒழுக்கம், காதல், போர், அறவழி, அறிவுரை, வழிப்படுத்தல் , பக்தி நெறி என பலதரப்பட்ட களங்கிளிலிருந்தும் தமது செய்யுட்களை யாத்துள்ளனர். காதலை மட்டுமல்ல காமத்தையும் முகம்சுழிக்கச் செய்யாமல் ரசிக்கும்படியாக யாத்தவர்கள் பெண்புலவர்கள்.

பெண்களுக்குரிய நுண்ணிய உணர்வுகளை எழுத்தின்வழி காட்டியவர்கள். எத்தனை உயர்ந்த மனிதராய் இருந்தாலும் தயங்காமல் தம்கருத்துக்களை மொழிந்தவர்கள் பெண்பாற்புலவர்கள். அன்றைய காலத்தவர்கள் இவ்வாறு இருப்பின் நவீன பெண் கவிஞர்கள் எழுத்தின் வீரியம் இன்னும் எழுச்சிபெற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை.

# எட்டு வருடங்களாக உதிரம் கொடுத்து உயிர் காக்கும் பெண்..

**'உதிரம் கொடுத்து உயிர் காப்போம்' எனும் குருதிக்கொடை பணி மகத்தான சேவையாகும். இச்சேவையானது தானத்தில் சிறந்த தானமாகவும் கருதப்படுகின்றது. அந்த வகையில், 'உதிரம் கொடுத்து உயிர் காப்போம்' எனும் உன்னதமான பணியில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ள மனிதாபிமான சேவையாளர்கள் தங்களது உயிரோட்டமான செயல்பாடுகள் தொடர்பில் தினகரனுக்காக மனம் திறக்கின்றனர்.**

நாம் மனிதநேய மனப்பாங்கோடு இருந்துகொண்டு அடுத்தவரின் உயிர் காக்க முன்வர வேண்டும். ஒருமுறை இரத்த தானம் செய்த பின்னர் அடுத்த சந்தர்ப்பம் எப்போது வரும் என்ற அவா எனக்குள் உருவாகின்றது என்கிறார் கிழக்கு பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ பிரிவு பட்டதாரியும் பகுதிநேர விரிவுரையாளருமான கணேசன் சுகன்யா.





மட்டக்களப்பு, களுதாவளையைச் சேர்ந்த சுகன்யா தனது பல்கலைக்கழக் காலத்தில் 21ஆவது வயதிலேயே இரத்ததானம் செய்ய தொடங்கியிருக்கிறார்.

தற்போது 28 வயதை எட்டிப்பிடித்திருக்கும் அவர், இரத்ததானம் எனும் உன்னதப் பணி பற்றி மேலும் கூறுகையில்,

நான் பல்கலைக்கழத்தில் பயின்றுகொண்டிருந்தபோது மாணவர்கள் என்ற வகையில் சமூகத்திற்கான எமது பங்களிப்பு) எனும் சமூகப் பணியில் ஈடுபட்டிருந்தேன்.

இந்நிலையில் எனது பட்டப்படிப்பின் இரண்டாவது வருடத்தில் இரத்ததான முகாமொன்று நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் பல்கலைக்கழகத்தின் ஏனைய பீடங்களைச் சேர்ந்த மாணவர்கள், விரிவுரையாளர்கள் என்று குருதிக்கொடையாளர்கள் பலர் பங்குபற்றியிருந்தனர். அப்போதே நானும் முதற்தடவையாக இரத்ததானம் செய்வதற்கு உந்தப்பட்டேன்.

அடுத்தவரின் உயிரைக் காக்க வேண்டுமென்ற ஆர்வம் எனக்கு சிறு வயது முதற்கொண்டே இருந்து வந்தது.

கஷ்டத்திலிருப்போருக்கு என்னால் பண உதவி செய்ய முடியாத நிலை இருந்தபோதும், மகத்தான தானமான இரத்ததானத்தை என்னால் செய்யலாமென்று உணர்ந்தேன்.

எனது வீட்டாருக்குத் தெரிவிக்காமலேயே நான் முதற் தடவையாக இரத்த தானம் செய்தேன். இதில் ஆத்ம திருப்தியையும் உணர்ந்தேன்.

பின்னர் இந்த விடயத்தை எனது வீட்டிலுள்ளோருக்கு தெரியப்படுத்தியபோது, எனது சகோதரர்களும் இரத்ததானம் செய்யத் தொடங்கினர். இதனால் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்.

விபத்துகள் தொடர்பான தகவல்களை செய்திகளில் கவனிக்கும்போது எமது குருதிக்கொடையின் பெறுமதி இன்னும் அதிகம் என்று தோன்றும்.

பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு வருடாந்த நிகழ்விலும் நாம் விரும்பி இரத்ததானம் செய்து வந்தோம்.

நாம் இரத்ததானம் செய்யும்போது எமது உடலில் ஒரு புதுவிதமான இரத்த உருவாக்க கட்டமைப்பு செயற்படுகின்றது.

4 மாதங்களுக்கு ஒருமுறை இரத்ததானம் செய்வது நல்லது எனவும் இதனால் புதிய இரத்த செல்கள் உருவாகுவதாகவும் கூறப்படுகின்றது. இரத்ததானம் செய்வதால் எமது உடல் நிலையும் ஆரோக்கியமடைகின்றது.

எனது குருதிக்கொடையால் இன, மத, மொழி, சிறியோர், பெரியோர், ஆண், பெண் என்ற அம்சங்களைக் கடந்து எல்லோரும் பயனடைகின்றார்கள் என்பது எனக்கு மகிழ்ச்சி தருகின்றது.

எனது இரத்தம் எந்த வங்கிக்கு போகின்றது, யாருக்கு பயன்படப்போகின்றது என்பவை தொடர்பில் அறிய எனக்கு விருப்பமில்லை.

ஆனால், எல்லோரும் மனிதர்களே என்ற அடிப்படையில் யாரோ தேவைப்பாடுடைய ஒருவரது தேவையை பூர்த்தி செய்ய எனது இரத்தம் உதவி செய்கின்றது. அந்த மனநிலையே எனக்கு நிறைவைத் தருகின்றது.

சம காலத்தில் மனித சமூகமானது, பால், பருவம், இன, மத, மொழி பேதத்தினால் வேறுபட்டிருக்கின்றோம்.

ஆனால், அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள தேவைப்பாடுள்ள எந்த நோயாளிக்கும் எனது இரத்தம் போய்ச் சேர்ந்து, அவர் உயிர் பிழைக்க முடிகின்றது என்றால் அதைவிட ஆத்ம திருப்தி எனக்கு வேறொன்றும் தேவையில்லை.

இந்நிலையில் இன, மத, மொழி, பிரதேச, பால் வேறுபாடு கடந்த உயிரைக் காப்பாற்றும் உன்னதமான இரத்ததானப் பணியில் வேறுபாடின்றி அனைவரும் இணைந்துகொள்ள வேண்டுமென்பதே எனது அவா.

இரத்ததானம் தொடர்பான விழிப்புணர்வு பட்டிதொட்டி தொடங்கி அனைத்து தரப்பினரையும் சென்றடைய வேண்டும்.

இரத்ததானம் செய்வதினால் எமது உடல்நிலைக்கு பாதிப்பு இல்லை என்ற விடயமும் சமூகத்தை சென்றடைய வேண்டும் என்கிறார் சுகன்யா.

இரத்த வங்கிப் பிரிவின் வைத்திய அதிகாரி கீர்த்திகா மதனழகன்

இரத்ததானம் செய்பவர்கள் சமூகத்தில் கௌரவிக்கப்படவும் மதிக்கப்படவும் வேண்டியவர்கள் என, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையினுடைய இரத்த வங்கிப் பிரிவின் வைத்திய அதிகாரி கீர்த்திகா மதனழகன் தெரிவிக்கின்றார்.

இரத்ததானம் அளிக்கும் செயல் முறை பற்றி வைத்திய அதிகாரி கீர்த்திகா சற்று விவரித்துச் சொன்னார்.

இலங்கையிலும் பல்வேறுபட்ட நோய்களினால் பீடிக்கப்பட்ட நோயாளிகள் காணப்படும் நிலையில், அந்



கணேசன் சுகன்யா (குருதிக் கொடையாளி)

நோயாளிகளுக்கு குருதித் தேவைப்பாடு அத்தியாவசியமான ஒன்றாக உள்ளது.

இந்நிலையில், இலங்கையிலுள்ள சகல இரத்த வங்கிகளும் தாமாக விரும்பி முன்வந்து இரத்ததானம் அளிப்பவர்களில்; மாத்திரமே தங்கியிருக்கின்றன.

பொதுவாக மருந்துகளை மருந்தகங்களில் வாங்குவது போல இரத்தத்தை மருந்தகங்களில் வாங்க முடியாது.

உலக நாடுகளோடு ஒப்பிடுகையில் இலங்கையில் சுகாதார சேவை முற்றிலும் இலவசமாக கிடைக்கின்றது.

ஆகையால், எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க வேண்டிய நிலையில் அரச சுகாதாரத்துறையினராகிய நாம் உள்ளோம்.

இந்நிலையில் மக்கள் தாமாக முன்வந்து வழங்கும் குருதியினால் இன்னொருவரின் உயிரைக் காப்பாற்ற முடிகின்றது.

இந்த விழிப்புணர்வு இன்னமும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டால் ஆர்வமும் தியாக சிந்தையும் உள்ள அனைவரும் இரத்ததானம் செய்வதற்குரிய வாய்ப்பு ஏற்படும்.

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக இரத்ததான முகாம்களை நடத்த முடியாமல்; போனவேளையில் இரத்ததானம் கிடைப்பதில் சற்று பின்னடைவு எதிர்நோக்கப்பட்டது.

விபத்துகள், தலசீமியா, புற்றுநோய் உள்ளிட்ட நோய்களுக்கும் மகப்பேற்றினால் ஏற்படும் இரத்தப்போக்கை ஈடுசெய்வதற்கும் இரத்தம் தேவைப்படுகின்றது.

இந்தத் தேவைப்பாடு இரத்ததானம் செய்பவர்களினாலேயே பூர்த்தி செய்யப்படுகின்றது.

மனிதர்கள் அனைவரினதும் இரத்தம் சிவப்பு நிறம் என்பதைத் தவிர, அதற்கு இனம், மொழி, பால் வேறுபாடுகள் இல்லை.

இரத்ததானம் செய்பவர்களும் இனம், மதம், மொழி, பால் வேறுபாடுகளைக் கடந்து மனிதநேயம் என்கின்ற நோக்கிலேயே இரத்ததானம் செய்கின்றார்கள். இதனால் இவர்கள் உன்னத ஸ்தானத்தைப் பெற்ற தியாகிகள் என்றே நான் கருதுகின்றேன்.

குருதிக்கொடையாளர்கள் இரத்த வங்கிக்கு நேரடியாக வந்து இரத்ததானம் செய்வதும் சமூக சேவை அமைப்புகள் மற்றும் ஆர்வலர்களால் இரத்த தான முகாம்கள் நடத்தப்படும்பொழுது அங்கு வந்து இரத்ததானம் செய்வதும் இடம்பெறுகின்றது.

அந்த வகையில், இந்த வருடத்தின் நவம்பர் வரையான காலப்பகுதியில் மட்டக்களப்பு இரத்த வங்கிக்கு சுமார் 900 பேர் தன்னார்வத்துடன் நேரடியாக வந்து இரத்ததானம் செய்திருக்கின்றார்கள். மேலும், சுமார் 2,000 பேர் இரத்ததான முகாம்களில் இணைந்துகொண்டு இரத்ததானம் செய்துள்ளனர்.

இரத்ததானம் செய்வதில் 80 சதவீதம் ஆண்களாகவும் 20 சதவீதம் பெண்களாகவும் காணப்படுகின்றனர்.

இதேவேளை, ஒரு குருதிக் கொடையாளியிடமிருந்து ஒரு தடவையில் 450 மில்லிலீற்றர் (1 பைந்து) இரத்தத்தை பெற முடியும். ஒரு கொடையாளிடமிருந்த பெறப்படும் ஒரு பைந்து இரத்தத்தை 3 நோயாளிகளுக்கு பயன்படுத்துகின்றோம்.

குருதிக் கொடையாளி ஒருவர் ஒரு தடவை இரத்ததானம் செய்து 4 மாதங்கள் பூர்த்தியடைந்த பின்னர் திரும்பவும் இரத்ததானம் செய்யலாம். உண்மையில் இரத்ததானம் செய்பவர்கள் கௌரவிக்கப்பட வேண்டும். அவர்கள் என்றென்றும் நன்றி கூரப்பட வேண்டும். 15 அல்லது 20 தடவைகள் இரத்ததானம் செய்த தியாகச் செம்மல்களும் சமூகத்தில் இருக்கின்றார்கள்.

இரத்தக் கொடையாளிகளைக் கூட்டிணைத்து ஒரு செயல் அணியை உருவாக்கினால், மனிதநேய சக வாழ்வுக்கும் சமூக ஐக்கியத்திற்கும் அது உறுதியான அத்திவாரமாக இருக்கும்.


மட்டக்களப்பு மாவட்ட வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் அவசர நோயாளிகளுக்கான இரத்தத் தேவைகளில் சுமார் 40 சதவீதம் மாத்திரம் தான் உள்ளூர் இரத்தக் கொடையாளிகளிடமிருந்து கிடைக்கின்றது. ஏனைய 60 சதவீதம் வெளி மாவட்ட கொடையாளிகளின் இரத்தம் மூலமே பூர்த்தி செய்யப்படுகின்றது. இதுவும் இன, மத, மொழி, பால், பிரதேச வேறுபாடுகள் கடந்து, மனிதாபிமான தியாகத்திற்கு ஒரு தடையல்ல என்பதைப் பறைசாற்றி நிற்கின்றது என்கிறார் அவர். தன்னார்வலர்களைத் தவிர, பல்வேறு பொது அமைப்புகளும் சமூகசேவை நிறுவனங்களும் தேவையானபோது இரத்ததானம் செய்வதில் முனைப்புக் காட்டுகின்றன.

அந்த வகையில் ஏறாவூரிலும் மனிதநேயம் பேணும் மாபெரும் இரத்த தான முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டதாக இஸ்லாமிய ஐக்கிய ஒன்றியம் தெரிவித்தது.

சமீப காலங்களில் அந்த அமைப்பினால் நடத்தப்பட்ட 4 இரத்ததான முகாம்களிலும் தலா 150 பேருக்கு மேற்பட்ட ஆண்களும் பெண்களுமாகக் கலந்துகொண்டு இரத்ததானம் செய்த இரத்தத்தை மட்டக்களப்பு இரத்த வங்கிக்கு வழங்கியதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இதில் வரவேற்கத்தக்க விடயமானது, இரத்ததானம் செய்ய முன்வருவோரில் முஸ்லிம் பெண்களும் யுவதிகளும் 60 சதவீதத்திற்கு மேற்பட்டோராக உள்ளனர் என்று பொது அமைப்புகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை முகம் தெரியாத யாரோ உறவுகள் இன, மத, மொழி, பால், பிரதேச வேறுபாடுகள் பாராது தானமாக அளித்த இரத்தத்தினால் தாம் உயிர் வாழ்வதாகவும் உயிருக்காக ஊசலாடிக் கொண்டிருந்த வேளையில் தங்களுக்கு தானமாக இரத்தத்தை வழங்கிய மேன்மைக்குரிய கருணை உள்ளங்கள் போற்றுதலுக்குரியவர்கள் என்றும் அவசர சிகிச்சை வேளையில் இரத்ததானத்தைப் பெற்றவர்கள் தெரிவிக்கின்றனர்.



ஆர்.சுகந்தினி...

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2021 டிசம்பர் 2
வியாழக்கிழமை

# மாந்தை கிழக்கு மாணவர்களின் போக்குவரத்து நெருக்கடி

## இன்றைய மாவட்ட செயலக கூட்டத்தில் ஆராயப்படும்

**முல்லைத்தீவு குறூப் நிருபர்**

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு மாணவர்களின் போக்குவரத்து நெருக்கடி தொடர்பாக இன்று (02) மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ள போக்குவரத்து துறையினருடனான கலந்துரையாடலில் ஆராயப்பட உள்ளதாக முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் க.விமலநாதன் தெரிவித்தார்.

மாந்தை கிழக்கில் பாடசாலைகளுக்கு தனியார் பேருந்தில் செல்கின்ற மாணவர்கள் பாடசாலை முடிந்தவுடன் வீடு திரும்ப முடியாதது தொடர்பாக கேட்ட போது மாணவர்கள் வீடு திரும்ப முடியாது இருப்பது தொடர்பாக தனக்கு முறைப்பாடுகள் கிடைக்கவில்லை. ஊடக வழியாகத்தான் தகவலை அறிந்து கொண்டேன். நாளை (இன்று 02) போக்குவரத்து துறையினருடன் கலந்துரையாடல் இடம் பெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் இவ்விடயம் தொடர்பாக ஆராயப்படும் எனவும் தெரிவித்தார்.



மாந்தை கிழக்கில் இருந்து பல பாடசாலைகளுக்கு காலையில் மாணவர்களை ஏற்றுகின்ற தனியார் பேருந்து பாடசாலை முடிந்தவுடன் மாணவர்களை ஏற்றாததன் காரணமாக பெற்றோர்களே தமது பிள்ளைகளை வீடுகளுக்கு அழைத்து வருகின்ற நெருக்கடி தொடர்கின்றது. பாடசாலை முடிந்தவுடன் மாணவர்களை ஏற்றக் கூடிய தனியார் பேருந்து சேவை இடம் பெற வேண்டும் என்பது பெற்றோர்களின் கோரிக்கையாகும். கொரோனா தொடங்குவதற்கு முன்னர் தனியார் பேருந்து பாடசாலை முடிந்தவுடன் மாணவர்களை வீடுகளுக்குத் திரும்பக் கூடிய வகையில் சேவையில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஒப்பந்த காலம் நிறைவடைந்தும் பாலம் பூர்த்தியாகாமையால் சிரமம்

**(பரந்தன் குறூப் நிருபர்)**

முல்லைத்தீவு பரந்தன் ஏ35 வீதியின் புளியம்பொக்கணை சந்தி மற்றும் உடையார்கட்டு ஆகிய பகுதிகளில் உள்ள இரு பாலங்களின் ஒப்பந்த காலம் நிறைவடைந்தபோதும் அதன் கட்டுமானப் பணிகள் நிறைவு பெறாததால் போக்குவரத்துக்களில் இடர்பாடுகள் தொடர்கின்றன.

ஏ35 வீதியின் 12 வது கிலோமீட்டரில் அமைந்துள்ள முதலாவது பாலம் மற்றும் 25 கிலோமீட்டரில் அமைந்துள்ள இரண்டாவது பாலம் என்பது புனரமைப்புக்கு தெரிவு செய்யப்பட்டு அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இதுவரை நிறைவு பெறாத நிலையில் காணப்படுகின்றன. வீதிகள் மற்றும் நெடுஞ்சாலை



அமைச்சின் கீழ் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற குறித்த பாலங்களின் கட்டுமான பணிகள் இதுவரை முழுமை பெறாத நிலையில் காணப்படுகின்றன. ஏ9 வீதிக்கு அடுத்தபடியாக அதிக போக்குவரத்து நெரிசல் கொண்ட வீதியாக காணப்படும் மேற்படி வீதியில் இருக்கின்ற குறித்த பாலங்களை விரைவாக புனரமைப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மன்னார் மாவட்டத்தில் 'ஒமிக்ரோன்' வைரஸ் பரிசோதனைகளை முன்னெடுக்க நடவடிக்கை

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன்

**(மன்னார் குறூப், தலைமன்னார் விஷேட நிருபர்கள்)**

'ஒமிக்ரோன்' திரிபு வைரஸ் இலங்கையிலும் பரவி உள்ளதா என்பதற்கான தொடர் பரிசோதனைகள் மற்றும் ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் வடமாகாணத்தில் மன்னார் உள்ளிட்ட பகுதிகளில் பீ.சி.ஆர்.மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் ஆய்வுக்காக அனுப்பி வைக்கப்பட உள்ளது என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று புதன்கிழமை (01) இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் நேற்று முந்தினம் செவ்வாய்க்கிழமை (30) மேலும் புதிதாக 15 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, 2 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளன. மாவட்டத்தில் தற்போது வரை 28 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளன. கடந்த மாதம் உயிரிழந்த ஐவரில் இருவர் எவ்வித தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ளவில்லை. மற்றைய இருவர் இரண்டாவது தடுப்பூசியை பெற்று 3 மாதங்கள் கழிந்துள்ளதாக காணப்படுகின்றது.

மேலும் 60 வயதிற்கு மேற்பட்டோர் 2 தடுப்பூசிகளையும் பெற்று மூன்று மாதங்கள் கழிந்திருந்தால் அவர்களுக்கான பூஸ்டர் தடுப்பூசிகள் வழங்கும் நடவடிக்கைகள் தற்போது மன்னார் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எனவே 60 வயதிற்கு மேற்பட்டோர் 2 தடுப்பூசிகளையும் பெற்று மூன்று மாதங்கள் கழிந்திருந்தால் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தடுப்பூசி வழங்கும் நிலையங்களுக்குச் சென்று பூஸ்டர் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ள முடியும்.

மன்னார் மாவட்டத்தில் நவம்பர் மாதத்தில் டெங்கு நோயின் தாக்கமும் அதிகரித்து காணப்படுகின்றது.

காய்ச்சல் ஏற்படும் போது சுய சிகிச்சைகளை செய்து கொள்ளாமல் உடனடியாக வைத்தியசாலைகளுக்கு அல்லது வைத்தியர்களிடம் சென்று தமது பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். சுய சிகிச்சையை தவிர்த்து உடனடியாக வைத்தியசாலைகளுக்கு அல்லது வைத்தியர்களிடம் சென்று தமது பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும்.

தற்போது சர்வதேச அளவில் கரிசனையை செலுத்தி உள்ள 'ஒமிக்ரோன்' என்கிற வகை திரிவுடைய வைரஸ் இலங்கையிலும் பரவி உள்ளதா என்பதற்கான தொடர் பரிசோதனைகள் மற்றும் ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பொதுமக்கள் ஒன்று கூடும் நிலைமைகளை தவிர்த்து சுகாதார விதிமுறைகளை உரிய முறையில் கடைபிடிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# வவுனியாவில் அதிக பனி மூட்டம்



**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியாவில் நேற்று அதிகாலை அதிகளவான பனி மூட்டம் காணப்பட்டதால் சாரதிகள் வாகனங்களை செலுத்துவதில் பெரும் இடையூறுகளை சந்தித்தனர்.

வவுனியா நகர்ப்புறம் உட்பட அனைத்து இடங்களிலும் அதிகளவான பனி மூட்டம் காணப்பட்டது. இதன் காரணமாக பாடசாலை மாணவர்கள், வேலைக்கு செல்வோர், வாகனச்சாரதிகள் எனப் பலரும் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர்.

ஏ9 வீதி உட்பட வவுனியாவில் வீதியால் சென்ற வாகனங்கள் காலை 7.30 மணிவரை ஒளியைப் பாய்ச்சியபடி சென்றதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

அண்மைக்காலமாக அதிகளவு மழையுடன் கூடிய காலநிலை வவுனியாவில் காணப்பட்ட போதிலும் தற்போது அதிக பனி மூட்டமாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வாழ்விலும் சாவிலும் ஒன்றிணைந்த தம்பதியர்

**யாழ். விசேட நிருபர்**

வாழ்வில் ஒன்றிணைந்த தம்பதி சாவிலும் ஒன்றிணைந்த மனதை உருக்கும் சம்பவம் சாவகச்சேரி சரசாலை வடக்கில் இடம்பெற்றிருக்கின்றது.

மனைவியின் பிரிவை தாங்க முடியாத ஏக்கத்தில் சில மணி நேரத்தில் கணவனும் உயிரிழந்திருக்கின்றார். தம்பதியினரின் சடலங்கள் ஒன்றாக தகனம்செய்யப்பட்டது.

சரசாலை பகுதியை சேர்ந்த கதிரவேலு முருகேசர் (வயது 93) அவருடைய மனைவி முருகேசர் தங்கம்மா (வயது93) ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னரும் சாவகச்சேரி பகுதியில் கொரோனா தொற்றுக்கு உள்ளான 87 வயதான மனைவி உயிரிழந்த சோகத்தில் 97 வயதான கணவனும் உயிரிழந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பெண்சாரணியத்தை ஆரம்பிக்கும் செயற்திட்டம் முல்லைத்தீவில் ஆரம்பம்



**மாங்குளம் குறூப் நிருபர்**

சமூக அமைப்புகளினூடாக பெண்சாரணியத்தை ஆரம்பிக்கும் செயற்திட்டமானது இந்து கலாசார அமைச்சின் ஒத்துழைப்புடன் வடமாகாணத்தில் முதன் முறையாக முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான சமூக சாரணிய தலைவர் பயிற்சி கடந்த வாரம் இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் முல்லைத்தீவுக் கிளையில் நடைபெற்றது.

மூன்று நாட்களை கொண்ட இவ்வதிவிட பயிற்சி நெறியில் அறநெறிப்பாடசாலைகள் மற்றும் மறைக் கல்வியைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். இச்சமூக சாரணிய தலைவர் பயிற்சியின் போது சாரணிய கற்கைநெறி மட்டுமல்லாது தலைமைத்துவ திறன்கள், வாழ்க்கைத்திறன்கள், சுற்றாடல் பாதுகாப்பு, முதலுதவி போன்ற பல்வேறு விடயங்கள் கற்பிக்கப்பட்டன.

# பாடசாலை அதிபர் அறைந்ததில் மாணவனின் செவிப்பறை பாதிப்பு

**யாழ். விசேட நிருபர்**

காரைநகர் பாடசாலையொன்றில் அதிபர் தாக்கியதில் க.பொ.த. சாதாரண தரத்தில் பயிலும் மாணவர் ஒருவரின் செவிப்பறை பாதிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் மாகாண கல்வி அமைச்சின் அறிவுறுத்தலில் ஒழுக்காற்று விசாரணையும் நடைபெறவுள்ளதாக அறிய முடிகிறது. கடந்த வெள்ளிக்கிழமை அதிபரின் தாக்குதலுக்கு உள்ளான நிலையில், காதில் ஏற்பட்ட வலி காரணமாக மாணவன், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்த சனிக்கிழமை அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு மருத்துவ சோதனையில் மாணவனின் ஒரு காதின் செவிப்பறை பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் சட்ட மருத்துவ அதிகாரியின் விசாரணைகள் இடம்பெற்றது. அத்துடன், சம்பவம் தொடர்பில் முறைப்பாட்டினைப் பெற்ற யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்குமாறு ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு அறிக்கையிட்டுள்ளனர்.

மேலும் சம்பவம் தொடர்பில் அறிந்த வடக்கு மாகாண கல்வி அமைச்சு உரிய விசாரணைகளை முன்னெடுத்து அறிக்கையிடுமாறு அதிகாரிகளுக்கு பணித்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை மாணவனை அழைத்த அதிபர் காற்சட்டை பொக்கெற்றுக்குள் கைகளை வைத்திருக்குமாறு தெரிவித்துவிட்டு 7 தடவைகள் காதுகளில் அறைந்துள்ளார் என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிவிலியன்களின் தொழில் உரிமையை இராணுவத்தினர் தடுக்க முடியாது

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவுறுத்து

**ஓமந்தை விஷேட நிருபர்**

அரசியலமைப்பு சட்டத்தின் உறுப்புரை 14 இன் கீழ் சிவிலியன்களுக்கு இருக்கும் சட்டபூர்வமான தொழில் செய்யும் உரிமையை தடுப்பதற்கு இராணுவத்தினருக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் இராணுவத்தினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் அவ்வாறான நடவடிக்கை சிவிலியன்களின் அடிப்படை உரிமை மீறல்களாக கருதப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




கடந்த வியாழக்கிழமை (30) ஆணைக்குழுவின் திருகோணமலை பிராந்திய காரியாலயத்தில் இடம் பெற்ற விசாரணைகளை அடுத்தே குறித்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது,

இவ் விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

புல்மோட்டை பகுதியில் செங்கற் சூழை நடாத்தி வந்த 4 பிள்ளைகள் கொண்ட குடும்பஸ்தர் ஒருவர் நான்கு வருடமாக குச்சவெளி பிரதேச சபையின் அனுமதியை பெற்று அவருடைய உறவினர் ஒருவரின் காணியில் சிறியளவிலான செங்கல் சூழை ஒன்றினை நடத்தி வந்துள்ளார். எனினும் அப்பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினருக்கும் அவருக்கும் இடையில் எழுந்த தனிப்பட்ட பிரச்சினைகளை அடுத்து அக் குடும்பஸ்தர் தொழில் செய்யும் இடத்திற்கு சென்ற இராணுவத்தினர் அவரை தொடர்ச்சியாக அச்சுறுத்தி வந்துள்ளதுடன் அவரை குறித்த தொழில் செய்யும் பகுதியில் இருந்து பொருட்களையும், தொழிலையும் அப்புறப்படுத்துமாறு தெரிவித்துள்ளனர்.

அப்பகுதியில் சுமார் 15 நபர்கள் செங்கல் சூழை நாடாத்தி வருகின்ற போதிலும் குறித்த குடும்பஸ்தர் தம்மை மட்டும் இராணுவத்தினர் தொழில் செய்யாது தடுப்பதாக அச்சமடைந்த குடும்பஸ்தர் புல்மோட்டை பொலிஸ் நிலையத்தின் கவனத்திற்கு விடயத்தை கொண்டுவந்த போதும் அவர்களால் போதுமான நடவடிக்கை எவையும் எடுக்காததனால், அவ்விடயத்தினை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் திருகோணலை காரியாலயத்திற்கு முறைப்பாடாக கடந்த மே 2021 கொண்டு வந்திருந்தார்.

இம் முறைப்பாடு ஆணைக்குழுவினால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே 'சிவிலியன்களுக்கு அரசியலமைப்பு சட்டத்தின் கீழ் உள்ள சட்டபூர்வ தொழில் அடிப்படை உரிமையை இராணுவத்தினர் தடுக்க முடியாது' என அறிவுறுத்தப்பட்டுள்ளது

இவ்விசாரணைக்கு பாதிக்கப்பட்டவர் சார்பில் சட்டத்தரணி அமானுல்லா தோன்றியதுடன் வாதங்களை முன்வைத்திருந்தார். பிரதிவாதிகள் தரப்பில் புல்மோட்டை அரிசிமலை இராணுவ முகாமின் பொறுப்பதிகாரி, 62 படைப்பிரிவின் தலைமை அதிகாரி, இராணுவ தலைமையகத்தின் சட்டத்தரணி போன்றோர் தோன்றியிருந்தனர்.

ஆணைக்குழு சார்பில் விசாரணை உத்தியோகஸ்தர்கள், பிராந்திய இணைப்பாளரும் சட்டத்தரணியுமாகிய ஆர்.எல்.வசந்தராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

விசாரணையின் இறுதியில் இரு தரப்பிலும் எட்டப்பட்ட இணக்கப்பாட்டிற்கு அமைய குறித்த முறைப்பாடு சமரசப்படுத்தலின் அடிப்படையில் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதுடன் குடும்பஸ்தரது தொழில் நடவடிக்கைக்கு இராணுவத்தினரால் எவ்வித தடங்கல்களும் ஏற்படுத்தப்படாது என இறுதியில் எழுத்து மூலமான ஆவணம் பெற்றுக்கொள்ளப்பட்டதனையடுத்து முறைப்பாடு முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.




## தோட்ட குடியிருப்புகளில்

# எரிவாயு வெடித்தால் பெரும் ஆபத்து

### அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் –கணபதி கணகராஜ்

**ஹற்றன் விசேட நிருபர்**



மலையகத்தில் அண்மைக்காலமாக எரிவாயு வெடிப்பு சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இது மிக கவலைக்குரிய விடயமாகவும், கடந்த மூன்று தினங்களுக்குள் ஹற்றன், தலவாக்கலை, கொட்டகலை உள்ளிட்ட பகுதிகளில் பதிவாகியுள்ளன. ஆகவே இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவதனை தடுத்து நிறுத்துவதற்கு அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவருமான கணபதி கணகராஜ் தெரிவித்தார். எரிவாயு அடுப்பு வெடிப்பு தொடர்பாக நேற்று ஹற்றனில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் போது கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர்,..

மலையகத்தை பொறுத்தளவில் பெரும்பாலான மக்கள் தொடர் குடியிருப்புக்களிலேயே வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறான ஒரு சூழ் நிலையில் வெடிப்பு சம்பவம் ஒன்று ஏற்பட்டால் முழு தொடர் குடியிருப்பினையே அது அழித்து விடும். ஆகவே இவ்வாறான சம்பவங்கள் மக்களை அச்சுறுத்துவதாகவே அமைந்துள்ளன.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வாழும் இம்மக்களின் பாதுகாப்பை அரசு உறுதி செய்ய வேண்டும்.



கொழும்பு மாநகரசபை மற்றும் கனேடிய உயர்ஸ்தானிகார் காரியாலயத்துடன் இணைந்து UNFPA அமைப்பின் ஏற்பாட்டில் எமது நாட்டில் பாலின அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான உலகளாவிய செயற்பாட்டின் ஓர் அங்கமாக நிகழ்வொன்று இடம்பெற்றது . இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போது,...

# நல்லதண்ணி பொலிஸ் நிலைய சார்ஜன்ட் சடலமாக மீட்பு

நல்லதண்ணி பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் சார்ஜன்டாக கடமையாற்றிய ஒருவர், கடமைகள் முடிந்து கெலிஓயா பிரதேசத்திலுள்ள தனது வீட்டுக்குத் திரும்பிய நிலையில் காணாமல் போன அவரது சடலம், மகாவலி கங்கையிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக பேராதனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் 3 பிள்ளைகளின் தந்தையான 55 வயதுடைய சமரநாயக்க என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(29) ஆம் திகதி தனது கடமைகளை முடித்துக்கொண்டு கெலிஓயா நகருக்கு வருகை தந்த அவர், அதிக மழை காரணமாக வீட்டுக்கு வருவதற்கு தாமதமாகும் என வீட்டாருக்கு அலைபேசி ஊடாக அறிவித்த பின்னர், அவருடனான தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் நேற்று (30) இராணுவத்தினரின் உதவியுடன் பேராதனை பொலிஸார் மகாவலி கங்கையில் தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்த போது, குறித்த சார்ஜனின் பயணப் பை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன், இன்று (1) அவரது சடலமும் மீட்கப்பட்டுள்ளது.



ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்பட்டுள்ள கிராமத்தின் எழுச்சி வேலைத்திட்டத்தின் கீழ் ஜனாதிபதி செயகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சப்ரகமுவ மாகாண பாடசாலை மாணவர்களுக்கு வாசிப்பு நூல்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு தெஹியோவிட்ட பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சுதத் மஞ்சுல, சப்ரகமுவ மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் அஜித் சாமிந்த. தெஹியோவிட்ட பிரதேச சபை தலைவர் துமிது சாமிந்த உட்பட அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர். *(படம்: காவத்தை தினகரன் விசேட நிருபர்)*

## கும்புக்கந்துறை

# 35 வருடங்கள் பழைமையான தொங்கு பாலத்தை திருத்த நடவடிக்கை

**அக்குறணை குறூப் நிருபர்**

தெல்தெனிய கும்புக்கந்துறை முஸ்லிம் கிராமத்திலுள்ள பழுதடைந்த தொங்கு பாலத்தை மத்திய மாகாண ஆளுநர் நேரடியாக சென்று பார்வையிட்டு பெரும் அனர்த்தங்கள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கும் படி தனது அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். மேற்படி தொங்கு பாலம் விக்டோரியா நீர் தேக்கம் காரணமாக நீரில் மூழ்கிய பகுதியில் உள்ள கும்புக்கந்துறை மற்றும் ஹிஜ்ராபுர பிரதேச மக்களுக்கு போக்குவரத்துச் செய்ய அமைக்கப்பட்டது. இது சுமார் 35 வருடங்கள் பழைமையானது. 105 அடி நீளமும் சுமார் 100 அடி உயரமும் கொண்டது.

## USAID SCORP அமைப்பின் உதவியில்

# அக்குறணை நகரில் ஏற்படும் வெள்ள அனர்த்தத்தை தடுக்க செயற்றிட்டம்



**மாவத்தகம தினகரன் நிருபர்**

USAID SCORP அமைப்பின் உதவியோடு அக்குறணை பிரதேச சபை மற்றும் அக்குறணை பிரதேச செயலகம் மற்றும் சிவில் அமைப்புக்கள் இணைந்து அக்குறணை நகரில் ஏற்படும் வெள்ள அனர்த்தத்தை தடுக்கும் செயற்றிட்டம் ஒன்றை மேற்கொண்டு வருவதாக அக்குறணை பிரதேச சபையின் தவிசாளர் இஸ்திஹார் இமாமுதீன் தெரிவித்துள்ளார்.

அடிக்கடி அக்குறணை நகரில் ஏற்படும் பீங்கா ஓயா வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்துவதற்கான விசேட கலந்துரையாடல் USAID SCORP அமைப்பின் செயற்திட்ட பணிப்பாளர் ட்ரிவிஸ் கார்டினர் மற்றும் அங்கத்தவர்களோடு அக்குறணை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்ட அக்குறணை பிரதேச சபையின் தவிசாளர் இஸ்திஹார் இமாமுதீன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,..

ஆற்றினுள் வெள்ளப் பெருக்கினால் சேர்ந்திருக்கும் சேறுகளை அப்புறப்படுத்தி ஆற்றின் நீரோட்டத்தை ஒழுங்குபடுத்துவதன் ஊடாக இந்த வெள்ள அனர்த்தத்தை முடிவுக்கு கொண்டுவரக் கூடிய இச்செயற்றிட்டம் டிசம்பர் மாதம் இறுதிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட இருக்கின்றது.

USAID SCORP அமைப்பின் உதவியோடு அக்குறணை பிரதேச சபை, அக்குறணை பிரதேச செயலகம், அக்குறணை ஜம்மியதுல் உலமா, அக்குறணை வர்த்தக சங்கங்கள் உட்பட சிவில் அமைப்புக்கள் இணைந்த வகையில் இந்த செயற்றிட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

அக்குறணையின் புவியியல் தரைத்தோற்ற அம்சங்கள் குறித்தும் கடந்த அனர்த்தங்களின் போது மேற்கொள்ளப்பட்ட அறிக்கைகள் குறித்தும் இந்த கலந்துரையாடலில் ஆராயப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினையை முற்றிலுமாக முடிவுக்கு கொண்டு வரும் வகையில் குறுகிய கால, நீண்ட கால திட்ட வரைபுகளை உருவாக்கி செயற்படுத்த வேண்டி இருக்கிறது. கூடிய விரைவில் செயற்படுத்த எதிர்பார்த்துள்ள இந்த குறுகிய கால திட்டமானது அக்குறணை பிரதேசத்தின் வெள்ள பிரச்சினைக்கு முழுவதுமான தீர்வினை பெற்றுக் கொள்வதற்குரிய காத்திரமான அத்திவாரமாக அமையுமென அவர் தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடலின் போது அக்குறணை பிரதேச செயலாளர் திருமதி குமாரி அபேசிங்க, அக்குறணை ஜமியத்துல் உலமா தலைவர் மௌலவி சியாம்.வர்த்தக சங்க செயலாளர் நஸ்லான் உட்பட அங்கத்தவர்கள், அரச உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# கோதுமைமா விலை அதிகரிப்பு மக்களை மேலும் பொருளாதார சுமைக்கு தள்ளியுள்ளது



கோதுமைமா விலை அதிகரிக்கப்பட்டமையானது பாமர மக்களை கடுமையாக பாதிப்புக்குள்ளாகியுள்ளது என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார். கோதுமை மா விலை அதிகரிப்பு தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள செந்தில் தொண்டமான், கோதுமைமா விலை அதிகரிக்கப்பட்டுள்ளமை சாதாரண பாமர மக்களை நிலைகுலையச் செய்துள்ளது. அவர்களுக்கு இந்த விலை அதிகரிப்பை ஒரு போதும் எதிர்கொள்ள முடியாது.

அத்தியாவசிய பொருட்கள் உட்பட மக்களின் வாழ்க்கை செலவு அதிகரித்துள்ள நிலையில் கோதுமை மா விலை அதிகரிப்பு மக்களை மேலும் பொருளாதார நெருக்கடிக்கு தள்ளியுள்ளதுடன், பெருந்தோட்ட மக்களின் வாழ்விலும் அதிக பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தோட்டத் தொழிலாளர்கள் தங்களது நாளாந்த உணவின் பெரும் பகுதியினை கோதுமை மாவின் மூலமே பூர்த்தி செய்து வருகின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில் இவர்கள் தற்போது அதிகரிக்கப்பட்ட மாவின் விலை காரணமாக மேலும் மேலும் பொருளாதார சுமைக்கு தள்ளப்படுவதுடன், பொருட்களின் விலை அதிகரிப்பு ஈடுகொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளமை இம்மக்களின் வாழ்வியலில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

பொருட்களின் விலை அதிகரிப்பு ஈடு கொடுக்க முடியாத சூழலில் கோதுமை மாவின் விலை அதிகரிப்பு மேலும் பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த விலை அதிகரிப்பை உடனடியாக குறைக்க கோதுமை மாவினை அரசு கொள்வனவு செய்து மக்களுக்கு குறைந்த விலையில் விநியோகம் செய்ய வேண்டுமென செந்தில் தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார்.

# மண்சரிவு ஆபத்துள்ள மாத்தளை பிரதேசங்களில் காரீயம் அகழ்வதற்கான அனுமதி இரத்து

**தம்புள்ள தினகரன், மாத்தளை சுழற்சி நிருபர்கள்**

மாத்தளை, அம்பன் கங்கைக் கோரளைப் பிரதேச செயலகப் பிரிவில் மண்சரிவு ஆபத்து நிலவும் புஸ்ஸல்ல என்ற பிரதேசத்தில் காரீயம் அகழ்வு மேற்கொள்ளும் பொருட்டு கொழும்பில் அமைந்துள்ள புவியியல் மற்றும் சுரங்க அகழ்வு செயற்பாடு தொடர்பான முன்னணி நிறுவனத்துக்கு வழங்கப்பட்டிருந்த அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு மாத்தளை மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு சட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு தீர்மானம் மேற்கொண்டது.

மேற்படி பிரதேசத்தில் மண் சரிவு ஆபத்து காணப்படுவதாக மாவட்ட தேசிய கட்டட ஆய்வு மையம் அறிக்கை சமர்ப்பித்திருந்த நிலையில் அம்பன் கங்கைக் கோரளை பிரதேச செயலாளரின் அனுமதியைக் கூட பெறாமல் இவ்வாறு காரீய அகழ்வு நடவுடிக்கைகளுக்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள விவகாரம் மாத்தளை மாவட்ட மேலதிக செயலாளர் இஷான் விஜேதிலக்க தலைமையில் மாத்தளை மாவட்ட செயலகத்தில் திங்கட் கிழமை இடம்பெற்ற மாத்தளை மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு சட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போது வெளியானது.

குறித்த புஸ்ஸல்ல என்ற பிரதேசம் மண்சரிவு ஆபத்து மிகுந்ததென தேசிய கட்டட ஆய்வு மையம் அறிக்கை வெளியிட்டிருந்த நிலையிலும் புவியியல் மற்றும் சுரங்க அகழ்வு செயற்பாட்டு அலுவலகம் இவ் அனுமதிப் பத்திரத்தை வழங்கியிருப்பதாக, அம்பன் கங்கை கோரளைப் பிரதேச செயலாளர் ஹர்ஷ சேனாதீர இதன் போது தெரிவித்தார்.

## மலையகத்தில்

# எரிவாயு அடுப்பு வெடிப்பு சம்பவங்கள் அதிகரிப்பு

### உடன் நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

**ஹற்றன் விசேட நிருபர்**

மலையகப் பகுதியில் கடந்த சில தினங்களாக எரிவாயு கசிவு மற்றும் எரிவாயு அடுப்பு வெடிப்பின் காரணமாக மக்கள் மத்தியில் பாரிய அச்சம் தோன்றியுள்ளன. எனவே இது குறித்து உடனடியாக சரியான தீர்வினை பெற்றுக்கொடுத்து பொது மக்கள் பாதுகாப்பினை உறுதிப்படுத்த வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

நேற்று (01) தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவாக்லை மேல் கொத்மலை புதிய வீடமைப்பு திட்ட பகுதியான வோக்கர்ஸ் பகுதியில் கேஸ் அடுப்பு ஒன்று வெடித்துள்ளது

தேநீர் தயாரிப்பதற்காக கேஸ் அடுப்பினை மூட்டிவிட்டு பின்னர் வெளியில் சென்ற போது குறித்த அடுப்பு வெடித்துள்ளதாகவும் அதனால் அடுப்பு முழுமையாக சேதமடைந்துள்ளதாகவும் இதில் எவருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளன.

இதே வேளை நேற்று முன்தினம் திம்புல்ல பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பத்தனை பெய்த்திலி தோட்டத்திலும் எரிவாயு அடுப்பு ஒன்று வெடித்துள்ளது.

தனது தந்தையும் தாயும் வெளியில் சென்றுள்ள நிலையில் பாடசாலை மாணவி ஒருவர் தேநீர் தயாரிப்பதற்காக கேஸ் அடுப்பினை போட்டுவிட்டு தொலைக்காட்சிப் பார்த்துக் கொண்டு இருந்த போது குறித்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

அத்தோடு ஹற்றன் கொழும்பு பிரதான வீதியில் மல்லியைப்பூ பகுதியில் அமைந்துள்ள தேநீர் கடையொன்றில் எரிவாயு குழாய் பொருத்தப்பட்டுள்ள பகுதி வெடித்து சிதறியதில் எரிவாயு அடுப்பு உட்பட கடையின் உணவு பண்டங்களும் சேதமடைந்துள்ளன.

இந்த வெடிப்பு சம்பவங்கள் காரணமாக பொது மக்கள் மத்தியில் பாரிய ஒரு அச்சம் தோன்றியுள்ளன. இதனால் சிலர் சமையல் எரிவாயு கொள்கலன்களை வெளியில் வைத்து சமைத்து வருவதாகவும் இன்னும் சிலர் அச்சம் காரணமாக எரிவாயு முடிந்த நிலையிலும் அதனை வாங்காது பல்வேறு அவஸ்தைகளுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. எனவே பாதுகாப்பினை உறுதி செய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# கிழக்கின் குரல்



## மட்டு மாவட்ட உள்ளூராட்சிமன்றங்களில் கடமையாற்றும் தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கவனஈர்ப்பு போராட்டம்








(புதிய காத்தான்குடி தினகரன் ,பெரிய போரதீவு தினகரன் நிருபர்கள்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் பல வருடங்களாக தற்காலிக, அமைய மற்றும் பதிலீட்டு அடிப்படையில் சேவையாற்றும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு வலியுறுத்தி புதன்கிழமை (01) ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. மண்முனைப் பற்று பிரதேச சபை மற்றும் காத்தான்குடி நகர சபைகளுக்கு முன்னால் ஒன்று கூடிய தற்காலிக, அமைய மற்றும் பதிலீட்டு அடிப்படையில் சேவையாற்றும் ஊழியர்கள் இந்த கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆறு வருடங்களுக்கு மேலாக தற்காலிக, அமைய மற்றும் பதிலீட்டு அடிப்படையில் சேவையாற்றும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு இதன் போது வலியுறுத்தப்பட்டது.

மண்முனைப் பற்று பிரதேச சபைக்கு முன்னால் இடம் பெற்ற இக் கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது, அவர்களது கோரிக்கைகளடங்கிய மகஜரை மண்முனைப் பற்று பிரதேச சபை தவிசாளர் டி.தயானந்தனிடம் கையளித்ததுடன், இதில் பிரதி தவிசாளர் எஸ்.சுந்தரலிங்கம் உட்பட பிரதேச சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இதன் போது இந்த அரசை நம்புகின்றோம், எமது சேவைக்கு மதிப்பளியுங்கள், இன்னும் கால நீடிப்பு வேண்டாம், இந்த அரசினால் மட்டுமே இந்த நியமனத்தை தர முடியும், இது எமது நியாயமான கோரிக்கையாகும் என்பன போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோகங்களை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தாங்கியிருந்தனர்.

## பாடசாலைக்கு உபகரணங்கள் கையளிப்பு



(நிந்தவூர் குறூப் நிருபர்)

நிந்தவூர் பிரதேச சபையின் உதவித் தவிசாளர் வை.எல்.சுலைமாலெவ்வையின் முயற்சியினால் நிந்தவூர் அல்மினா பாடசாலைக்கு , பாடசாலை உபகரணங்கள் திங்கட்கிழமை (29) கையளிக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் எம்.எச். ராபிஹு, விடுத்த வேண்டுகோளிற்கு அமைவாக, உதவித் தவிசாளரினால் இவ் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. இதில் பாடசாலை அலுவலகத்திற்குத் தேவையான தளபாடவகைகள், ஒலிபெருக்கி சாதனங்கள் மற்றும் பிரிண்டர் உள்ளிட்ட பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். புவனேந்திரன், கல்முனை கல்வி வலய ஆரம்ப பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம். ரஸீன் உள்ளிட்ட பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## லக்பொஹர நிறுவனத்திற்கு சேதனை பசளை கையளிப்பு

கந்தளாய் தினகரன் நிருபர்

திருகோணமலை கந்தளாய் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினால் கந்தளாய் லக்பொஹர நிறுவனத்துக்கு 63 மெட்ரிக் தொன் பதப்படுத்தப்பட்ட சேதனை பசளை திங்கட்கிழமை (29) கையளிக்கப்பட்டது.

கந்தளாய் பிரதேசத்திலுள்ள விவசாயிகளுக்கு வழங்கவென இப் பசளை கையளிக்கப்பட்டுள்ளது. ஏற்னவே நாற்பதாயிரம் கிலோ கிராம் சேதன பசளை வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக லக்பொஹர நிறுவனத்தின் கந்தளாய் கிளை முகாமையாளர் தெரிவித்தார்.

## வெருகல் பிரதேச சபை வரவு செலவுத் திட்டம் தோற்கடிப்பு

தோப்பூர் குறூப் நிருபர்

திருகோணமலை வெருகல் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தவிசாளரினால் திங்கட்கிழமை (29) சபையில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், வரவு செலவுத் திட்டம் தோல்வியடைந்துள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் வசமுள்ள வெருகல் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தவிசாளர் க.சுந்தரலிங்கத்தினால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. மொத்த உறுப்பினர்கள் 13 பேரில் 06 உறுப்பினர்கள் ஆதரவாகவும், 07 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்து ஒரு மேலதிக வாக்கினால் வெருகல் பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டது.

இதன்போது தமிழ் தேசிய கூட்டமைப்பின் 02 உறுப்பினர்கள், ஐக்கிய தேசிய கட்சியின் 02 உறுப்பினர்கள், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் 01 உறுப்பினர், சிறிலங்கா சுதந்திர கட்சியின் 01 உறுப்பினர், ஆனந்த சங்கரியின் உதய சூரியனின் ஒரு உறுப்பினருமாக எழுவர் வெருகல் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## திருக்கோவில் பிரதேசத்தில் 150 மாணவர்களுக்கு புலமை பரிசில்





(திருக்கோவில் தினகரன் நிருபர்)

திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் சமுர்த்தி குடும்பங்களைச் சேர்ந்த 150 மாணவர்களுக்கு கல்வி மேம்பாட்டுக்கான சிப்தொர புலமைப் பரிசிலுக்கான காசோலை வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலக சமூர்த்தித் தலைமை முகாமையாளர் பி.பரமானந்தம் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது அரசினால் வழங்கப்படும் சமுர்த்தி குடும்பங்களைச் சேர்ந்த உயர்தர மாணவர்கள் தங்கள் உயர்தர கல்வியை சிறப்பாக முன்னெடுக்கும் நோக்குடன், இப் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டன.

அந்தவகையில் திருக்கோவில் பிரதேசத்தில் சுமார் 150 மாணர்களுக்கு சுமார் 23 இலட்சம் ரூபாவுக்கான காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதுடன், மாணவர் ஒருவருக்கு தலா 15 ஆயிரம் என முதலாம் வருடத்திற்கான காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் , உதவிப் பிரதேச செயலாளர் கே.சதிசேகரன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.அனோஜா , கணக்காளர் ஏ.அரசரெத்தினம், தம்பிலுவில் விநாயகபுரம் சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## பெரியநீலாவணை பிரதேசத்தில் பொலிஸ் நிலையம் திறந்து வைப்பு

(பெரியநீலாவணை விசேட நிருபர்)



அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியநீலாவணை பிரதேசத்தில் புதிய பொலிஸ் நிலையம் திங்கட்கிழமை (29) திறந்து வைக்கப்பட்டது.

சுபீட்சத்தின் நோக்கு தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், 20வது புதிய பொலிஸ் நிலையமாக இந்த பொலிஸ் நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கல்முனை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி கே.எச். சுஜித் பிரியந்த தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அம்பாறை மாவட்டத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் எஸ்.எம்.வை. செனவிரத்ன (DIG) பிரதம அதிதியாக கலந்து கொண்டு பொலிஸ் நிலையத்தை திறந்து வைத்தார்.

கிழக்கு மாகாண விசேட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் சட்டத்தரணி எல்.கே.டப்ளியு. கமல் சில்வாவின் வழிகாட்டலுக்கு அமைய நடைபெற்ற இத் திறப்பு விழாவில், அம்பாறை மாவட்டத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டி.ஜெயந்த ரத்நாயக்க, கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே அதிசயராஜ், கல்முனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டி. எச்.டி.எம். எல்.வுத்திக உட்பட மத்திய முகாம், சவளக்கடை, சாய்ந்தமருது, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், பெரிய நீலாவணை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி, கடற்படையினர், இராணுவ அதிகாரிகள், சர்வ மதத் தலைவர்கள், அரச அதிகாரிகள், சிவில் சமூகத்தினர் என பலர் இதில் கலந்து கொண்டனர்.

## நீதியை பெற்று கொடுக்க அரசு பின்னிக்க கூடாது

- கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியம்

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

ஊடகவியலாளர்கள் சுதந்திரமாகச் செயற்படுபவர்கள், அவர்களை யாரும் தாங்கள் விரும்பும் விதத்திற்கு ஏற்ப செயற்படுத்த முடியாது. மக்களுக்கான நீதி மறுக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும், அவற்றை, தான் சார்ந்த ஊடகத்தின் வாயிலாக வெளிப்படுத்துவதற்கு ஊடகவியலாளர்களுக்கு பூரண உரிமையும் சுதந்திரமும் உண்டு.

அண்மையில் திருகோணமலையிலும், முல்லைத்தீவிலும் ஊடகவியலாளர்கள் மிகவும் மோசமாகத் தாக்கப்பட்டுள்ளார்கள். இவற்றுக்கு கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியம் ( கிழக்கு ஊடக மன்றம்) தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவிக்கின்றது.

கடந்த வியாழக்கிழமை (25) திருகோணமலையிலும், சனிக்கிழமை(27) முல்லைத்தீவிலும் ஊடவியலாளர்கள் மிகமோசமாக தாக்கப்பட்டமைக்கு கிழக்கு ஊடக மன்றம் கண்டனம் தெரிவித்து ஞாயிற்றுக்கிழமை விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சுதந்திரமாகச் செயற்படும் ஊடகவியலாளர்களை ஆயுதங்களைக் கொண்டும், அச்சுறுத்தல் போன்ற ஏனைய விடையங்களைக் கொண்டும் அடித்து அடக்க முற்படும் செயலானது பேனா முனையுடன் நேரடியாக போராடும் திறனற்றவர்கள் என்பதையே சுட்டி நிற்கின்றது. கருத்துக்களை கருத்துக்களால் தான் வெல்ல வேண்டும்.

ஊடகவியலாளர்கள் உள்ளதை உள்ளபடி மக்களுக்கு வெளிக்காட்டுபவர்கள். அதனை தடுக்க முற்படுபவர்களை ஊடகத்துறை அமைச்சு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அண்மையில் திருகோணமலையிலம், முல்லைத்தீவிலும் தாக்கப்பட்டு பாதிக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க பொலிசாரும் அரசாங்கமும் பின்வாங்கக்கூடாது.

## ஆசிரியர் பயிற்சி கலாசாலை மாணவர்களுக்கு அன்டிஜன்

மட்டக்களப்பு குறூப் நிருபர்

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சி கலாசாலை ஆசிரிய மாணவர்களுக்கு திங்கட்கிழமை (29) அன்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.



மட்டக்களப்பு சுகாதார வைத்தியதிகாரி டொக்டர் எஸ்.கிரிசுதனின் மேற்பார்வையில், பொது சுகாதார பரிசோதகர் ரீ.மிதுன்ராஜ் தலைமையிலான பொது சுகாதார பரிசோதகர்களினால் இப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. குறித்த ஆசிரியர் பயிற்சி கலாசாலையிலிருந்து பரீட்சையொன்றிற்குத் தோற்றவுள்ள 120 ஆசிரிய மாணவர்களுக்கு இவ் அன்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. கல்லூரி அதிபர் எம்.சி.ஜூனைத் முன்னிலையில் ஆசிரியர் மாணவர்களுக்கு அன்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அட்டாளைச்சேனை கல்வியியற் கல்லூரி கல்வி நடவடிக்கைக்காக மீள கையளிப்பு

- பீடாதிபதி கே. புண்ணியமூர்த்தி

(ஒலுவில் விசேட நிருபர்)

கொவிட் தனிமைப்படுத்தல் நிலையமாக செயற்பட்டு வந்த அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரி கல்வி நடவடிக்கைகளுக்காக மீள கையளிக்கப்பட்டுள்ளதாக, அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கே. புண்ணியமூர்த்தி தெரிவித்தார். நாட்டில் அதிகரித்து காணப்பட்ட கொவிட் தொற்று காலப்பகுதியில் அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியை தனிமைப்படுத்தல் நிலையமாக கடந்த 2020ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம்10ஆம் திகதி முதல் செயற்பட்டு வந்தது.

தற்போது தேசிய கல்வியியற் கல்லூரி வளாகம் நவம்பர் மாதம் 22ம் திகதி இராணுவத்தினரால் மீள கையளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கல்லூரியின் நிர்வாக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், கல்வியியற் கல்லூரி இறுதியாண்டு பயிலுனர்களுக்கான கற்கை நெறிகள் பூர்த்தியடைந்துள்ளதாகவும், பயிலுனர்கள் பாடசாலைகளில் உள்ளக கற்பித்தல் பயிற்சிக்கு அனுமதிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

கல்வியியற் கல்லூரிக்கு இணைக்கப்பட்டுள்ள புதிய பயிலுனர்களுக்கான கற்பித்தல் செயற்பாடுகள் ஆரம்பிப்பது தொடர்பாக, இதுவரை தீர்மானிக்கப்படவில்லையெனவும், கற்பித்தல் செயற்பாடுகள் ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையாடலின் பின்னரே தீர்மானிக்கப்படுமெனவும் தெரிவித்தார்.



நிந்தவூர் அதிபர்கள் சங்கம் இணைந்து முன்னாள் மாகாண கல்விப் பணிப்பாளர் எம். ரீ.ஏ.நிசாமுக்கு ஏற்பாடு செய்த பாராட்டு விழாவில், முகாமைத்துவத்திற்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் முகம்மட் பௌஸ் நினைவுப்படிகம் வழங்குவதையும், அருகில் கல்வி அதிகாரிகள் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்;நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)

# கிழக்கின் குரல்



## கொவிட் தடுப்பூசி மருந்துகளை பாதுகாக்க;

# கல்முனை பிராந்திய வைத்தியசாலைகளுக்கு குளிர்சாதன பெட்டிகள் கையளிப்பு

(கல்முனை விசேட நிருபர்)

கல்முனைப் பிராந்தியத்தில் கொவிட்19 ஒழிப்புத் திட்டத்தை மேம்படுத்தும் பொருட்டு உலக வங்கி நிதியுதவியின் கீழ், கொவிட் 19 தடுப்பூசி மருந்துகளை பாதுகாப்பதற்காக ஒரு தொகுதி குளிர்சாதனப் பெட்டிகள் சுகாதார அமைச்சினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இவற்றை இப்பிராந்தியத்திலுள்ள 13 பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களுக்கும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை நிர்வாகத்தின் கீழுள்ள 04 ஆதார வைத்தியசாலைகளுக்கும் கையளிக்கும் நிகழ்வு புதன்கிழமை (01) பணிமனை மண்டபத்தில் நடைபெற்றது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், பிரதிப் பணிப்பாளர் டொக்டர் எம்.எம்.வாஜித், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் திட்டமிடல் வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சி.எம். மாஹிர் உட்பட பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் குறித்த வைத்தியசாலைகளின் அத்தியட்சகர்களும் உத்தியோகத்தர்களும் பங்கேற்றிருந்தனர்.

கல்முனை பிராந்தியத்தில் கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்காக பல்வேறு வேலைத்திட்டங்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், உலக வங்கி நிதியுதவி திட்டத்தின் கீழ்



கொவிட்19 தடுப்பூசி மருந்துகளை பாதுகாப்பதற்காக எமது பிராந்தியத்திற்கும் குளிர்சாதனப் பெட்டிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்ட சுகாதார அமைச்சுக்கு, பிராந்திய சுகாதாரத்துறையின் சார்பில் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்வதாக டொக்டர் ஜீ.சுகுணன் இதன்போது குறிப்பிட்டார்.

# சேவைநலன் பாராட்டு விழா

(காரைதீவு குறூப் நிருபர்)

நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) கடந்த காலங்களில் பணியாற்றிய அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கான சேவைநலன் பாராட்டு விழா செவ்வாய்க்கிழமை (30) அதிபர் சீ.பாலசிங்கன் தலைமையில் நடைபெற்றது.

இப் பாடசாலையில் கடமையாற்றிய முன்னாள் அதிபர் நா.பிரபாகர், ஆசிரியர்களான ஆ.குணசேகரன், ச.விமலச்சந்திரன், பி.வி.குணரெட்ண , தி.சிவகுமார், திருமதி எஸ்.ரஜனிகாந்த், திருமதி வி.தயாசீலன் ஆகியோர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

சேவைநலன் பாராட்டு விழாவிற்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளரும் பாடசாலை மேம்பாட்டுத் திட்ட இணைப்பாளருமான வி.ரி. சகாதேவராஜா கலந்து சிறப்பித்தார்.

பாராட்டப்படும் அனைத்து முன்னாள் அதிபர் ஆசிரியர்களின் கடந்தகால சேவைகள் பணிகள் பற்றி பிரதிஅதிபர் திருமதி நிலந்தினி ரவிச்சந்திரன் சேவை நயப்புரையாற்றினார். பாராட்டப்பட்டவர்களும் உரையாற்றினர்.



முன்னதாக அதிதி உள்ளிட்ட அதிபர் ஆசிரியர்கள் மாலைசூட்டப்பட்டு பாண்ட் வாத்தியம் சகிதம் அழைத்து வரப்பட்டனர்.

பிரதி அதிபர் திருமதி நிலந்தினி ரவிச்சந்திரனின் ஒழுங்கமைப்பில், சிரேஸ்ட ஆசிரியர் என்.கோடீஸ்வரனின் நெறியாள்கையில் நடைபெற்ற இவ்விழாவில், முன்னாள் அதிபர் ஆசிரியர்கள் பொன்னாடை போர்த்தப்பட்டு வாழ்த்துப்பத்திரம் வாசித்து வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மூதூர் பிரதேசத்தில் டெங்கு நோயை கட்டுப்படுத்த இறுக்கமான அறிவிப்பு

### - சுகாதார வைத்திய அதிகாரி ஹில்மி

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் பிரதேசத்தில் டெங்கு நோயாளர்கள் இதுவரை 36 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். இந்நிலையில் இக்கிராம சூழலில் வசிப்போர்கள், பொது சுகாதார பாதுகாப்பு வழிகாட்டல்களை மிக கட்டாயமாக பின்பற்றுமாறு பொது மக்களுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக, மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி எம்.பி.எம்.ஹில்மி செவ்வாய்க்கிழமை (30) தெரிவித்தார்.

மூதூர் அக்கரைச்சேனை கிராம சேவகர் பிரிவிலும் ஏனைய பகுதிகளிலுமாக டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர். இச்சூழலில் டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கான காரணியாக வீட்டு கூரை பீலிகள், சலவை இயந்திரம், நீர் தேங்கும் இடங்கள், நீர் பரல்கள், பாவனைக்கு உதவாத கழிவுப் பொருட்களில் இருந்தும் டெங்கு நுளம்புகளின் பெருக்கம் அதிகரிக்கக் கூடிய நிலைமை காணப்படுகின்றது.

மேலும் ஒவ்வொரு குடியிருப்பாளர்களும் தமது குடியிருப்பு வெளிச்சூழலைப் போல் வீட்டின் உட்சூழலையும் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். நுளம்புகள் பெருக்க காரணமான கழிவுப் பொருட்களை அகற்ற வேண்டும்.

அத்துடன் பல்வேறு பொது அமைப்புக்களின் பங்களிப்போடும் சிரமதானப் பணிகள் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு கழிவுகள் அகற்றப்படுகின்றன.

அலட்சிய போக்கில் உள்ள குடியிருப்பாளர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பொது மக்களுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

# பாய் பின்னும் நெசவு நிலையத்தை மீண்டும் ஆரம்பிக்க கள விஜயம்

மட்டக்களப்பு விசேட நிருபர்

கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக, மண்முனை மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட நெல்லூர் கிராமத்தில் பாரம்பரிய பன்பாய் பின்னும் நெசவு நிலையத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கான கள விஜயத்தை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூபாலபிள்ளை பிரசாந்தன் மற்றும் கிழக்கு மாகாண கிராமிய தொழில் அபிவிருத்தி உதவிப் பணிப்பாளர் கி.இளங்கோவன் ஆகியோர் புதன்கிழமை (01) மேற்கொள்ளப்பட்டனர்.

கடந்த 5 வருடங்களாக பராமரிப்பு இன்மையினால் சேதமடைந்துள்ள நெசவு நிலையத்தின் நிலைமையை பன்பாய் பின்னும் தொழிலாளர்கள் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவனேசதுரை சந்திரகாந்தனின் கவனத்திற்கு கொண்டு சென்றதற்கு அமைய, அவரின் ஆலோசனைக்கிணங்க தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூபாலபிள்ளை பிரசாந்தன் உள்ளிட்ட குழுவினர் விஜயம் செய்து சேதமடைந்துள்ள நிலையத்தை மீண்டும் இயங்க வைப்பதற்கான சாத்தியவள ஆய்வுகளை மேற்கொண்டனர்.



கள விஜயத்தின் பின்பு கிழக்கு மாகாண கிராமிய தொழில் அபிவிருத்தி உதவிப் பணிப்பாளர் இது பற்றி கருத்துத் தெரிவிக்கையில், தங்களது திணைக்களத்தின் கீழ் உள்ள மறைந்து செல்லும் பாரம்பரிய பன்நெசவு நிலையமானது இயங்காது இருப்பது தொழிலாளர்களின் வினைத்திறன் குறைவதோடு, அவர்களின் வாழ்க்கைக்கான வாழ்வாதார உதவி இல்லாமல் இருப்பது கவலையளிக்கின்றது.

அத்தோடு எமது சூழலில் கிடைக்கும் பன்னை மூலப்பொருளாக பயன்படுத்தி பின்னப்படும் பாய்கள் செயற்கையான பாய்களைப் பார்க்கிலும் சுகாதார மேம்பாடு கூடியது மட்டுமல்லாமல், வேலையற்ற இளம் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும் எனத் தெரிவித்தார்.

# பிரதேச செயலாளராக நியமனம்



ஆரையம்பதி தினகரன் நிருபர்

ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலாளராக கே தனபாலசுந்தரம் புதன்கிழமை (01) முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் ஆரையம்பதி மற்றும் வாகரை கிரான், வாழைச்சேனை கோரளைப் பற்று பிரதேச செயலாளராகவும், முல்லைத்தீவு மேலதிக அரசாங்க அதிபராகவும் கடமையாற்றி தற்போது ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலாளராகவும் கடமையினை பொறுப்பேற்றுள்ளார்.

இவர் தனது சேவைக் காலப் பகுதியில் அந்தந்த பிரதேச மக்களின் நன்மதிப்பைப் பெற்ற ஒருவர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

# பேராசிரியராக பௌசர் நியமனம்



(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானதுறை தலைவர் எம்.ஏ.எம். பௌசர் மிக இளம் வயதில் பேராசிரியராகப் பதவியுயர்வைப் பெற்றுள்ளமை பல்கலைலக்கழக வரலாற்றில் முன்மாதிரியாக அமைந்துள்ளது.

கடந்த 25 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இப் பதிவியுயர்வு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.இப் பதவியுயர்வின் மூலம் கலை, கலாசாரப் பீடத்தின் இரண்டு பேராசிரியர்களைக் கொண்ட ஒரேயொரு துறையாக அரசியல் விஞ்ஞானத்துறை திகழ்கின்றது.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானத் துறையில் விஷேட கற்கையினைப் பூர்த்தி செய்த பேராசிரியர் எம்.ஏ.எம்.பௌசர் அத்துறையில் முதல் வகுப்பு பட்டத்தினைப் பெற்ற முதலாவது மாணவர் என்ற பெருமையைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்.

# அதிபரை இடமாற்றுமாறு கோரி மாணவர்கள்,பெற்றோர் ஆர்ப்பாட்டம்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் காத்தான்குடி கல்விக் கோட்டத்திலுள்ள கர்பலா அல்மனார் வித்தியாலய அதிபரை உடனடியாக பாடசாலையை விட்டு இடமாற்றுமாறு கோரி மாணவர்களும் பெற்றார்களும் திங்கட்கிழமை (29) காலை ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர்.

அப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களும் பெற்றோர்களும் குறித்த பாடசாலையின் அதிபரை இடமாற்றுமாறு கோரி சுலோகங்களை தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். குறித்த அதிபர் மாணவர்களை தினமும் ஏசி மன உளைச்சலுக்கு உள்ளாக்குவதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்.

பாடசாலை வளங்களை பாதுகாக்காத அதிபரை உடனே இடமாற்றம் செய்யுங்கள், பாடசாலையில் கொவிட் தொற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காத அதிபரை உடனே இடமாற்றம் செய்யவும் என்பன போன்ற வசனங்கள் எழுதப்பட்ட சுலோகங்களை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கோசங்களை எழுப்பினர். பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியையொருவருக்கு குறித்த அதிபர் காலைக் கூட்டத்தில் மாணவர்கள் மத்தியில் ஏசி





அவமானப்படுத்தியதாகவும், வெள்ளம் காரணமாக பாடசாலை மாணவர்கள் வழமையாக செல்லும் வழி சேரும் சகதியுமாக காணப்படுவதால் பாடசாலைக்கான மற்றய நுழைவாயிலை திறக்காமல் அதிபர் மூடி வைத்திருந்ததாக மாணவர்களின் கல்வியை சீரழிப்பதாக பெற்றோர் தெரிவித்தனர்.

சம்பவத்தை அறிந்த காத்தான்குடி பொலிஸாரும் இங்கு வருகை தந்திருந்தனர்.

இங்கு வருகை தந்தை காத்தான்குடி கோட்டக்கல்விப் பணிப்பாளர் எம்.எம்.கலாவுதீன் இது விடயம் தொடர்பில் மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி எஸ்.எம்.எஸ்.உமர் மௌலானாவின் கவனதுக்கு கொண்டு வந்தார்.

இதையடுத்து வலயக் கல்விப் பணிப்பாளரின் நடவடிக்கையின் கீழ் மட்டக்களப்பு மத்தி வலயக் கல்வியலுவகத்தின் நிருவாகத்துக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.ரமீஸ் தலைமையில் இப் பாடசாலைக்கு வருகை தந்த அதிகாரிகள் குழு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெற்றோருடன்பேச்சுவார்த்தையில்ஈடுபட்டு ஆர்ப்பாட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்ததுடன், மூன்று வாரங்களுக்குள் இதற்கான தீர்வினை பெற்றுத்தருவதாக தெரிவித்தனர்.

# பிரதேச செயலகங்கள் தோறும் வழிகாட்டல் ஆலோசனை

இரண்டு இலட்சம் குடும்பங்களின் மனைப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் வகையில் பிரதேச செயலகங்கள் தோறும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான வழிகாட்டல் ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றது.



அந்த வகையில் அட்டாளைச்சேனை பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான பயிற்சி வழிகாட்டல் செயலமர்வு புதன்கிழமை (01) அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எம் சித்தி நளீரா தலைமையில் நடைபெற்றது.

சிறு தொழில் அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக அட்டாளைச்சேனை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் திருமதி நஹீஜா முசாபிர் கலந்துகொண்டு சிறப்பித்தார். இங்கு சமுர்த்தி திட்ட முகாமையாளர் என்.ரி.மசூர் மற்றும் உத்தியோகத்தர்கள் பலரும் வளவாளர்களாக பங்கேற்று திட்டத்தின் நோக்கங்களையும், பயிற்சி வழிகாட்டல்களையும் வழங்கினர். இந்நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் கலந்துகொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# காத்தான்குடி மீடியா போரத்தின் அங்கத்தவர்களுக்கு புதிய ரீ சேட்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

காத்தான்குடி மீடியா போரத்தின் அங்கத்தவர்களுக்கு புதிய ரீ சேர்ட் (மேலங்கி) வழங்கி வைக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (28) காத்தான்குடியில் இடம்பெற்றது.

ஐக்கிய அரபு அமீரகத்தில் தொழில் புரியும் பாலமுனையைச் சேர்ந்த சமூக செயற்பாட்டாளர் அல்ஹாபிழ் ஏ.ஜி. எம். ரஊப் கானின் உதவியுடன் காத்தான்குடி மீடியா போரத்தின் சின்னம் மற்றும் பெயர் அச்சிடப்பட்ட இந்த ரீ சேட் வழங்கும் வைபவம், காத்தான்குடி மீடியா போரத்தின் தலைவர் எம்.எஸ். எம்.சஜி தலைமையில் நடைபெற்றது. இதில் காத்தான்குடி மீடியா போரத்தின் செயலாளர் எம்.ரி.எம். யூனுஸ், பொருளாளர் எஸ்.ஏ.கே. பழீலுர் ரஹ்மான் உட்பட போரத்தின் அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர்.



இதன் போது காத்தான்குடி மீடியா போரத்தின் உறுப்பினர்களுக்கு புதிய ரீ சேட் வழங்கி வைக்கப்பட்டது.





கிண்ணியா அலிகார் மகா வித்தியாலய ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (30) இடம்பெற்றது. சூரங்கல் ஆயுர்வேத வைத்திய சாலை டொக்டர் றிஸ்வானின் அனுசரணையில் இந்நிகழ்வு இடம்பெற்ற போது. (படம்; தோப்பூர் குறூப் நிருபர்)

# தனியார் பாடசாலைகள், பல்கலைக்கழகங்களை முறைப்படி ஒழுங்குபடுத்த புதிய சட்டம்

## அமைச்சர் தினேஷ் குணவர்தன



தனியார் பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் பாடசாலைகளை முறைப்படி ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டம் ஒன்றை கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அந்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு பாராளுமன்ற அங்கீகாரத்துடன் நடைமுறைப்படுத்தப்படும் எனக் குறிப்பிட்ட அவர் அது தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அதேவேளை, நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களை சர்வதேச தரத்திற்கு உயர்த்துவதே கல்வி அமைச்சின் நோக்கம் என்றும அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று கல்வியமைச்சின் வரவு செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்:

உயர் கல்வித்துறையில் பல்வேறு முன்னேற்றகரமான செயற்திட்டங்களை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கான நிதி உதவியைப் பெற்றுக் கொள்வதற்காக உலக வங்கியுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. தேசிய பாடசாலை திட்டம் கல்வியமைச்சின் முக்கிய இடத்தை வகிக்கும் ஒரு திட்டமாகும். அதற்கிணங்க நாடளாவிய 125 பிரதேச செயலாளர் பிரிவுகளில் தேசிய பாடசாலைகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் அனைத்து பாடசாலைகளுக்கும் தொழில்நுட்பத்தை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

கொழும்பு பல்கலைக்கழமானது 100 வருடங்கள் பழமை வாய்ந்த ஒரு பல்கலைக்கழகமாகும். அதற்கு சர்வதேச ரீதியில் பெரும் மதிப்பு உள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

**எஸ்.ஸ்ரீதரன்**
(தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்பி)

கல்வித்துறையில் போதிய ஆளணிகள் இல்லை. கல்வியமைச்சுக்கு நாம் செல்கின்றபோது தமிழ் மொழியில் பேச முடியாதுள்ளது. வேறு அமைச்சுக்களிலும் இதே நிலைதான்.

இது ஒரு பாரிய பிரச்சினையாகும். தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து வழங்கி இந்தப் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கையின் கல்வி நிர்வாக சேவையிலும் தமிழ் மொழிமூல ஆளணி பற்றாக் குறை நிலவுகின்றது. வடக்கை எடுத்துப்பார்த்தால் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் 238 பேருக்கான தேவை உள்ளது.

அங்கு தற்போது உள்ளவர்களின் மொத்த தொகை 136. இன்னும் 102 பேருக்கு அங்கு வெற்றிடம் உள்ளது.

இலங்கை அதிபர்கள் சேவையில் 1212 பேருக்கு வடக்கு மாகாணத்தில் வெற்றிடம் உள்ள நிலையில் அங்கு 972 பேரே நியமிக்கப்பட்டுள்ளனர். இன்னும் 240 பேருக்கு வெற்றிடம் உள்ளது. அதேபோன்று இலங்கை ஆசிரியர் சேவையில் .இன்னும் 1299 பேருக்கு வெற்றிடங்கள் உள்ளன. இது கல்வி ரீதியான பெரும் விழுக்காடாகும்.

**ஊடகத்துறை அமைச்சர் டளஸ் அழகப்பெரும**

கொரோனாவினால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். அமைச்சரவை உபகுழுவின் பரிந்துரைக் கமைய வரவு செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டு அதிபர் ஆசிரியர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டது. ஜனாதிபதி,பிரதமர், கல்வி அமைச்சர், நிதி அமைச்சர் ஆகியோர் மாணவர்களுக்காக கைகோர்த்து செயற்பட்டார்கள். இந்த நிலையில் பாடாசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆரம்ப கல்வி பெறுவதில் உள்ள குறைபாடு காரணமாக பல மாணவர்களின் கல்வி செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றது. ஆரம்பத்தில் இருந்தே மாணவர்களின் குறைபாடுகளை தீர்ப்பது அவர்களின் கல்வித்தரத்தை உயர்த்தும். 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களின் தரத்தை உயர்த்தவும் வழிகாட்டவும் வேண்டும்.

மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதாக இருந்தால் ஆசிரியர்களின் தரத்தையும் உயர்த்த வேண்டும். 19 கல்வியியல் கல்லூரிகளையும் பல்கலைக்கழகங்களாக தரமுயர்த்த வேண்டும். எதிர்காலத்தில் உருவாகும் அனைத்து ஆசிரியர்களையும் பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களாக மாற்ற வேண்டும். இந்த இலக்கை அடைவதற்கு நாம் முயல வேண்டும். அது எமது நாட்டின் எதிர்காலத்திற்கு செய்யும் முதலீடாகும்.

பாடசாலைகளுக்கு புரோட்பேன் இணைப்பு வழங்குவதற்காக 600 மில்லியன் ஒதுக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. ஒன்லைன் கல்வியை முறையாக முன்னெடுத்தால் அதன் பயனை எட்ட முடியும்.

பல்கலைக்கழகத் தெரிவின் போது தற்பொழுது காணப்படும் மாவட்ட கோட்டாமுறையில் பாரிய முரண்பாடு காணப்படுகிறது. வடக்கிலும் அந்த நிலைமை உள்ளது. கஷ்ட பிரதேசங்களாக 16 மாவட்டங்கள் அடையாளங் காணப்பட்டாலும் ஏனைய மாவட்டங்களில் சமமான வசதிகள் அற்ற பாடசாலைகள் குறித்த மாவட்டத்தில் உள்ளது கவனிக்கத்தக்கது. கொழும்பு மாவட்டத்தில் ஆனந்த, ரோயல், விசாக்கா போன்ற பாடசாலைகளில் காணப்படும் வசதி கல்வி அமைச்சர் பிரதிநிதித்துவப் படுத்தும் அவிஸ்ஸாவெல்ல இஹோமாகம, கடுவெல போன்ற பாடசாலைகளுக்குக் கிடையாது. இஸட்புள்ளி அடிப்படையில் தெரிவில் மாவட்ட கோட்டாவுக்குப் பதிலாக பாடாசாலை மட்டத்தில் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை தெரிவு செய்வது உகந்தது.

தற்பொழுது 55 வீதம் மாவட்ட கோட்டா அடிப்படையிலும் 5 வீதம் கஷ்ட பிரதேச அடிப்படையிலும் தெரிவு நடைபெறுகிறது. இதனை மாற்றி தேசிய மட்ட திறமை அடிப்படையிலான தெரிவை 50 ஆகவும் மாவட்ட பாடசாலை அடிப்படையிலான தெரிவை 50 வீதமாகவும் மாற்ற வேண்டும். இவ்வாறு அனைத்து மாணவர்களுக்கும் சமமான சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

நான் கல்வி அமைச்சராக இருந்த போது விடுத்த கோரிக்கைப் படி கொரோனா காலத்தில் 43 ஆயிரம் மாணவ மாணவிகள் புத்தகம் எழுதினார்கள். இதற்காக நிதி ஒதுக்கி அவற்றை வெளியிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**ராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல**

பாடசாலை மற்றும் பல்கலைக்கழக கல்விக்கு மேலதிகாக தொழிற்பயிற்சி எவ்வளவு முக்கியம் என்று சிந்தித்துள்ளோமா? அதற்காக என்ன முக்கியம் வழங்கப்பட்டது. சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகள் தொழில்பயிற்சி பெற்றவர்களின் பங்களிப்பையும் பெற்றே முன்னேறின. கடந்த காலத்தில் தொழிற்பயிற்காக கடந்த கால அரசுகள் பங்களித்துள்ளன. கைத்தொழில் துறைக்கு ஏற்ற பயிற்சி வழங்கப்படவில்லை என்றும் தொழிற்பயிற்சிகள் இற்றைப்படுத்தப்படவில்லை என விமர்சனம் செய்யப்படுகிறது.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு மகபொல புலமைப்பரிசில் உதவி வழங்கினாலும் தொழிற்பயிற்சிக்கு அவ்வாறு உதவி கிடைக்கவில்லை. அதனால் தொழிற்பயிற்சி பெறுவபவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளோம். தொழிற்பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்குவது தொடர்பில் தாமதம் காணப்படுகிறது. பரீட்சை எழுதி 5, 6 வருடங்களாக காத்திருக்கும் நிலை காணப்பட்டது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பின் போது பயிற்றப்பட்டவர்களை உருவாக்கத் தேவையான பயிற்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பெண்களை பலப்படுத்தும் திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பாடசாலை கல்வியை நிறைவு செய்த பெண்களுக்கு தொழிற்பயிற்சி வழங்க இருக்கிறோம்.

**வி. ராதாகிருஷ்ணன் எம்.பி (ஐ.ம.ச)**

1978 இல் தான் தோட்டப்பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றன. 1981 இன் பின்னர் தேசிய ரீதியில் இணைக்கப்பட்டன. 1983 கலவரத்தின் காரணமாக வடக்கு பகுதி ஆசிரியர்கள் தோட்டப் பாடசாலைகளில் இருந்து சென்றதால் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்பட்டது. 1977 இல் சௌமியமூர்த்தி தொண்டமான் அமைச்சராக வந்த பின்னர் படிப்படியாக பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்பட்டன.

கல்வி அமைச்சின் செயற்பாடுகள் விரிவாக்கப்பட வேண்டும்.

சந்திரிகா அம்மையார் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் 3000 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலத்தில் மேலும் 3000 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள். இவர்கள் ஆசிரிய உதவியாளர்களாக இவர்கள் நியமிக்கப்பட்டார்கள். 10 ஆயிரம் ரூபா தான் இவர்களுக்கு வழங்கப்படுகிறது. அன்றிருந்த முதலமைச்சர் பட்டதாரி ஆசிரியர்களை நியமித்ததால் ஆளணி இல்லாமல் போனது. அதனால் இந்த உதவி ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொட்டகல ஆசிரியர் கலாசாலைக்கான இருமாடிக்கட்டட பணி இடைநடுவில் தடைப்பட்டுள்ளது. அதனை பூர்த்தி செய்ய அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை திட்டத்தின் கீழ் ஆரம்பித்த பல பாடசாலைகளின் நிர்மாணப் பணிகள் பாதியில் கைவிடப்பட்டுள்ளன. அவற்றை நிறைவு செய்ய வேண்டும்.

**அதிபர்கள் கல்வி நிருவாக சேவை**

ஓய்வு பெறும் வயது 65 வயது வரை நீடிக்கப்பட்டுள்ளது. மலையக பாடசாலைகளிலும் தமிழ் பாடசாலைகளிலும் அதிக ஆசிரிய வெற்றிடங்கள் காணப்படுகின்றன. எனவே இது தொடர்பாக சுற்றுநிருபத்தை 2020 முதல் அமுலாகும் வகையில் வெளியிட்டால் அனுபவமுள்ள ஆசிரியர்களை மீண்டும் இணைத்துக் கொள்ளலாம். பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு நல்லாட்சி காலத்தில் 2 ஏக்கர் காணி வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும். பல்கலைக்கழகம் அமைக்க அடிப்படை பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து செயற்படுத்த வேண்டும்.

**சிவநேசதுரை சந்திரகாந்தன்**
(பொது ஜன பெரமுன எம்பி)

எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என்பது எமது முதுமொழி. அதற்கிணங்க கல்வி மனித வாழ்வில் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது.

நாடளாவிய ரீதியில் தொண்ணூற்று ஒன்பது கல்வி வலயங்கள் காணப்படுகின்ற நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 11 வலயங்கள் உள்ளன. அவற்றில் கல்குடா உட்பட இரண்டு கல்வி வலயங்கள் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றன. அங்கு 84 பாடசாலைகள் இயங்குகின்ற நிலையில் 390 ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை நிலவுகிறது.

ஆசிரியர் பற்றாக்குறை தூரப் பிரதேச பாடசாலைகள் சம்பந்தமான போக்குவரத்து பிரச்சினைகள் மாணவர்கள் கல்வியில் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. இதனால் கல்விப் பொதுத் தராதரம், உயர்தரம் மற்றும் சாதாரண தரம் மாணவர்களின் பெறுபேறுகள் மிக பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றன.

இலவசக் கல்வி கிடைக்க வேண்டிய கிராமங்களுக்கு அது சென்றடையவில்லை என்பதை குறிப்பிட வேண்டும்.

அரச நிறுவனங்கள் சுமை என்கின்ற நிலையில் மனித வளங்களை சரியாக பயன்படுத்தி அதன் மூலம் முழுமையான பயனைப் பெற்றுக் கொள்வது அவசியம்.

**இம்ரான் மஹ்ரூப் எம்.பி(ஐ.ம.ச)**

மரத்திற்குக் கீழ் வகுப்புகள் நடைபெறும் நிலை எமது பிரதேச பாடசாலைகளில் காணப்படுகிறது. கடந்த 2 வருடங்களாக கிழக்கில் ஆசிரியர்களின் வருடாந்த இடமாற்றம் நடைபெறவில்லை. இதில் அரசியல் கலந்துள்ளதாக என்ற சந்தேகம் காணப்படுகிறது .மருத்துவபீடத்திற்கு செல்லும் தொகை குறைக்கப்பட்டுள்ளது. கடந்த ஆட்சியில் புதிதாக 3 பீடங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இதற்கு என்ன காரணம் என கண்டறிந்து நிவர்த்தி செய்ய வேண்டும். 1000 ஆயிரம் தேசியப்பாடசாலை திட்டம் பற்றி தெரிவிக்கப்பட்டது. மாகாண பாடசாலைகளை தேசிய அரசின் கீழ் கொண்டுவருவதன் பின்னணி என்ன? ஏனென்றால் மாகாண சபை முறையை ஒழிப்பது தொடர்பாக பரவலாக பேசப்படுவதால் இந்த சந்தேகம் எழுகிறது. பெயர்ப்பலகை மாத்திரம் மாறுவதால் எந்தப் பயனுமில்லை. கல்விக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டாலும் உயர்கல்வி மற்றும் நிறுவனங்களுக்கும் இந்த நிதி செலவிடப்படும்.

**ராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்த்**

உயர் தரப் பரீட்சையில் முழு பாடவிதானத்தையும் உள்ளடக்க வேண்டியுள்ளதால் அதில் மாற்றம் செய்ய முடியாது. தற்பொழுதுள்ள பொதுவாக கல்வி முறையை 21 ஆம் நூற்றாண்டிற்கு ஏற்றவாறு மாற்றுதல் உயர்கல்வி மறுசீரமைப்பு வர்த்தக சந்தைக்கு ஏற்ப தொழிற்பயிற்சி முறையை மாற்றுதல் ஆகிய விடயங்கள் உள்ளடக்கிய கொள்கை இந்த வருட இறுதிக்குள் சமர்ப்பிக்கப்பட இருக்கிறது.

குறைவாக கற்பிப்போம், அதிகமாக கற்கவிடுவோம் என்ற நோக்கிலே சில நாடுகள் செல்கின்றன. ஆனால் நாம் அதிகமாக கற்பித்து குறைவாக கற்க விடுகிறோம். சிங்கப்பூர் கல்வி மறுசீரமைப்பில் வெற்றி ஏற்பட்டதற்கு பொறுப்புக்கூறல் பிரதானமாகும். அங்கு ஆசிரியர்களுக்கு அதிக சம்பளம் வழங்கப்படுகிறது. பின்லாந்திலும் சிறந்த கல்வி நிலை காணப்படுகிறது. பொதுப் பரீட்சை வரை ஆசிரியர் தான் மாணவனை மதிப்பீடு செய்கிறார். எனவே ஆசிரியரின் தரமும் உயர் மட்டத்தில் இருக்க வேண்டும்.

## பட்ஜட் விவாதம்



சபை நிருபர்கள்
லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்









# கல்வி அமைச்சின் மேலதிக செயலாளராக தமிழர் ஒருவரை நியமிக்க வேண்டும்

## சிறிதரன் எம்பி

கல்வி அமைச்சுக்கு நியமிக்கப்படும் மேலதிக செயலாளர்களில் ஒருவராவது தமிழராக இருக்க வேண்டும். அப்போதுதான் மொழி ரீதியான பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொள்ள வசதி ஏற்படும் என தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்பி எஸ். ஸ்ரீதரன் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கல்வி அமைச்சு. உயர்கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம்,பரீட்சைத்திணைக்களம், கல்வி வெளியீட்டு திணைக்களம் ஆகியவற்றில் தமிழ் மொழி மூலமான செயற்பாடுகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்

அரசாங்க ஊழியர்களின் ஓய்வூதிய வயதெல்லை 65 ஆக அறிவிக்கப்பட்டுள்ளது. ஒருவகையில் இதனை நல்ல விடயமாக பார்க்கலாம். ஆனால் 2022 வருடங்களாக ஆசிரியராக நியமனம் பெறும் ஒருவர் தனது வாழ் நாளில் 55 வயது,60 வயது வரை உடல்ரீதியான உழைப்பை வழங்கி அவர் ஓய்வு பெறும் காலத்தில் ஓய்வு பெற்றுக்கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளது

அதற்கிணங்க நாட்டில் இயற்கை மரணம் எய்துபவர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது 65 வயதுக்குள் இயற்கை மரணத்தை அடைபவர்கள் அநேகமானவர்கள் ஆசிரியர்களாகவே உள்ளனர்.

அரச உத்தியோகத்தர்களில் ஆசிரியர்கள்தான் அதிகம் பாதிக்கப்படுபவர்களாக இருக்கின்றார்கள்.எனவே ஓய்வூதிய வயதை 55 வயதாக நிர்ணயித்து விரும்பினால் 65 வயது வரை சேவை செய்ய முடியும் என்ற திட்டமே சிறந்ததும் இந்த நாட்டுக்கு பொருத்தமானதுமாக அமைய முடியும்

2020 மார்ச் மாதத்திற்கு பின்னர் பலர் ஓய்வு நிலைக்கு அனுப்பப்பட்டுளள்னர். 55 வயதிலே அவர்கள் ஓய்வுக்கு விண்ணப்பித்து அவர்கள் 5 வருடங்களுக்கு மேலும் நீடிப்பு கேட்டு 60 வயதிலேயே அவர்கள் வீடுகளுக்கு சென்றுள்ளார்கள். ஆனால் தற்போது ஓய்வு பெறும் வயது 65 என அறிவிக்கப்பட்டுள்ளது. அப்படியானால் 2020 ஆம் ஆண்டிலே கொரோனாவை காரணம் காட்டி வேலை செய்ய முடியாது ஓய்வு பெற்ற ஓய்வூதியக்காரர்களும் தாங்கள் 65 வயது வரை சேவையாற்ற விரும்புவதாக விண்ணப்பித்தால் அவர்களையும் 65 வயதுவரை சேவை செய்வதற்கு அரசாங்கம் அனுமதிக்க வேண்டும். அதுதான் யதார்த்தம் என்றும் சிறிதரன் எம்பி மேலும் தெரிவித்தார்.

# வீதிகள் எங்கும் காணப்படும் பட்டங்களை வழங்கும் கல்வி நிறுவனங்களின் தரம் உறுதி செய்யப்பட வேண்டும்

கொழும்பு வீதிகளெங்கும் பட்டங்களுக்கான சான்றிதழ்களை வழங்கும் கல்வி நிறுவனங்கள் காணப்படும் நிலையில் அவற்றின் தரத்தை உறுதி செய்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் அவற்றை கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாரிய சவால்களை எதிர்கொள்ள நேரும் கல்வி அமைச்சுக்கு இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்விதத்திலும் போதுமானதாக இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கல்வித்துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியானது பாடசாலைகளின் பெயர்ப் பலகைகளை அமைப்பதற்கு கூட போதுமானதாக இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அதற்கிணங்க கல்வி அமைச்சானது எதிர்காலத்தில் பெரும் சவால்களை எதிர்நோக்க நேரிடும் என்றும் சபையில் தெரிவித்த அவர்

சர்வதேச நிதி உதவிகளுடன் கல்வியமைச்சை முன்னெடுத்துச் செல்வது தொடர்பிலேயே கவனமம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கல்வி அமைச்சு உள்ளிட்ட மூன்று இராஜாங்க அமைச்சுக்கள் மீதான வரவு செலவு திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

கொவிட் தொற்று காரணமாக எதிர்காலத்தில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டிவரும் என்பதை நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ புரிந்து கொண்டே வரவு செலவு திட்டத்தை சமர்ப்பித்துள்ளார்.

பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் வகையில் பிரேரணைகள் இல்லை. குறிப்பாக கல்வி அமைச்சை எடுத்துக்கொண்டால் எந்த விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என்ற தெளிவு இல்லாமல் எடுக்கப்பட்ட தீர்மானமாகவே பார்க்க முடிகிறது.

உயர்கல்விக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் நிதியானது 80வீதம் வரை வெளிநாடுகள் மூலம் கிடைக்கும் நிதியாகும்.

எனினும் பாதுகாப்பு அமைச்சுக்கு முழுமையாக உள்நாட்டு நிதியே ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

மேலும் கூடிய தொகையை கிராம தேர்தல் தொகுதிகளின் அடிப்படைத் தேவைகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இலங்கை போன்ற நாட்டுக்கு, அடிப்படை தேவைகளுக்கு அதிக நிதி ஒதுக்கி பொருளாதார பிரச்சினையில் இருந்து மீளமுடியாது.

கிராமிய பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முறையான வேலைத்திட்டம் இல்லை. கல்வி அமைச்சுக்கு ஒதுக்கியிருக்கும் நிதி மூலம் சவால்களுக்கு முகம் கொடுக்க முடியாது. வெளிநாட்டு மாணவர்களை நாட்டுக்கு அழைத்து கட்டணம் அறவிடும் கல்வி நிறுவனங்களிடமிருந்து நிதி திரட்டும் கடந்தகால வேலைத்திட்டத்தை அரசாங்கம் மீண்டும் ஆரம்பித்திருக்கின்றது. கல்வித் துறைமூலம் வருமானம் தேடிக்கொள்ளவே முயற்சிக்கப்பட்டிருக்கின்றது. கல்வித்துறைக்கு தேசிய வருமானத்தில் 6வீதம் ஒதுக்குவதாக தெரிவிக்கப்பட்டாலும் எந்த காலத்திலும் அவ்வாறு ஒதுக்கப்படுவதில்லை. 2.5வீதம் வரையே ஒதுக்கப்படுகின்றது. கொழும்பில் வீதி எங்கும் பட்டச்சான்றிதழ் வழங்கும் கல்விக் கடைகளை காண முடிகின்றது.

இந்த கல்வி நிறுவனங்களின் தரத்தை உறுதிப்படுத்தவேண்டும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் இவற்றை கொண்டுவர நடவடிக்கை எடுக்கவேண்டும். மேலும் நாட்டில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தங்கள் காரணமாக பல பாடசாலைகளின் கட்டிடங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அந்த கட்டிடங்கள் பாவனைக்கு பொருத்தமில்லை என தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அரசாங்கம் ஆயிரம் தேசிய பாடசாலைகளை அமைக்க திட்டமிட்டிருக்கின்றது. ஆனால் கல்வி அமைச்சு ஒதுக்கப்பட்டிருக்கும் நிதி பாடசாலைகளுக்கான பெயர் பலகைகளை அமைப்பதற்கே போதுமானதாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சுற்றுநிருபத்தை மாற்றி அனுபவமுள்ள ஆசிரியர்களை உள்வாங்க வேண்டும்

## வி.ராதாகிருஷ்ணன் எம்.பி

(லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்)

அரச ஊழியர்களின் ஓய்வு பெறும் வயது 65 வயது வரை நீடிக்கப்பட்டுள்ளது. மலையக பாடசாலைகளிலும் தமிழ் பாடசாலைகளிலும் அதிக ஆசிரிய வெற்றிடங்கள் காணப்படுவதால் இது தொடர்பாக சுற்றுநிருபத்தை 2020 முதல் அமுலாகும் வகையில் வெளியிட்டால் அனுபமுள்ள ஆசிரியர்களை மீண்டும் பாடசாலைகளுக்கு இணைத்துக் கொள்ள முடியும் என வி.ராதாகிருஷ்ணன் எம்.பி (ஐ.ம.ச) தெரிவித்தார். கல்வி மற்றும் கல்வி ராஜாங்க அமைச்சுக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய அவர்,

ரணில்விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலத்தில் 3000 பேர் ஆசிரிய உதவியாளர்களாக நியமிக்கப்பட்டார்கள். 10 ஆயிரம் ரூபா தான் இவர்களுக்கு வழங்கப்படுகிறது. அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை திட்டத்தின் கீழ் ஆரம்பித்த பல பாடசாலைகளின் நிர்மாணப்பணிகள் பாதியில் கைவிடப்பட்டுள்ளன. அவற்றை நிறைவு செய்ய வேண்டும்.

அரச ஊழியர்களின் ஓய்வு பெறும் வயது 65 வயது வரை நீடிக்கப்பட்டுள்ளது. மலையக பாடசாலைகளிலும் தமிழ் பாடசாலைகளிலும் அதிக ஆசிரிய வெற்றிடங்கள் காணப்படுகின்றன. எனவே இது தொடர்பாக சுற்றுநிருபத்தை 2020 முதல் அமுலாகும் வகையில் வெளியிட்டால் அனுபமுள்ள ஆசிரியர்களை மீண்டும் இணைத்துக் கொள்ளலாம். பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு நல்லாட்சி காலத்தில் 2 ஏக்கர் காணி வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும். பல்கலைக்கழகம் அமைக்க அடிப்படை பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து செயற்படுத்த வேண்டும்.

# நகர்வலம்



## இசை நிகழ்ச்சியில் சிறுமிக்கு பாராட்டு



(தெஹிவளை கல்கிஸை விஷேட நிருபர்)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆனந்தசமரகோன் மண்டபத்தில், கடந்த ஞாயிற்றுக்கிழமை (28) நடைபெற்ற

இசை நிகழ்ச்சியில், மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். அபுஉபைதா மவ்ஜூத் தலைமையில் நடைபெற்ற, இந்நிகழ்வில் சிறுமி ஒருத்திக்கு, அமைச்சர் பரிசு வழங்குவதையும்

ஜனசா நலன்புரித் தலைவர்,தொழிலதிபர், மற்றும் தெஹிவளை கல்கிசை மாநகர சபை உறுப்பினர் சரினா முஸ்தபாவும் காணப்படுகின்றனர்.



கொழும்பிலுள்ள இந்திய தூதுவர் அலுவலகத்தில் அரசியல் ஆலோசகராக பணியாற்றுபவரும் முதன்மை அதிகாரியுமான திருமதி பாணுபிரகாஷை அண்மையில் புத்தகப் பூங்கா நிறுவுநர், புரவலர் ஹாசிம் உமர், மரியாதை நிமித்தமாக சந்தித்துக் கலந்துரையாடினார். இச்சந்திப்பில் மணவை அசோகனும் கலந்து கொண்டார்.



அநுராதபுரம் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக சிரேஷ்ட நிருவாக சேவை உத்தியோகத்தரான விஜய வனசிங்க, நியமிக்கப்பட்டுள்ளார். இவர், நேற்று அரசாங்க அதிபர் அலுவலகத்தில் தனது கடமைகளை பொறுப்பேற்றபோது பிடித்த படம்.

(படம்: அநுராதபுரம் தினகரன் நிருபர்)

## ஹம்பாந்தோட்டை மாநகர சபை பட்ஜட் 09 மேலதிக வாக்குகளால் வெற்றி

(ஹம்பாந்தோட்டைகுறூப் நிருபர்)

ஹம்பாந்தோட்டை மாநகர சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டம் ஒன்பது மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது. ஹம்பாந்தோட்டை மாநகரசபை மேயர் எராஜ் ரவீந்திர பிரணாந்து நேற்று (01) இதைத் தெரிவித்தார்.

ஹம்பாந்தோட்டை மாநகர சபையின் (2022) வருடத்திற்கான வரவுசெலவுத் திட்டம் மேயர் எராஜ் ரவீந்திர பிரணாந்துவால் சபையில் சமர்பிக்கப்பட்டது. இதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முன்னணி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு என்பனவற்றின் 11 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர் கட்சித் தலைவர் மற்றும் மக்கள் விடுதலை முன்னனியின் உறுப்பினர் ஒருவர் உட்பட மொத்தம் இரண்டு பேர் எதிராக வாக்களித்தனர். ஐக்கிய தேசியக் கட்சியின் ஏனைய ஏழு உறுப்பினர்களும் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

## சுபிட்சத்தின் நோக்கு திட்டத்தின் கீழ் புத்தளத்தில் புதிய வீடுகளுக்கு அடிக்கல்

(புத்தளம் தினகரன் நிருபர்)

அரசாங்கத்தின் "சௌபாக்கிய தெக்ம" வேலைத்திட்டத்தின் கீழ் புத்தளத்தில் மூன்று வீடுகளுக்கு அடிக்கற்கள் நடப்பட்டன.

இவ்வீடுகள் ஒவ்வொன்றும் தலா ஆறு லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளன. இவற்றுக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று புதன்கிழமை (01) காலை இடம் பெற்றது.

அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் ஆலோசனையின் பேரில், புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிந்தக அமல் மாயாதுன்னவின் நிதி ஒதுக்கீட்டில் இந்த வீடுகள் அமைக்கப் படவுள்ளன.

புத்தளம் முதலாம், ஐந்தாம், ஏழாம் வட்டாரங்களில் பாராளு மன்ற உறுப்பினர் சிந்தக அமல் மாயாதுன்ன பிரதம அதிதியாக கலந்து கொண்டு, அடிக்கற்களை நட்டு வைத்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் புத்தளம் முதலாம் வட்டார அமைப்பாளர் எஸ். இஸ்ஸதீன், ஐந்தாம் வட்டார அமைப்பாளர் எம்.ரிஸ்வான் மற்றும் ஏழாம் வட்டார அமைப்பாளர் லிப்டி ஜமால்தீன் ஆகியோர் பாராளு மன்ற உறுப்பினரிடம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க இந்த வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இதேவேளை, புத்தளம் தம்பபன்னியில் இருபது இலட்சம் ரூபா செலவில் கொங்ரீட் பாதைக்கான அடிக்கல்லையும் பாராளு மன்ற உறுப்பினர் நட்டு வைத்தார்.

## அநுராதபுரம் மாவட்டத்தில் நவம்பரில் ஒன்பது கொவிட் மரணங்கள் பதிவு

(அநுராதபுரம் தினகரன் நிருபர்)

அநுராதபுரம் மாவட்டத்தில் கடந்த நவம்பர் மாதத்தில் மாத்திரம், ஒன்பது கொவிட் மரணங்கள் பதிவாகியுள்ளதாக மாவட்ட தொற்று நோய் பிரிவின் விஷேட வைத்தியர் தேஜன சோமதிலக்க தெரிவித்தார். தொற்று நோய் பிரிவின் வஷேட வைத்தியரை தொடர்பு கொண்டு மாவட்டத்தின் தற்போதய கொவிட் நிலமைகளை வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அத்துடன் சென்ற மாதத்தில் மாத்திரம் 6400 க்கும் அதிகமான தொற்றாளர்கள் அடயாளம் காணப்பட்டதுடன், நாளொன்றுக்கு 250 தொடக்கம் 300 வரையான தொற்றாளர்கள் பதிவாகியதாகவும் அவர் தெரிவித்தார். நபம்பர் மாதத்தின் கடைசி மூன்று நாட்களில் 300 க்கும் அதிகமான தொற்றாளர்கள் பதிவாகினர்.

அநுராதபுரம் நகர எல்லை, நொச்சியாகம, மத்திய நுவரகம் பகுதி, தலாவ உள்ளிட்ட பகுதிகளிலேயே இவர்கள் பதிவாகியுள்ளனர். பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இதுவரை 450 க்கும் அதிகமான பாடசாலை மாணவர்களும் 155 க்கும் அதிகமான அதிபர் ஆசிரியர்களும் கொவிட் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இம்மாவட்டத்தில், இதுவரை 345 கொவிட் மரணங்கள் இடம்பெற்றுள்ளது எனவும் வைத்தியர் தேஜன சோமதிலக்க மேலும் தெரிவித்தார்.

## ஜம்இய்யத்துல் உலமாவின் பேருவளை வலய மாதாந்த கூட்டம்

(அஜ்வாத் பாஸி)

ஜம்இய்யத்துல் உலமாவின் பேருவளை வலய மாதாந்த கூட்டம் நாளை மறுதினம் (04) சனிக்கிழமை மாலை 3.45 மணிக்கு பேருவளை மருதானை யாஸிர் அரபாத் ஜும்ஆ பள்ளிவாசலில் நடைபெறவுள்ளது.

பேருவளை வலய ஜம்இய்யத்துல் உலமாவின் தலைவர் அஷ்ஷெய்க் பௌசுல் அலவி (மதனி) தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில், முக்கிய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளது. எனவே, இவ்வலயத்தைச் சேர்ந்த அனைத்து அங்கத்தவர்களும் தவறாது கலந்துகொள்ளுமாறு வலய செயலாளர் அஷ்ஷெய்க் முப்தி முர்ஸி (நளீமி) கேட்டுள்ளார்.

மேற்படி கூட்டம் தொடர்பான அழைப்பிதழ் 'வட்ஸப்' ஊடாக அனைத்து அங்கத்தவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் களுத்துறை மாவட்ட தலைவர் அஷ்ஷெய்க் அப்துர் ரஹ்மான் (பஹ்ஜி) இந்நிகழ்வில் விஷேட பிரமுகராக கலந்து சிறப்பிப்பார்.

## ஊடக சங்கங்களை உருவாக்க திட்டம்

(திறப்பனை தினகரன் நிருபர்)

அநுராதபுர மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளை கேந்திரமாகக் கொண்டு ஊடகச் சங்கங்களை உருவாக்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, இவ்வேலை திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

பிழையில்லாத சிறந்த ஊடகப் பயிற்சியை சிறுவர்கள் மத்தியில் ஏற்படுத்திக் கொடுப்பதே இதன் பிரதான நோக்கமாகும். இதற்காக மாவட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளிலும் இவ்வாறான ஊடக சங்கங்களை உருவாக்கவுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அநுராதபுர மாவட்ட உத்தியோகத்தர் மகேந்திர திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன் முதற் கட்ட வேலைத் திட்டம் அநுராதபுரம் அளுத்வெவ குமார வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பாடசாலையின் ஊடக சமூகத்திற்கு தேவையான காகிதாதிகள் மற்றும் உபகரணங்கள் இதன்போது வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில், அநுராதபுர மாவட்ட செயலாளர் காரியாலய ஊடகப்பிரிவின் செய்தி உத்தியோகத்தர் உட்பட அதிகாரிகள் பலர் கலந்து சிறப்பித்தனர்.

## தேனும் பாலும் கலந்த வசந்த கானங்கள்

“தேனும் பாலும் கலந்த வசந்த கானங்கள்” நிகழ்ச்சி, இம்மாதம் (05) ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு இலங்கை ஒலிபரப்பு கூட்டுதாபன ஆனந்த சமரகோன் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. கலைநிலா மன்றத்தினரின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்நிகழ்ச்சி, நேரலையாகவும் ஒலிபரப்பப்படவுள்ளது.

பாசில், கவிக்கமல், ரஜினி வீனஸ், அக்ஷரா இசைக்குழுக்களின் இனிய இசையில் பழைய, இடைக்கால பாடல்கள் அரங்கேற உள்ளன.

புரவலர் ஹாஸிம் உமர் முன்னிலை வகிப்பதுடன், கலைமாமணி பொன்மனச் செம்மல் தாஜ்மஹான் நிகழ்வுக்கு தலைமை வகிக்கிறார். கலாநிதி விநாயகமூர்த்தி ஜனகன் பிரதம அதிதியாக இதில், கலந்து சிறப்பிக்கின்றார்.

கலைஞர்கள், கவிஞர்கள், இலக்கிய ஆர்வலர்கள் மற்றும் ஊடக அதிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## போராட்டம் நடைபெற்ற புத்தளம் பகுதிக்கு அதிகாரிகள் விஜயம்

(புத்தளம் தினகரன் நிருபர்)

புத்தளத்தில், வெள்ளப்பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு ரயில் பாதை கடவைக்கருகில் தொடர்ந்து போராட்டம் நடத்தப்பட்டதால் அதிகாரிகள் அவ்விடத்துக்குச் சென்று நிலைமைகளை அவதானித்தனர்.

மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர் மற்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய அதிகாரிகள், புகையிரத திணைக்கள அதிகாரிகள் உட்பட்ட பல தரப்பினர் அங்கு விஜயம் செய்தனர்.

நகரபிதா எம்.எஸ்.எம்.ரபீக் மாவட்ட செயலாளரிடம் மக்களின் போராட்டம் மற்றும் வெள்ள அனர்த்த காரணிகள் என்பவற்றை விபரித்தார்.

இதைத் தொடர்ந்து, மாவட்ட செயலாளர், புத்தளம் மாவட்ட



பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் மற்றும் உயரதிகாரிகள் கொண்ட குழுவினர் பல பகுதிகளுக்கும் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டனர்.

இதன்பின் மாவட்ட செயலகத்தில் கூட்டமும் இடம்பெற்றது. அநுராதபுர வீதியை ஊடறுத்து அவசரமாக கால்வாய் அகழ வேண்டும் என்ற கோரிக்கையை நகரபிதா எம்.எஸ். எம்.ரபீக்

உட்பட நகரசபை உறுப்பினர்கள் இதில் முன்வைத்தனர். இக்கோரிக்கையை ஏற்றுக் கொண்ட மாவட்ட செயலாளர் இதற்கான பணிப்புரைகளையும் விடுத்தார்.

நகரபிதாவின் அறிவுறுத்தலுக்கமைய நகர சபையால் வீதியை அகழும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, ஆறு பாரிய மதகுகள் பொருத்தப்பட்டுள்ளன.

நகரசபை உறுப்பினர்கள் உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் பொது மக்கள் உட்பட பலரின் பங்களிப்போடு, இந்த சவாலான பணிகள் வெற்றிகரமாக நடாத்தி முடிக்கப்பட்டன.

இதன் மூலம் புத்தளம் மணல் குன்று, கடையாகுளம் சமகி மாவத்தை உட்பட பல பகுதிகளிலும் தேங்கிக் கிடக்கும் வெள்ள நீர் விரைவாக வெளியேறிக் கொண்டிருக்கின்றது.

## ஐயப்ப பக்தர்களுக்கு தேவையான உதவிகளை இ.தொ.கா வழங்கும்

(கொழும்பு கோட்டை தினகரன் நிருபர்)

இந்தியா செல்லும் ஐயப்ப பக்தர்களுக்கு தேவையான உதவிகளை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஸ்தாபக தலைவர் மறைந்த சௌமியமூர்த்தி தொண்டமான், மறைந்த முன்னாள் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் காலம் தொடக்கம் இன்று வரை செய்து வருவதாக பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்தியாவின் கேரளாவைச் சேர்ந்த ஐயப்ப மேல்சாந்தி எம்.என்.ரெஜிகுமார் நம்போதிரி உள்ளிட்ட குருசாமி



களுக்கும் செந்தில் தொண்டமானுக்குமிடையே விசேட சந்திப்பொன்று திங்கட்கிழமை மாலை மட்டக்குளி இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உப தலைவர் கணேசமூர்த்தியின் இல்லத்தில் நடைபெற்றது. இச்சந்திப்பின்போது இலங்கையிருந்து இந்தியா செல்லும் ஐயப்ப பக்தர்களுக்கு அங்கு செய்ய வேண்டிய உதவிகள், இலங்கை அரசாங்கம் வழங்கியுள்ள இலவச வீசா மற்றும் ஏனைய விடயங்கள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இச்சந்திப்பில், அகில இலங்கை குருசாமி ஒன்றியத்தின் தலைவர் ஆறுமுகம் ரவீந்திரன், செயலாளர் சுப்பிரமணியம் ரவி சாமி மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் கணேசமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது, செந்தில் தொண்டமான், இ.தொ.கா உப தலைவர் கணேசமூர்த்தி மற்றும் இந்தியாவின் மேல்சாந்தி எம்.என்.ரெஜிகுமார் நம்போதிரி ஆகியோர் அகில இலங்கை குருமார் ஒன்றியத்தினரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

## பயன்படுத்தப்படாதிருந்த சிலிண்டர் வெடிப்பு; பாதிப்புக்கள் எதுவும் இல்லை

(கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்)

பாலாவி கரம்பை ஹூதா பள்ளி வீதியில் அல்ஹூதா பாலர் பாடசாலைக்கு முன்பாக உள்ள உணவகத்தில், பயன்படுத்தப்படாதிருந்த கேஸ் சிலிண்டரில் கசிவு ஏற்பட்டு முழுமையாக வெடித்துச்சிதறியது. இச்சம்பவம் நேற்று நிகழ்ந்தது. இதில், எவ்வித சேதங்களும் இடம் பெறவில்லை.

சம்பவம் இடம்பெற்ற போது குறித்த உணவகத்தின் உரிமையாளர் மாத்திரமே இருந்துள்ளார்.

உணவுப் பண்டங்களை தயாரித்துக் கொண்டிருந்த போது, சமையலறையில் திடீரென வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றதாக ஹோட்டல் உரிமையாளர் கூறினார். மேலும்,



அடுப்பிலிருந்து ரெகுலேட்டரை கழற்றிய போது சமையல் எரிவாயு சிலிண்டரில் தீப்பிடித்ததுடன், பொங்கிய நிலையில் குமிழ்கள் வெளியே வந்ததாகவும் அவர் கூறினார். கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னரும், சிறிய அளவில் இவ்வாறு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# உள்ளூராட்சி மன்ற அறிவித்தல்

## இரத்தினபுரி மாநகர சபை

## வரைவுப்பாதீடு – 2022

மாநகர சபை நியதிச்சட்டத்தின் 252ஆம் அத்தியாயத்தின் கீழ் 212 (ஆ) ஆம் பிரிவின் பிரகாரம் இரத்தினபுரி மாநகரசபையின் 2022 நிதிவருடத்துக்குரிய வரைவுப்பாதீடு 2021 திசெம்பர் மாதம் 01ஆம் திகதி இறுதி கவனத்திற்காக சமர்ப்பிக்கப்படுவதுடன் பொதுமக்கள் பரிசீலனைக்கென 2021 டிசெம்பர் மாதம் 02ஆம் திகதி தொடங்கி 7 நாட்கள் வரை இரத்தினபுரி மாநகர சபை காரியாலயத்தில் திறந்துவைக்கப்பட்டிருக்கும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

**மாநகர சபை ஆணையாளர்,**
**இரத்தினபுரி**

**மாநகர சபை காரியாலயம்,**
**2021 டிசெம்பர் 01**

---

**சேதனப் பசளை உற்பத்தி ஊக்குவிப்பு மற்றும் வழங்கல் ஒழுங்குறுத்தல்கள் மற்றும் நெல் மற்றும் தானியங்கள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழங்கள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கை ஊக்குவிப்பு, விதைகள் உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப விவசாய இராஜாங்க அமைச்சு**

# அறிவித்தல்!

## கமநல அபிவிருத்தித் திணைக்களம்

## பெறுகை அழைப்பு வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் – 2022

மேற்படி விடயம் தொடர்பாக 01.12.2021 ஆந் திகதி தினகரன் செய்திப் பத்திரிகை வெளியிடப்பட்டுள்ள அறிவித்தல் தொடர்பானது.

அறிவித்தலில் 01 வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள "ஒரு விண்ணப்பப்படிவத்திற்கு ரூபா 1,000.00 வீதமாக மீளச் செலுத்தப்படாத வைப்புப் பணத்தைக் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதான காரியாலயத்தின் சிறாப்பர் பிரிவுக்கு அல்லது உரிய கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்திற்குச் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்" என்பது, ஒரு விண்ணப்பப்படிவத்திற்கு ரூபா 1,000.00 வீதமாக மீளச் செலுத்தப்படாத வைப்புப் பணத்தைக் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதான காரியாலயத்தின் சிறாப்பர் பிரிவுக்குச் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும் எனத் திருத்தம் செய்யப்படுகின்றது.

**கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்,**
**கமநல அபிவிருத்தித் திணைக்களம்,**
**இல. 42 சேர் மார்கஸ் பெர்னாந்து மாவத்தை, கொழும்பு-07.**
**தொலைபேசி இலக்கம் 011-2674480**
**தொலைபேசி நீடிப்பு இலக்கம் 303**
02.12.2021

---

**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை**

## விலைமனு திருத்தம்

# அறிவித்தல்

**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையில் மின் பிறப்பாக்கி இயந்திரத்திற்கான அறையை நிர்மாணித்தல்**

ஒப்பந்த இலக்கம் : Q-262/21

2020.08.12 அன்று இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விலைமனு அறிவித்தல் தொடர்பானது.

6,7,8 மற்றும் 10ஆம் பந்திகள் பின்வருமாறு திருத்தி அமைக்கப்படுகின்றதென தயவுசெய்து கவனிக்கவும்.

06. 2021.12.22 அன்று 09.00 மணிமுதல் 15.00 மணி வரை விலைமனுப்படிவங்கள் வழங்கப்படும்.
07. 2021.12.23 அன்று 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
08. விலைமனுக்கள் 2021.12.23 முதல் 2022.03.23 வரை செல்லுபடியாகுதல் வேண்டும்.
10. 2021.12.15 அன்று மு.ப.10.00 இற்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.

மேற்குறிப்பிட்ட விளம்பரத்தின் ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் எவ்விதமாற்றமுமில்லை.

**தலைவர் - பெறுகைக்குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர**
**பொது வைத்தியசாலை**
**தளபத்பிட்டிய**



---

**பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சு**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்**

# பெறுகை அறிவித்தல்

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் நிருவாகத்தின் கீழுள்ள வுட்சயிட் (Woodside) அரச பெருந்தோட்டத்திலிருந்து அகற்றப்படக்கூடிய பலகை மரங்கள் 479 ஐ விற்பனை செய்வதற்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. அவ்வாறான விலைகளுக்கான நிபந்தனைகள் மற்றும் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான படிவங்கள் அடங்கலாக கேள்வி ஆவணங்கள் கொழும்பிலுள்ள அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபன பிரதான அலுவலகத்திலிருந்து அல்லது கல்பிஹில்ல பெருந்தோட்டத்தில் அமைந்துள்ள பிரதேச அலுவலகத்தில் 2000 ரூபாவைச் செலுத்தி 2021.12.06 ஆம் திகதியிலிருந்து 2021.12.22 ஆம் திகதி வரையும் பி.ப. 1 மணி வரையும் விலைக்கு பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறான ஆவணங்கள் கொழும்பிலுள்ள பிரதான அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் 2021.12.22 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு முன்னராக சேர்க்கப்படல் வேண்டுமென்பதுடன் அதே நாளன்று பி.ப. 2 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்.

2021.12.22 பி.ப. 1 மணிக்கு பின்னர் எந்தவொரு காரணத்தையும் முன்னிட்டு கேள்வி ஆவணங்கள் வழங்கப்பட மாட்டாது என்பதுடன் எந்தவொரு விலையையும் அல்லது விலையின் பகுதியையும் அல்லது ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்குமான இரத்துச் செய்வதற்கான உரிமையை இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பெறுகைக் குழுவானது கொண்டுள்ளது என்பதுடன் அதுவே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**இல. 21, மீரானியா தெரு,**
**கொழும்பு-12.**

**திகதி: 2021.11.30**
**தொடர்புகளுக்கு: 0115-921463**

---

# ஜாஎல பிரதேச சபை

**2022 – 01 – 01ஆம் திகதி முதல் 2022 – 12 – 31ஆம் திகதி வரையில் ஜா – எல பிரதேச சபைக்குரித்தான இறைச்சிக் கடைகள், ராகம பொது மலசலகூட முறைமைகள் மற்றும் ராகம வாகனத் தரிப்பிடத்தை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரல் அறிவித்தல்**

இந்த பிரதேச சபையின் அதிகார பிரதேசத்திற்குட்பட்ட ராகம உப அலுவலகப் பிரதேசத்தில் அமைந்துள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சபைக்குரித்தான இறைச்சிக் கடை, ராகம பொது மலசலகூட முறைமை மற்றும் ராகம வாகனத் தரிப்பிடத்தை குத்தகைக்கு விடுவதற்காக (2022-01-01ஆம் திகதி முதல் 2022-12-31ஆம் திகதி வரையான காலத்திற்காக) முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் 2021-12-20ஆம் திகதி மு.ப. 10.00 வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

இயைபுடைய கேள்விப் படிவம், கேள்விப் படிவக் கட்டணமான 5000.00 ரூபா மற்றும் மீளளிக்கப்படாத 10000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் 2021-12-17ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை ஜா-எல பிரதேச சபையின் கந்தானையில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

இயைபுடைய கேள்விப் படிவங்களை ஏற்றுக்கொள்ளல் 2021-12-20ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நிறைவுறும் என்பதுடன் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை நகல் பிரதி மற்றும் மூலப் பிரதி என வெவ்வேறான உறைகளில் இட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இயைபுடைய கேள்வியின் பெயரைக் குறிப்பிட்டு 2021-12-20ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் செயலாளர், ஜா-எல பிரதேச சபை, கந்தானை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

தாமதமாகக் கிடைக்கப்பெறும் அல்லது முழுமையற்ற கேள்விப் படிவங்களை நிராகரிக்கும் முழுமையான உரிமையை ஜா-எல பிரதேச சபையின் தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

கேள்வியைச் சமர்ப்பிக்கும் முறை மற்றும் சகல அறிவுரைகளும் கேள்விப் படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

மேலதிக விபரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்.
**011-2239566**
**011-2232501**

**தலைவர்,**
**ஜா-எல பிரதேச சபை,**
**கந்தானை.**

**2021-11-29ஆம் திகதி**
**ஜா-எல பிரதேச சபை பிரதான அலுவலகத்தில்.**

**அட்டவணை**

| தொ. இல. | விபரங்கள் | கேள்விப் படிவக் கட்டணம் ரூபா | கேள்விப் பிணைத் தொகை ரூபா | குறைந்த பட்சக் கேள்வி ரூபா |
|---|---|---|---|---|
| 01. | ராகம பொதுச் சந்தையின் 02ஆம் இலக்க மாட்டிறைச்சிக் கடை | 5000.00 | 47,700.00 | 954,000.00 |
| 02. | ராகம பொது மலசலகூட முறைமை | 5000.00 | 46,250.00 | 925,000.00 |
| 03. | ராகம வாகனத் தரிப்பிடம் (07 நாட்களுக்கு) | 5000.00 | 39,000.00 | 780,000.00 |
| 04. | ராகம வாகனத் தரிப்பிடம் (05 நாட்களுக்கு) | 5000.00 | 18,000.00 | 360,000.00 |

---

**2022 ஆம் வருடத்திற்கான அரசாங்க மருத்துவமனைகளுக்கு சமைக்காத உணவுப்பொருட்களை வழங்கலுக்கான விலைக் கேள்வி கோரல் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், மட்டக்களப்பு**

**கிழக்கு மாகாணம்**

1. மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக நிர்வாகத்திற்குட்பட்ட பின்வரும் வைத்தியசாலைகளுக்கு 01.01.2022 தொடக்கம் 31.12.2022 (இரு நாட்களும் உட்பட) வரையான ஒருவருட காலத்திற்கு சமைக்காத உணவுப் பொருட்களை வழங்குவதற்கான விண்ணப்பங்கள் இலங்கைப் பிரஜைகளான வழங்குநர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

| தொ. இல | நிறுவனம் | மீளளிக்கத் தக்க வைப்புப் பணம் (ரூபா) | சொத்துச் சான்றிதழ் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|
| 01 | ஆதார வைத்தியசாலை, வாழைச்சேனை | 150,000.00 | 300,000.00 |
| 02 | ஆதார வைத்தியசாலை, களுவாஞ்சிக்குடி | 100,000.00 | 350,000.00 |
| 03 | ஆதார வைத்தியசாலை, காத்தான்குடி | 75,000.00 | 400,000.00 |
| 04 | ஆதார வைத்தியசாலை, ஏறாவூர் | 75,000.00 | 200,000.00 |
| 05 | மாவட்ட வைத்தியசாலை, ஆரையம்பதி | 50,000.00 | 250,000.00 |
| 06. | மாவட்ட வைத்தியசாலை, கல்லாறு | 30,000.00 | 150,000.00 |
| 07 | பிரதேச வைத்தியசாலை, செங்கலடி | 30,000.00 | 150,000.00 |
| 08 | பிரதேச வைத்தியசாலை, சந்திவெளி | 20,000.00 | 100,000.00 |
| 09. | பிரதேச வைத்தியசாலை, வாகரை | 15,000.00 | 75,000.00 |
| 10 | பிரதேச வைத்தியசாலை, கரடியனாறு | 20,000.00 | 100,000.00 |
| 11 | பிரதேச வைத்தியசாலை, மீராவோடை | 25,000.00 | 125,000.00 |
| 12 | பிரதேச வைத்தியசாலை, கதிரவெளி | 12,000.00 | 60,000.00 |
| 13 | பிரதேச வைத்தியசாலை, மாவடிவேம்பு | 15,000.00 | 75,000.00 |
| 14 | பிரதேச வைத்தியசாலை, மண்டபத்தடி | 15,000.00 | 75,000.00 |
| 15 | பிரதேச வைத்தியசாலை, மகிழடித்தீவு | 20,000.00 | 100,000.00 |
| 16 | பிரதேச வைத்தியசாலை, பழுகாமம் | 15,000.00 | 75,000.00 |
| 17 | பிரதேச வைத்தியசாலை, மண்டூர் | 12,000.00 | 60,000.00 |
| 18 | பிரதேச வைத்தியசாலை, நாவற்காடு | 8,000.00 | 40,000.00 |
| 19 | பிரதேச வைத்தியசாலை, பாலமுனை | 7,000.00 | 35,000.00 |
| 20 | பிரதேச வைத்தியசாலை, துறைநீலாவணை | 15,000.00 | 75,000.00 |
| 21 | பிரதேச வைத்தியசாலை, செட்டிபாளையம் | 15,000.00 | 75,000.00 |
| 22 | உள நல புனர்வாழ்வு நிலையம், மாவடிவேம்பு | 16,000.00 | 80,000.00 |
| 23. | ஆயுர்வேத ஆதார வைத்தியசாலை, புதுக்குடியிருப்பு | 25,000.00 | 150,000.00 |
| 24 | மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலை, ஏறாவூர் | 15,000.00 | 100,000.00 |
| 25 | ஆயுர்வேத கிராமிய வைத்தியசாலை, ஓந்தாச்சிமடம் | 7,000.00 | 50,000.00 |

2. பின்வரும் ஆவணங்களை சமர்ப்பித்து ஒவ்வொரு ஆவணத்திற்கும் மீளளிக்கப்படாத வைப்புக் கட்டணமாக ரூபா 1,000.00 செலுத்தி விலைக் கேள்வி ஆவணங்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகக் கணக்காளரிடம் 02.12.2021 ஆம் திகதியிலிருந்து 22.12.2021 ஆம் திகதி நண்பகல் 12.00 - மணிவரை பெற்றுக்கொள்ளலாம். காசோலைகள் ஏற்கப்படமாட்டாது.
   a. விலைமனுக் கோரல் ஆவணத்தினைப் பெறுவதற்கான கோரிக்கை கடிதம்
   b. ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் G 170 படிவத்தில் மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து சான்றிதழுக்கான தொகைக்காக உரித்தான வைத்தியசாலை அமைந்தவிடத்து அல்லது ஒப்பந்தக்காரர் வசிக்குமிடத்து பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழ். இச்சான்றிதழானது வழங்கப்படும் திகதியிலிருந்து 06 மாதங்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிருத்தல் வேண்டும்.
   c. உணவு வழங்கலுடன் தொடர்புடைய வியாபாரப் பதிவுச் சான்றிதழ்
3. விலைக் கேள்வியானது 23.12.2021 மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், மட்டக்களப்பு என்ற முகவரியில் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் உரித்தான வைத்தியசாலையின் பெயர் மற்றும் ஒப்பந்தக்காரரின் பெயர் என்பன தனித்தனியாக தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் மூடிய பின்னர் அன்றைய தினம் உடனடியாகத் - திறக்கப்படும்.
4. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி இலக்கம் 065 2222997
5. விலைமனுக்கள் தொடர்பான பெறுகைக்குழு தீர்மானமே இறுதியானதாகும்.

**தலைவர்**
**பிராந்திய பெறுகைக்குழு**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்**
**மட்டக்களப்பு.**
**தொலைபேசி இலக்கம்:- 065-2222997**

---

**தென் மாகாண சபை**

# பெறுகை அறிவித்தல்

**தென் மாகாண பிரதான செயலகம்**

## வக்வெல்ல முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு உணவு வழங்குதல்

**விலைக்கோரல் இல. SPC/CS/NCB/06**

தென் மாகாண பிரதான செயலகத்திற்கு இணைவான காலி வக்வெல்லயில் அமைந்துள்ள முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு 2022-01-01ஆம் திகதி முதல் ஒரு வருட காலத்திற்கு உணவை வழங்குவதற்கு போதுமான நிதி வசதி மற்றும் இயைபுடைய துறையில் தகுதி மற்றும் அனுபவம் கொண்ட நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. இதன்பொருட்டான மேலதிக விபரங்களை உள்ளடக்கிய பெறுகைப் படிவங்களை 2021-12-01ஆம் திகதி முதல் 2021-12-14ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் மீளளிக்கப்படாத 1000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி காலி எஸ்.எச. தஹநாயக்க மாவத்தையில் அமைந்துள்ள தென் மாகாண பிரதான செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். அல்லாவிட்டால் தென் மாகாண பிரதான செயலாளரின் பெயரில் இலங்கை வங்கியில் பேணப்படும் 1587305 எனும் கணக்கிலக்கத்திற்கு 1000.00 ரூபாவை வைப்புச் செய்து, அந்தப் பற்றுச்சீட்டை இந்த அலுவலகத்தின் 0912242697 எனும் தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பியோ அல்லது procurementplan1@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பியோ பெறுகை படிவத்தை பதிவுத் தபாலில் நீங்கள் வரவழைத்துக்கொள்ளலாம்.

03. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுப் படிவங்களை 2021-12-16ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் செயலாளர், பிரதான செயலகம், எஸ்.எச். தஹநாயக்க மாவத்தை, காலி எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து பிரதான செயலகத்தின் வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் பதிவுசெய்து அங்கு வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும்.

04. விலைமனுக்களைத் தாங்கிவரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையத்திற்கு உணவு வழங்குவதற்கான விலைமனு" எனக் குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுக்கள் 2021-12-16ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்குத் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விண்ணப்பதாரர் அல்லது அவரது அதிகாரம் வாய்ந்த பிரதிதிநியொருவர் கலந்துகொள்ளலாம். தாமதமாக சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

05. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும் என்பதை தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும்.

**ஆர்.சீ. த சொய்சா,**
**பிரதான செயலாளர்,**
**பிரதான செயலகம்,**
**தென் மாகாணம்.**
**2021-11-30**

**மேலதிக விசாரணைகளுக்கு:**
**தொலைபேசி இல.: 091-4944016/091-4946368**
**இணையதளம்: www.cs.sp.gov.lk**

---

**விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்**

# பெறுகை அறிவித்தல்

**விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்திற்குரித்தான இடப்பரப்புகளுக்கு பாதுகாப்புச் சேவைகளை பெற்றுக்கொள்வதற்கான விலைமனு கோரல் - 2022**

கொழும்பு 07, பிலிப் குணவர்தன மாவத்தை, 09ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்திற்குரித்தான, கொழும்பு 7, சுதந்திர மாவத்தை, 33ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள பழைய விடுதி, விளையாட்டுச் சங்கக் கட்டிடம், டொரிங்டன் விளையாட்டரங்கு, 100/10ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள பார்வையாளர் கூடம், 100/08ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள ரீட் அவன்யூ விடுதி, ரீட் அவனியூவுக்கு அருகில் உள்ள வாகனத் தரிப்பிடம், பெலியத்த டீ.ஏ. ராஜபக்ஷ விளையாட்டு கட்டிடத் தொகுதி, மாத்தறை கொட்டவில மாவட்ட விளையாட்டுக் கட்டிடத் தொகுதி, பொலன்னறுவை மாவட்ட விளையாட்டுக் கட்டிடத்தொகுதி, களுத்துறை விளையாட்டுக் கட்டிடத் தொகுதி, கிளிநொச்சி விளையாட்டுக் கட்டிடத் தொகுதி, இரத்தினபுரி மாவட்ட விளையாட்டுக் கட்டிடத் தொகுதி, மாத்தளை மாவட்ட விளையாட்டுக் கட்டிடத் தொகுதி, பிங்கிரிய மாவட்ட விளையாட்டுக் கட்டிடத் தொகுதி, காலி மாவட்ட விளையாட்டுக் கட்டிடத் தொகுதி மற்றும் துன்வத்த விளையாட்டுக் கட்டிடத்தொகுதிபோன்ற இடங்களுக்கான பாதுகாப்புச் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக தேசிய போட்டி ரீதியான விலைமனுக் கோரலின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

(02) விளையாட்டுத்துறை அமைச்சின் இரண்டாம் மாடியில் அமைந்துள்ள விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் கணக்குப் பிரிவின் சிறாப்பருக்கு மீளளிக்கப்படாத 7,500.00 ரூபா தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை பெறுகைப் பிரிவிற்குச் சமர்ப்பித்ததன் பின் 2021-12-02ஆம் திகதி முதல் 2021-12-21ஆம் திகதி வரையான (மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை) அலுவலக நாட்களில் இயைபுடைய பெறுகை ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

(03) சகல விலைமனுதாரர்களும் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு வர்த்தக வங்கியிலும் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் பெற்றுக்கொண்ட 200,000.00 பெறுமதியான விலைமனு காப்பொன்றை (பிணை முறியொன்றை) 1ஆம் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். இந்தப் பிணை முறி விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 119 நாட்களுக்கு (2021-12-22ஆம் திகதி முதல் 2022-04-19ஆம் திகதி வரை) செல்லுபடியாதல் வேண்டும்.

(04) உரிய மாதிரிப் படிவத்தில் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை ''மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி'' என இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். இந்த விலைமனுக்களை 2021-12-22ஆம் திகதி மு.ப. 11.00 வரை ஏற்றுக்கொள்ளப்படும். பதிவுத் தபாலில் அனுப்பப்படும் விலைமனுக்களை பணிப்பாளர் நாயகம், விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம், இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு 07 எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கப்படும் விலைமனுக்களை விளையாட்டு அமைச்சின் இரண்டாம் மாடியில் அமைந்துள்ள விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் நிர்வாகக் கிளையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

(05) விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2022ஆம் வருடத்தில் பாதுகாப்புச் சேவைகளை நடாத்திக் கொண்டு செல்வதற்கான விலைமனு'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுக்கள் 2021-12-22ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் அன்றைய தினம் நீங்கள் அல்லது உங்களது பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

(06) விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 91 நாட்கள் வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்,**
**இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தை,**
**கொழும்பு 07.**
**தொலைபேசி: 011-2697934**
**தொலைநகல்: 011-2695822**

BE BETTER INFORMED!
News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
AVAILABLE AT
LAKE HOUSE



# பகிரங்க ஏலவிற்பனை

ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ நிறுவனத்திற்குரிய அனைத்து தங்க கடன் சேவை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட தங்க கடனுடன் தொடர்புடைய 2021/10/31 திகதிக்கு காலாவதியாகி இதுவரை மீட்கப்படாத அனைத்து தங்க நகைகளும் 2021/12/22 மற்றும் 2021/12/23 ஆகிய திகதிகளில் மு.ப. 10.00க்கு கீழுள்ள விலாசத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

**ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ,**
(PB1079/PQ)
இல. 19, புகையிரத வீதி, நுகேகொடை.
தொலைபேசி: 0117 444 222

## பெயர் மாற்றம்

அக்கரைப்பற்று - 7 பொற்கொல்லர் வீதியைப்பிறப்பிடமாகக் கொண்ட செல்லத்துரை ரக்ஷலா தேசிய அடையாள அட்டை இல. 965133607 V) ஆகிய நான், எனது சொந்த விருப்பத்தின் பேரில் புனித இஸ்லாம் மதத்தைத் தழுவி எனது பெயரை பாத்திமா ரக்ஷானா என மாற்றிக்கொண்டேன் என்பதையும் இனிமேல் எனது சகல ஆவணங்களிலும் தஸ்தாவேஜுகளிலும் இப்பெயரையே குறிப்பிடுவேன் என்பதையும் இத்தால் ஸ்ரீ லங்கா குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் - தெரியப்படுத்துகின்றேன்.

**பாத்திமா ரக்ஷானா - 135, வெள்ளப்பாதுகாப்பு வீதி, அக்கரைப்பற்று 15**

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(2) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் முன்னைய பெயர்:

**ஐக்கொனிக் புரொப்பர்டி டுவென்டி ஃபைவ் (பிரைவட்) லிமிட்டம்**

பதிவிலக்கம்: PV 00232531

பெயர் மாற்றம் செய்யப்பட்ட திகதி: 2021.08.11

பதிவு முகவரி:

**790, ஹவ்லொக் வீதி, கொழும்பு 06**

கம்பனியின் புதிய பெயர்:

**ஐக்கொனிக் ட்ரஸ்ட் (பிரைவட்) லிமிட்டம்**

**கம்பனி செயலாளர்கள்**

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(2) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் முன்னைய பெயர்:

**ஐக்கொனிக் புரொப்பர்டி டுவென்டித்ரீ (பிரைவட்) லிமிட்டட்**

பதிவிலக்கம்: PV 00232529

பெயர் மாற்றம் செய்யப்பட்ட திகதி: 2021.10.09

பதிவு முகவரி:

**100/1 ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய**

கம்பனியின் புதிய பெயர்:

**எல் ஓ எல் சீ இன்வெஸ்ட் மன்ட் ஹோல்டிங்ஸ் வன் (பிரைவட்) லிமிட்டட்**

**கம்பனி செயலாளர்கள்**

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(2) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் முன்னைய பெயர்:

**சிங்க புரொப்பர்டி தெர்டீன் (பிரைவட்) லிமிட்டட்**

பதிவிலக்கம்: PV 00229969

பெயர் மாற்றம் செய்யப்பட்ட திகதி: 2021.07.28

பதிவு முகவரி:

**100/1 ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய**

கம்பனியின் புதிய பெயர்:

**அயிகொனிக் புரொப்பர்டி டுவென்டி எயிட் (பிரைவட்) லிமிட்டட்**

**கம்பனி செயலாளர்கள்**

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(2) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் முன்னைய பெயர்:

**ஐக்கொனிக் புரொப்பர்டி டுவென்டி சிக்ஸ் (பிரைவட்) லிமிட்டம்**

பதிவிலக்கம்: PV 00232532

பெயர் மாற்றம் செய்யப்பட்ட திகதி: 2021.08.12

பதிவு முகவரி இல:

**100/1 ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய**

கம்பனியின் புதிய பெயர்:

**எல் ஓ எல் சீ பின்கோர்ப் (பிரைவட்) லிமிட்டம்**

**கம்பனி செயலாளர்கள்**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

### ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஹோமாகம, பிட்டிபன, தொழில்நுட்பப் பீடத்தில் பல்கலைக்கழக வளவின் நெடுகிலும் தற்போதுள்ள எல்லைச் சுவரை மாணவர் விடுதி வரை விஸ்தரித்தல்

**IFB No. CW/RE/FOT/26/2021**

1. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரினால் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வகையில் வெட் வரியின்றி 15.28 மில்லியன் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பல்கலைக்கழக வளவின் நெடுகிலும் தற்போதுள்ள எல்லைச் சுவரை ஹோமாகம, பிட்டிபன, தொழில்நுட்பப் பீடம், மாணவர் விடுதி வரை விஸ்தரித்தல் வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

   இவ்வேலைகளில் அளவுப் பத்திரத்தில் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் எல்லைச் சுவர் வேலைகள் உள்ளடங்குகின்றன. நிர்மாணக் காலம் 180 நாட்களாகும்.

2. கேள்வி கோரல் தேசிய திறந்த போட்டி ரீதியிலான கேள்வி கோரல் செயற்பாட்டிற்கமைய மேற்கொள்ளப்படும். மேலும் இந்தப் பெறுகையின் கீழ் செய்யப்படும் வேலைகளின் மதிப்பீட்டுப் பெறுமதி (வெட் மற்றும் ஏனைய வரிகள் இன்றி) 50 மில்லியன் ரூபாவுக்குக் குறைவாக இருப்பதனால், 04/2016(iii)ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை பிரயோகிக்கப்படும். மேலும் 2020-10-09ஆம் திகதிய 03/2020ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அரச தொழில்முயற்சி போட்டி அடிப்படையிலான கேள்விக்காக கேள்விகளைச் சமர்ப்பிக்கும் வேளையில் அந்த அரச தொழில்முயற்சிக்காக ஏனைய ஒப்பந்தக்காரர்களைவிட 5% முன்னுரிமை நிதி மதிப்பீட்டின்போது மட்டும் வழங்கப்படும்.

3. தகைமைகள் தொடர்பான தேவைப்பாடுகள்: (ஆவண சாட்சிகளை இணைத்தல் வேண்டும்)
   i. கேள்விதாரரினால் கேள்வி ஆவணத்தின் (தகைமைத் தகவல்கள் மற்றும் கேள்விப் படிவம்) 4வது தொகுதியில் வேண்டப்படும் விபரங்கள் வழங்கப்படல் வேண்டும்.
   ii. CIDA பதிவு – C6 மற்றும் C5 கட்டிட நிர்மாணத்துறை, மதிப்பிடும் வேளையில் செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும்.
   iii. கேள்விதாரரினால் இயைபுடைய ஒப்பந்தத்தில் ஈடுபடுத்தப்படும் பிரதான நிரந்தர ஊழியர்கள் சகலரினதும் விபரங்கள் (ஊழியர் சேமலாப நிதி உட்பட) வழங்கப்படுதல் வேண்டும். கேள்விதாரரினால் ஊழியர்களை நாட்சம்பள அடிப்படையில் சேர்ப்பதானால் இயைபுடைய நிறுவனத்திலிருந்து விடுவிப்பதற்கான விருப்பத்தை வெளிப்படுத்தி பெற்றுக்கொண்ட கடிதமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. தகுதித் தேவைப்பாடுகளில் உள்ளடங்குபவை:
   i. கேள்வி கோரப்படும் நாள் மற்றும் ஒப்பந்தம் வழங்கப்பெறும் நாட்களில் கேள்விதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்கப்படாதவராக இருத்தல் வேண்டும்.
   ii. கடந்த 4 வருடங்களுக்குள் 12 மில்லியன் ரூபாவுக்குக் குறையாத ஒப்பந்தப் பெறுமதி கொண்ட இதற்குச் சமமான வகையில் ஆகக் குறைந்தது 3 ஒப்பந்த அனுபவம். (ஆவணச் சாட்சிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்)
   iii. குறைந்தபட்சம் 4.5 மில்லியன் ரூபா திரவ சொத்துக்கள் குறித்த ஒப்பந்தத்திற்கான முற்பணம் தவிர்ந்த அல்லது கடன்வசதிகளை (ஒப்பந்தக் கடப்பாடுகள் ஒதுக்கப்பட்டதன் பின்) பூர்த்தி செய்திருத்தல். (ஆவணச் சாட்சிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.)

5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை உதவிப் பதிவாளர், மூலதனம் மற்றும் திட்டமிடல் கிளை, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், கங்கொடவில, நுகேகொடை – தொலைபேசி: 011-2803195, தொலைநகல்: 011-2803185 எனும் இலக்கங்கள் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் பின்வரும் முகவரியில் மு.ப. 8.30 முதல் பி.ப. 4.30 மணி வரையில் கேள்வி கோரல் படிவங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

6. 2021-12-01ஆம் திகதி முதல் 2021-12-15ஆம் திகதி வரை மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான காலத்தில் மீளளிக்கப்படாத 4,000.00 ரூபா கட்டணத்தைச் பல்கலைக்கழகத்தின் சிறாப்பருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்துவதன் பேரில் ஆங்கில மொழியில் அச்சடிக்கப்பட்ட முழுமையான கேள்வி கோரல் படிவத் தொகுதியொன்றை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மூலதன வேலைகள் மற்றும் திட்டமிடல் கிளை உதவிப் பதிவாளருக்கு எழுத்து மூல விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

7. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை 2021-12-16ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் மூலதன வேலைகள் மற்றும் திட்டமிடல் பிரிவிற்கு நகல் பிரதியுடன் கேள்வியை ஒப்படைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவுற்ற உடனடுத்து கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.

8. 2022-03-17ஆம் திகதி வரை கேள்விகள் செல்லுபடியாதல் வேண்டும்.

9. சகல கேள்விகளுடனும் 229,000.00 ரூபா (இரண்டு இலட்சத்து இருபத்தொன்பதாயிரம் ரூபா) பெறுமதியான கேள்விப் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் பிணை முறியானது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உப வேந்தரின் பெயரில் வரையப்பட்டதும் 2022-04-14ஆம் திகதி வரை செல்லுபடியாதலுல் வேண்டும்.

10. 2021-12-08ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு ஹோமாகம, பிட்டிபன, தொழில்நுட்ப பீடத்தின் சபை அறையில் கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.

கேள்விப் படிவங்களைப் பரீட்சித்துப் பார்த்தல், கொள்வனவு செய்தல் மற்றும் ஒப்படைப்பதற்கான மேற்குறிப்பிடப்பட்ட முகவரி:

**உதவிப் பதிவாளர்,**
**மூலதன வேலைகள் மற்றும் திட்டமிடல் கிளை,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,**
**கங்கொடவில, நுகேகொடை.**
**தொலைபேசி: 011-2803195**

**தலைவர் - திணைக்களப் பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்.**
**2021-11-22**

## இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் - மிஹிந்தலை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## 2022/2023 பாதுகாப்புச் சேவை ஏற்பாடுகள்

1. பாதுகாப்பு சேவை ஏற்பாடுகளுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

   வளாகம் 01 - மிஹிந்தலை வளாகம்
   வளாகம் 02 - விவசாய பீடம் மற்றும் மருத்துவ பீடம்

2. தேசிய போட்டி ரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைகேட்பு நடத்தப்படும்.

3. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான தகுதியை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதிருத்தல் வேண்டும்.

4. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதிக்கு தேவையான தகைமைகளில் உள்ளடங்குவன;
   I. விலைமனுதாரர்கள் 2021 ஆம் ஆண்டிற்காக பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்திருத்தல் வேண்டும் என்பதோடு ஒப்பந்தம் வழங்கப்படும் நேரத்தில் 2022 ஆம் ஆண்டுக்காக செல்லுபடியான பதிவை பெற்றிருத்தல் வேண்டும்.
   II. விலைமனுதாரர்கள் அரச பல்கலைக்கழகங்களில் அனுபவம் உட்பட அரச நிறுவனங்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சட்டரீதியான சபைகள் அல்லது பாரிய அளவான தனியார் நிறுவனங்களுக்கு கடந்த மூன்று ஆண்டு காலத்தில் (2018, 2019, 2020 ஆண்டுகள் உட்பட) பாதுகாப்பு சேவை வழங்கிய அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும். (வளாகம் 1 இற்கு ஒவ்வொரு நிறுவனங்களிலும் பணி நேரம் ஒன்றில் 80 இற்கு குறையாத மற்றும் வளாகம் 02 இற்கு 70 இற்கு குறையாத பாதுகாப்பு ஊழியர்களை பணியமர்த்தி இருத்தல் வேண்டும்.)

5. வார நாட்களில் 025-2266781 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலம் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் நிர்வாக/ சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெற முடியும்.

6. ரொக்கப்பணமாக 12,500 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி மு.ப. 09:00 தொடக்கம் பி.ப. 3.00 இற்கு இடையே சாதாரண வேலை நாட்களில் 2021.12.02 தொடக்கம் 2021.12.21 வரை நிர்வாக/ சிரேஷ்ட உதவிப் பதிவாளருக்கு கோரிக்கை கடிதம் ஒன்றை சமர்ப்பித்து விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்ய முடியும்.

7. விலைமனு ஆவணங்களின் பிரதிகளை http://www.rjt.ac.lk/news/?cat=1 என்ற பல்கலைக்கழக இணையதளத்தில் இருந்து தரவிறக்கம் செய்யவும் முடியும் என்பதோடு அநுராதபுரம், மக்கள் வங்கியின் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 0081-1-001-8-1725841 இற்கு 06 இலக்கத்தில் உள்ள) மீளளிக்கப்படாத கட்டணத்தின் வங்கி ரசீதுடன் சேர்த்து கீழ் குறிப்பிடப்பட்டவாறு சமர்ப்பித்தல் வேண்டும்.

8. 2021.12.22 அன்று பி.ப. 02.00 க்கு விலைமனுக்கள் ஏற்பது முடிவுறும். முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் 2021.12.22 அன்று பி.ப. 02.00 அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதன் மூலம் சேர்த்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுவின் விலைமனுதாரர்கள் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் அதே தினம் பி.ப. 02.00 இற்கு விலைமனுக்கள் திறக்கப்படும்.

9. அனைத்து விலைமனுக்களும் இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து பெறப்பட்ட வளாகம் 01 இற்கு 260,000/- மற்றும் வளாகம் 02 இற்கு 240,000/- ரூபாய் விலைமனு பிணை ஒன்றை கொண்டதாக இருத்தல் வேண்டும். விலைமனு பிணையானது 2022.03.30 அன்று வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

10. 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின்படி கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு ஒப்பந்தத்தின் பிரதி விலைமனுவுடன் இணைத்திருத்தல் வேண்டும்.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு**
**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்**
**மிஹிந்தலை**
**2021.12.02**

## இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் - மிகிந்தலை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## துப்புரவு சேவை ஏற்பாடு – 2021/2022

01. அநுராதபுரம், புளியங்குளம், விவசாய பீடத்திற்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைகேட்பு நடத்தப்படும்.

03. விலைமனுவுடன் பின்வரும் ஆவணங்களும் சமர்ப்பித்தல் வேண்டும்.
   I. துப்புரவு சேவை ஏற்பாட்டிற்கான செல்லுபடியான வர்த்தகப் பதிவு.
   II. கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு அதனை ஒத்த அளவில் துப்புரவு சேவை வழங்கலில் (2018, 2019, 2020 ஆம் ஆண்டுகள் உள்ளடங்கிய) மூன்று ஆண்டு அனுபவத்தை நிரூபிக்கும் ஆவணங்கள்.

| வளவின் பெயர் | தகுதி மற்றும் அனுபவம் | 2022-03-30 வரை செல்லுபடியான விலைமனு பிணை (ரூபா) | மீளளிக்கப்படாத விலைமனு கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|
| அநுராதபுரம் புளியங் குளம் விவசாய பீடம் | பணி நேரம் ஒன்றில் குறைந்தது 20 பேரை பணியமர்த்தல் அல்லது 100க்கும் அதிகமான ஊழியர்களைக் கொண்ட நிறுவனம் ஒன்றாக விலைமனுதாரர் துப்புரவு சேவை வழங்கலில் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும். | 75,000.00 | 5000.00 |

04. விலைமனு பிணை ஒன்றை கொண்டதாக விலைமனு இருத்தல் வேண்டும். விலைமனு பிணையானது இலங்கை மத்திய வங்கி மூலம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

05. இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் சிறாப்பருக்கு ரொக்கப்பணத்தில் மேலுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2021.12.02 அன்று தொடக்கம் 2021.12.22 அன்று வரை வேலை நாட்களில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிக்கு இடையே சிரேஷ்ட உதவிப் பதிவாளருக்கு (பொது நிர்வாகம்) எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். வார நாட்களில் 025-2266781 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலம் ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (பொது நிர்வாகம்) இடமிருந்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

06. 2021.12.23 அன்று 14.00 மணிக்கு விலைமனுக்கள் மூடப்படும்.

07. விலைமனுக்கள் கீழுள்ள முகவரிக்கு 2021.12.23 அன்று 14.00 மணி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் அல்லது இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக, பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைகேட்புப் பெட்டியில் இடுவதன் மூலம் இரு பிரதிகளுடன் கிடைப்பதற்கு வகைசெய்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் 2021.12.23 அன்று 14.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும்.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு**
**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்**
**மிகிந்தலை**
**2021.12.02**

### 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இல காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (460ஆவது அத்தியாயம்) 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்.

காணி அமைச்சின் இலக்கம் :- 4-3/11/2019/H/25

எனது இலக்கம் :- BER/4/5/2/82

காணி எடுத்தற் சட்டத்தின் கீழ் அரசிற்கு ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டி கீழ்க்காணும் காணியை ஆட்சி உரிமையை காணி எடுத்தற் சட்டத்தின் கீழ் எடுக்க உள்ளதை பொது மக்களுக்கு நான் இத்தால் அறிவிக்கின்றேன். மேலதிக விபரங்களுக்கு இல மற்றும். 2021/ 08/5 திகதி உடைய இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அதி விசேஷ வர்த்தமானிப் பத்திரிகையைப் பார்க்கவும்.

**உப அட்டவணை**

| | |
|---|---|
| மாவட்டம் | - களுத்துறை. |
| பிரதேச செயலகப் பிரிவு | - பேருவளை |
| கிராம சேவகர் பிரிவு | - 748 பொல்கொடுவ |
| கிராமத்தின் பெயர் | - நல்லஹேன |
| வரைபட இல | - மு.பி.க. 4834 |
| காணித் துண்டு இலக்கம் | - காணித்துண்டு இல 01 |
| காணியின் பிரமாணம் | - ஹெக்டெயார் 0.0230 |

**எம். ரன்ஜன் பி பெரேரா**
**பிரதேச செயலாளர்**
**பேருவளை**

**04 ஆம் திகதி பேருவளை பிரதேச செயலகத்தில்**

## பத்திரிக்கை அறிவித்தல்

### 1964 ஆம் ஆண்டின் 28 இல காணி எடுத்தல் (திருத்தம்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7(1) ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல:- 3/7/5/49

காணி அமைச்சின் குறிப்பு இல :- 4-3/8/2017/PC/391

இதன் கீழ்க்காணும் உப அட்டவணையில் விபரங்களுக்கான காணிகளை அரசுக்கு எடுத்துக்கொள்வதற்கு எதிர்ப்பார்க்கப்படுகிறது. மேலதிக விபரங்களுக்கு இல 2248/60, 2021.10.08 தினத்துக்குரிய இலங்கை சோஷலிச குடியரசின் அதிவிஷேடமான வர்த்தமானப் பத்திரிக்கையை பார்க்கவும்.

**உப அட்டவணை**

| | |
|---|---|
| மாவட்டம் | - நுவரெலியா |
| பிரதேச செயலகப் பிரிவு | - வலப்பனை |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | - 513 D இஹல பன்னல |
| கிராமத்தின் பெயர் | - இஹல பன்னல |
| வரைபட இல | - TopoPP 15 |
| பிரிவு இல | - 3204, 3205, 3206, 3209, 3214, 3216, 3217, 3218, 3220, 3223, 3224, 3225, 3228, 3230, 3233 |

**ஆர்.ஏ.விஜேசிங்க**
**பிரதேச செயலாளர்,**
**வலப்பனை.**

**முகவரி - பிரதேச செயலகம்**
**வலப்பனை நில்தண்டாஹின்ன**
**திகதி: 2021.11.22**



# மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தின் ஐந்தாவது இலக்கிய விழா







மண்முனைப்பற்று பிரதேச செயலகமும் கலாசார அதிகார சபையும் இணைந்து நடத்திய மண்முனைப் பற்று பிரதேச இலக்கிய விழா கடந்த வாரம் சிறப்பாக நடைபெற்றது. மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி ந.சத்தியானந்தி தலைமையில் ஆரையம்பதி நந்தகோபன் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்விற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் கே.கருணாகரன் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார்.

அதிதிகள் வரவேற்பினை தொடர்ந்து, மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது. வரவேற்புரை, வரவேற்பு நடனம் மற்றும் பிரதேச செயலாளரின் தலைமை உரை என்பன இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து புதிய மழைத் தூறல் 5 நூலானது பிரதேச செயலாளரினால் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன், நூலின் முதற் பிரதி பிரதம அதிதியாக கலந்து கொண்ட மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் அவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஏனைய சிறப்பு மற்றும் கௌரவ அதிதிகள் உள்ளிட்ட கலைஞர்களுக்கும் பிரதேச செயலாளரினால் நூலின் பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

தொடர்ச்சியாக 5 ஆவது தடவையாக இடம்பெற்று வரும் இலக்கிய விழாவில் இவ்வாண்டிற்கான இலக்கிய துறைக்கான கௌரவம் மூத்த இலக்கியவாதியான ச.க.பொன்னம்பலம் அவர்களுக்கு பிரதம அதிதியாக கலந்து கொண்ட மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் அவர்களினால் வழங்கி வைக்கப்பட்டது. சுகாதார முறைப்படி இடம்பெற்ற நிகழ்வினை ஆரையூர் கலாமன்றம், இலங்கேஸ்வரா இசைக்குழு மற்றும் இராமகிருஷ்ண மிசன் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட கலைஞர்களின் கலைப்படைப்புக்கள் அலங்கரித்திருந்ததுடன், நிகழ்வில் கலந்து கொண்டு தமிழ் மொழி வாழ்த்துப் பாவினை பாடிய மாணவர்களுக்கும் அதிதிகளால் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

அத்தோடு குறித்த நிகழ்வில் சிறப்பு அதிதியாக கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.தில்லைநாதன் கலந்து கொண்டிருந்ததுடன், உதவிப் பிரதேச செயலாளர் திருமதி எல். விவேகானந்தராஜா, நிருவாக உத்தியோகத்தர், கிராம உத்தியோத்தர்களுக்கான நிர்வாக உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர்கள், கலாசார அதிகாரசபையின் உறுப்பினர்கள் உள்ளிட்ட மட்டுப்படுத்தப்பட்டளவிலானோர் கலந்து கொண்டு நிகழ்வினை சிறப்பித்திருந்தனர்.

**எம்.எஸ்.எம்.நூர்தீன்**
**(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)**

## இலங்கையின் ஒரேயொரு மீனாட்சி அம்மன் ஆலயத்தில் உலகின் அரிதான நாகலிங்க மரம் நடும் வைபவம்

இலங்கையிலுள்ள ஒரேயொரு மீனாட்சி அம்மன் ஆலயமான அம்பாறை மாவட்டத்தின் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மடத்தடி மீனாட்சிஅம்மன் ஆலயத்தின் மகா குடமுழுக்கு வைபவம் அடுத்த வருடம் (2022) மார்ச் மாதமளவில் நடைபெறும். அதற்கான பொதுக்கூட்டம் எதிர்வரும் டிசம்பர் மாதம் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

டிசம்பர் மாதம் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள பொதுக்கூட்டத்திற்கு அம்பாறை மாவட்டத்திலுள்ள சகல தமிழ்க் கிராமங்களிலுமுள்ள மீனாட்சிஅம்மன் அடியார்கள் கலந்து கொள்ள முடியும் எனவும் அன்றையதினம் அவர்களிலிருந்து மகாகும்பாபிசேகக்குழு உள்ளிட்ட பல உப குழுக்களும் தெரிவு செய்யப்படுமெனவும் ஆலய பரிபாலனசபைத் தலைவர் கி.ஜெயசிறில் அறிவித்தல் விடுத்தார்.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மடத்தடி மீனாட்சிஅம்மன் புதிய ஆலயத்தின் மகா கும்பாபிசேகத்தையொட்டிய முகப்புக் கோபரத்திற்கான அடிக்கல் நடும் வைபவம் வெள்ளியன்று நடைபெற்றது. இதேவேளை உலகில் அரிதாகக் கிடைக்கின்ற நாகலிங்க மரத்தின் கன்று வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மடத்தடி மீனாட்சிஅம்மன் புதிய ஆலயத்தில் வெள்ளியன்று நடப்பட்டது.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் இடம்பெற்ற மரம் நடும் வைபவத்தில் ஆலய ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா உள்ளிட்ட நிருவாக சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள்.

பிரதமகுரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்களின் வழிகாட்டலில் ஆலய பரிபாலன சபைத் தலைவர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் மரத்தை நட்டு வைத்தார்.

நாகலிங்க மரத்தின் மகிமை பற்றி ஆலய பரிபாலன சபைத் தலைவர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் அங்கு தெரிவிக்கையில், "நாகலிங்கம் தென்னமெரிக்காவின் வடபகுதி வெப்பவலய அமெரிக்கா தென் கரிபியன் பகுதிகளைத் தாயகமாகக் கொண்டது. இது 30_35 மீட்டர் உயரம் வரை வளரக் கூடியது.இலங்கையின் சில பகுதிகளிலும் நாகலிங்க மரங்கள் காணப்படுகின்றன. சிங்கள மொழியில் இது சல் என அழைக்கப்படுகிறது.





இம்மரத்தின் பழம் முற்றி பழுக்க 1 வருடம் முதல் 18 மாதம் வரை கூட ஆகலாம். இம்மரத்தின் இலை மற்றும் பழங்களிலுள்ள பதார்த்தங்கள் எதிர் உயிரியாக செயல்பட்டு தோல் உடலின் மென்மையான பகுதிகளில் வளரும் பூஞ்சை பக்டீரியா கிருமிகளை அழிக்கின்றன. இதன் பட்டை மலேரியா சுரத்தை நீக்க பயன்படுத்தப்படுகிறது. இதன் உலர்ந்த பழங்கள் கீழே விழுந்து தரையில் பட்டு வெடித்து பெரும் சத்தத்தை ஏற்படுத்தும். ஆகவே கோயில்களில் கொள்ளையர்கள் புகாமல் இருக்க பாதுகாப்பின் அடையாளமாக நாகலிங்க மரங்கள் கோயில்களில் வளர்க்கப்படுகின்றன.

இதன் இலைகளை மையாக அரைத்து பூஞ்சை கிருமியால் தோன்றும் சொறி சிரங்கு, படர் தாமரை, படை உள்ள இடங்களில் தடவ குணமுண்டாகும். இதன் பூவின் லிங்கம் போன்ற பகுதியை அரைத்து புண்களின் மேல் தடவ புண்கள் ஆறும். இதன் இலைகள் நுண்கிருமிகளை அழிக்கும் ஆற்றல் கொண்டதால் இவற்றை மென்று சாப்பிட பல் மற்றும் ஈறு இடைவெளியில் தங்கியுள்ள கிருமிகளை வெளியேற்றி பல்வலியை குறைக்கின்றன. பற்கள் சொத்தையாகாமல் தடுக்கின்றன" என்றார்.

ஜனாதிபதியின் 1 இலட்சம் கிலோமீற்றர் வீதிஅபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மடத்தடி மீனாட்சிஅம்மன் ஆலயத்திற்கு செல்லும் வீதி கொங்கிறீட் வீதியாக புனர்நிருமாணம் செய்யப்படவிருக்கின்றது. நீண்ட காலமாக இவ்வீதி புனரமைக்கப்படாமல் தூர்ந்து போய் போக்குவரத்திற்கு பொருத்தமில்லாததாக இருந்தது. அவ்வீதியை1இலட்சம் கிலோமீற்றர் வீதி அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் புனரமைக்க ஏற்பாடாகியுள்ளது.

காரைதீவு குறூப் நிருபர்


SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB

பெருந்தோட்ட அமைச்சு
இலங்கைத் தேயிலைச் சபை
தேயிலை ஆணையாளர் பிரிவு

**அறிவித்தல்**

**மில்லவிட்டிய தேயிலை தொழிற்சாலை MF 0905**
மில்லவிட்டிய தோட்டம், இரத்தினபுரி.

**தேயிலைக்கான நிலுவைத் தொகையை செலுத்துதல்**

மில்லவிட்டிய தேயிலை தொழிற்சாலைக்கு (MF 0905) : 2017 டிசம்பர் மற்றும் 2018 ஜனவரி, பெப்ரவரி போன்ற மாதங்களுக்கு பச்சைதேயிலை இலைகளை வழங்கிய விநியோகஸ்தர்கள், அவர்கள் வழங்கிய இலைகளுக்கான கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளவில்லையெனில், **2021.12.16** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் இலங்கை தேயிலை சபையின் இரத்தினபுரி பிராந்திய அலுவலகத்திற்கு தேயிலை வழங்கப்பட்ட ஆவணங்களுடன் அறிவிக்க நடவடிக்கை எடுக்குமாறு இதன் மூலம் உங்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றது.

அலுவலக முகவரி :- தேயிலை உதவி ஆணையாளர்,
இலங்கை தேயிலை சபை,
பிராந்திய அலுவலகம்,
இல. 61/1, புதிய நகரம்,
இரத்தினபுரி.

தொலைபேசி / தொலைநகல் இல :- 045-2222136

இந்த விளம்பரத்திற்குப் பதிலளிக்கப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் இறுதிக் கட்டணப் பட்டியல் தயாரிக்கப்படும், **2021.12.16** ஆம் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் / கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படாது.

**தேயிலை ஆணையாளர்**
**இலங்கைத் தேயிலைச் சபை**
**இல. 574, காலி வீதி,**
**கொழும்பு 03.**

SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB SLTB


## நாவுல – அம்பன பிரதான வீதியிலுள்ள பாலத்தை புனரமைக்க நடவடிக்கை

*மாத்தளை சுழற்சி நிருபர்*

மாத்தளை மாவட்டத்தின் நாவுல பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட நாவுல அம்பன பிரதான வீதியின் நீண்டகாலமாக புனர்நிர்மாணம் செய்யப்படாமல் சேதமடைந்த நிலையில் காணப்படும் பாலத்தை புனர் நிர்மாணம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதேச சபை தலைவர் சனத் தசநாயக்க தெரிவித்தார்.

போவதென்ன நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறக்கும் போது ஏற்படும் நீர்மட்டம் உயர்வதால் மழைக்காலத்தில் ஏற்படும் வெள்ளத்தினாலும் அடிக்கடி மூழ்கும் இப்பாலத்தின் கட்டுமானத்துக்கு பலத்த சேதம் அடைந்து காணப்படுகிறது.

வெள்ளம் ஏற்படும் நிலையில் பாலத்தின் நீர்மட்டம் பாலத்தின் பல அடிக்கு உயர்வடைவதால் இப்பாதையில் போக்குவரத்து முற்றாக தடைபடுகிறது

இதனைக் கருத்திற் கொண்டு இப்பாலத்தை துரிதகதியில் நிர்மாணிக்க அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார் என தெரிவித்த பிரதேசசபை தலைவர் சனத் தசநாயக்க இப்பிரதேசத்தில் உள்ள ஒபல்கள, நலியாகந்த, பொறககொள்ள கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இதன் மூலம் பெரிதும் நன்மை அடைய உள்ளனர் என மேலும் அவர் தெரிவித்துள்ளார்.


கனிம உர உற்பத்தி ஊக்குவிப்பு மற்றும் விநியோக ஒழுங்குமுறை மற்றும் தானியங்கள், கனிம உணவு, காய்கறி, பழம், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு சாகுபடி விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சு

**தேசிய உணவு மேம்பாட்டு சபை**
(இலங்கை தேசிய பட்டினி இல்லாதொழிப்பு செயற்பாட்டு மையம்)
**அப்புறப்படுத்தப்பட்ட பொருட்களின் விலைமனுக்கோரல்**

**தேசிய உணவு மேம்பாட்டு சபையின் (இலங்கை தேசிய பட்டினி இல்லாதொழிப்பு செயற்பாட்டு மையத்தின்) கலங்குட்டிய தொழிற்சாலை மற்றும் அலுவலகத்தில் அப்புறப்படுத்தப்பட்ட பல்வேறு உபகரணங்களை விலைமனுக்கோரல் மூலமாக விற்பனை செய்தல் - 2021**

தேசிய உணவு மேம்பாட்டு சபையின் (இலங்கை தேசிய பட்டினி இல்லாதொழிப்பு செயற்பாட்டு மையத்தின்) கலங்குட்டிய தொழிற்சாலை மற்றும் அலுவலகத்தில் அப்புறப்படுத்தப்பட்ட பல்வேறு உபகரணங்களை விலைமனுக்கோரல் மூலமாக விற்பனை செய்வதற்காக **2021.12.23** ஆம் திகதி **பி.ப.2.00** மணி வரை விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

தற்போது நாட்டில் நிழவும் கொவிட் 19 தொற்று நிலை காரணத்தினால் **www.nfpb.lk** இணைத்தளத்தின் மூலம் குறித்த விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளது. லொட் இலக்கம் 1 இன் கீழ் **2021.12.03.** ஆம் திகதி முதல் **2021.12.22** அம் திகதி வரை வார நாட்களில் **மு.ப.10.00** மணி முதல் **பி.ப.3.00** வரை **கலங்குட்டிய மேல் கலங்குட்டிய** எனும் முகவரியில் அமைந்துள்ள தேசிய உணவு மேம்பாட்டு சபையின் தொழிற்சாலையில் பொருட்களை பரிசீலனை செய்ய முடியும்.

மீள் செலுத்தப்படாத கட்டணமாக **ரூ.500.00** மற்றும் மீள் செலுத்தப்படும் கட்டணமாக **ரூ.5,000/-** னை செலுத்த வேண்டும். "இலங்கை தேசிய பட்டினி இல்லாதொழிப்பு செயற்பாட்டு மையம்" எனும் பெயரில் இலங்கை வங்கி பொரளை கிளையில் கணக்கு இலக்கம் **194125** இற்கு வைப்புச்செய்து அந்த பற்றுச்சீட்டுடன், விண்ணப்பப்படிவத்தின் முதற் பிரதியை பதிவுத்தபாலின் மூலம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்திற்கு கிடைக்கப்பெறுமாறு அனுப்பிவைக்கவும். அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் குறித்த நேரத்திற்கு முன்னர் இடுதல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிக்கு பங்கேற்க முடியும். மனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையினை கொள்முதல் குழு கொண்டுள்ளது. மேலதிக விபரங்களை காரியாலய நேரங்களில் **011-2580194, 025-3230164, 011-2506895** இலக்கங்களை தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்

தலைவர்,
**தேசிய உணவு மேம்பாட்டு சபை**
இல. 45, கிரிமண்டல மாவத்தை, நாரஹேன்பிட்டிய, கொழும்பு 05.



LSC

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்

**விலைமனுக்களுக்கான அழைப்பு**

**கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கிராம்பு மற்றும் வெற்றிலை அடங்கலான தொடர்புள்ள கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி ஊக்குவித்தல் தொடர்பான சிறிய பயிர்களின் அபிவிருத்திக்கான இராஜாங்க அமைச்சு**

**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்**

**02 தொகுதி அலுவலகத்தை நிர்மாணிப்பதற்கான தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் - PR-28426**

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனமானது அதனது பெலவத்த பணிமனைக்காக 02 தொகுதி அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் இத்தால் அழைக்கின்றார்.

1. 2021 டிசம்பர் 21 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 2,000 இலங்கை ரூபாவை செலுத்திய பின்னர், கொழும்பு-04, மெல்போர்ன் அவென்யு, 27 ஆம் இலக்கத்திலுள்ள வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் முழுமையான விலைமனுக்கோரல் ஆவணங்களின் தொகுதியொன்றை விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
2. விலைமனுதாரரானவர் மீளளிக்கப்படாத பணவைப்புத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் இணைத்தல் வேண்டும். அவ்வாறு இணைக்கப்படாவிடின், அவ்வாறான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
3. ஒப்பந்தத்தை வழங்குவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் ICTAD இன் சி-7 பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்கள் முத்திரையிடப்பட்ட தபாலுறையொன்றில் நேரடியாக அல்லது தூதஞ்சல் சேவையில் 2021 டிசம்பர் 22 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு பிந்தாமல் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல. 27, மெல்போர்ன் அவென்யு, கொழும்பு-04 என்ற முகவரியை வந்தடைதல் வேண்டுமென்பதுடன் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Tender for the Construction of 02 Block Office PR 28426" என்ற சொற்கள் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். விலைமனுக்கள் அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் நிகழ்வில் பங்கு பெற்றலாம். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.
5. அனைத்து விலைமனுக்களும் 100,000 இலங்கை ரூபா (ஒரு இலட்சம் இலங்கை ரூபா) பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் மதிப்பீடு செய்யப்பட்ட ஆகுசெலவு ஒவ்வொன்றும் 4.0 மில்லியன் இலங்கை ரூபாவாகும்.
6. 2021 டிசம்பர் 14 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு பெலவத்த கேட்போர் கூடத்தில் விலைமனுக் கூட்டமொன்று நடைபெறும்.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன கொள்வனவு முகாமையாலரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி: +9411 2505558. அலைபேசி: +94 0719803859. தொலைநகல்: +9411 2500674. மின்னஞ்சல்: chandana@isci.lk

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,**
**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்,**
**இல. 27, மெல்போர்ன் அவென்யு,**
**கொழும்பு-04.**

# 2ஆவது இன்னிங்ஸில் முன்னிலை பெற இலங்கை அணி துடுப்பாட்டம்

## ரமேஷ் மெண்டிஸ் அபார பந்துவீச்சு



ரமேஷ் மெண்டிஸின் அபார பந்துவீச்சால் மேற்கிந்திய தீவுகள் அணியை 253 ஓட்டங்களுக்கு மட்டுப்படுத்திய இலங்கை அணி இரண்டாவது இன்னிங்ஸில் முன்னிலை பெற துடுப்பெடுத்தாடி வருகிறது.

காலி சர்வதேச மைதானத்தில் நடைபெற்று வரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாவது நாளான நேற்று இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி ஆட்டநேர முடிவின்போது 21 ஓவர்களில் 46 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை இழந்துள்ளது.

அணித்தலைவர் திமுத் கருணாரத்ன 6 ஓட்டங்களுடன் ரன் அவுட் ஆனதோடு அடுத்து வந்த ஓஷத பெர்னாண்டோவும் 14 ஓட்டங்களுடன் ரன் அவுட் ஆகினார். இந்நிலையில் ஆட்டநேர முடிவின்போது பெதும் நிசங்க 21 ஓட்டங்களுடனும் சரித் அசலங்க 4 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 49 ஓட்டங்களால் பின்தங்கிய நிலையிலேயே தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்திருந்தது. இந்நிலையில் அந்த அணி சவாலான வெற்றி இலக்கொன்றை நிர்ணயிப்பதற்கு வலுவான துடுப்பாட்டம் ஒன்றை வெளிப்படுத்த வேண்டி உள்ளது.

முன்னதாக 69 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை இழந்த நிலையில் நேற்று தனது முதல் இன்னிஸை தொடர்ந்த மேற்கிந்திய தீவுகளுக்கு ரமேஷ் மெண்டிஸ் சவால் கொடுத்தார். 35 ஓட்டங்களை பெற்ற நிகுரா பெனரை வீழ்த்திய மெண்டிஸ் மத்திய வரிசை விக்கெட்டுகளை அடுத்தடுத்து சாய்த்தார். மறுபுறம் லசித் எம்புல்தெனிய சிறப்பாக ஆடி வந்த அணித்தலைவர் கிரெய்க் பிரத்வெயிட்டை 72 ஓட்டங்களுடன் போல்ட் செய்தார்.

இதன்மூலம் மேற்கிந்திய தீவுகள் அணி 104.2 ஓவர்களில் 253 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

இதில் ரமேஷ் மெண்டிஸ் இன்னிங்ஸ் ஒன்றில் தனது சிறந்த பந்துவீச்சை பதிவு செய்து 70 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

OBSERVER SLT-MOBITEL 43rd SCHOOL CRICKETER OF THE YEAR 2021
Recognizing talent, inspiring greatness.
SLTMOBITEL The Connection

## 43வது ஒப்சவர் SLT-மொபிடெல்

**மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2021**

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் ஒப்சேவர் SLT-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2021

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2020/2021 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2021

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2020/2021 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..........
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ..........
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ..........
வாக்களித்தவர் பெயர் : ..........
முகவரி : ..........
மொபைல் இல. : ..........

Sunday Observer

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

**வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:**

1வது பரிசு : ரூ. 2,500    2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

43வது ஒப்சவர் SLT-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**நிபந்தனைகள்:**

SLT-மொபிடெல் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி **04-12-2021**    இல. **09**




## 'பாடசாலை கிரிக்கெட், நல்லதும் கெட்டதும் கலந்தது'

43 ஆவது ஒப்சர்வர் SLT மொபிடெல் பாடசாலை கிரிக்கெட் வீரர்களுக்கான விருது வழங்கும் விழா கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதே ஆண்டில் எட்டு மாதங்களில் நடைபெறும் ஒப்சர்வர்SLT மொபிடெல் பாடசாலை கிரிக்கெட்டர்ஸ் ஒஃப் தி இயர் மெகா ஷோ இதுவாகும்.

ஒப்சர்வர்SLT மொபிடெல் ஆண்டின் சிறந்த பாடசாலை கிரிக்கெட் வீரர்களின் 43 வருட வரலாற்றில் ஒரே வருடத்திற்குள் இரண்டு நிகழ்ச்சிகள் இடம்பெற்றதில்லை.

ஆனால் 42வது அப்சர்வர்SLT மொபிடெல் ஆண்டின் சிறந்த பாடசாலை கிரிக்கெட் வீரர்கள், கொவிட்19 தொற்றுநோய் காரணமாக கடந்த ஆண்டு முதல் இந்த ஆண்டு ஏப்ரல் வரை ஒத்திவைக்கப்பட்டதால், பாடசாலை கிரிக்கெட் ஆர்வலர்கள் இந்த ஆண்டு மற்றொரு மெகா ஷோவை அனுபவிக்கும் அரிய வாய்ப்பைப் பெறுவார்கள்.

உலகளாவிய தொற்றுநோய்களின் காரணமாக அனுசரணையாளர்களை கண்டுபிடிப்பது கடினமாக இருந்ததால், கிரிக்கெட்டுக்கான அமைப்பைக் கட்டுப்படுத்தும் பாடசாலை கூட SLSCA, அதன் வருடாந்த விருது விழாவை கடந்த இரண்டு ஆண்டுகளாக நடத்த முடியவில்லை.



ஆனால் SLT Mobitel ஒரு உண்மையான பெருநிறுவன பிரஜையாக மிகவும் கடினமான காலகட்டங்களில் தனது வாக்குறுதியை நிறைவேற்றியது, எட்டு மாத இடைவெளியில் மில்லியன் கணக்கான ரூபாய்களை செலவழித்து இரண்டு மெகா நிகழ்வுகளுக்கு நிதியளித்தது.

43வது ஒப்சர்வர் SLT மொபிடெல் ஆண்டின் சிறந்த பள்ளித் துடுப்பாட்ட வீரர்கள் எதிர்வரும் 14 ஆம் திகதி இறுதி செய்யப்பட்டாலும், இறுதி முடிவு பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை தற்போதைய எண்ணிக்கையை விட அதிகரிக்குமா அல்லது குறையுமா என்பது அடுத்த மாதம் முடிவு செய்யப்படும். கொவிட் 19 நிலைமை.

சண்டே ஒப்சர்வர் மற்றும் SLT மொபிடெல் ஆகியவை பாடசாலை கிரிக்கெட்டிற்கு அதன் தொடர்ச்சியான ஆதரவையும் அர்ப்பணிப்பையும் காட்டுவதால், ஒப்சர்வர்SLT மொபிடெல் ஆண்டின் சிறந்த பாடசாலை கிரிக்கெட் வீரர்களை இடையூறு இல்லாமல் நடத்த முடிந்தது. இது போன்ற நிகழ்வுகள் உட்பட அனைத்து விளையாட்டு நடவடிக்கைகளும் ஸ்தம்பிதமடைந்தன

கடினமான பருவத்திற்குப் பிறகு பாடசாலை கிரிக்கெட் வீரர்கள் தங்கள் பாராட்டத்தக்க சாதனைகளுக்கு அங்கீகாரமாக ஓரிரு விருதுகளை வெல்வது மிகவும் முக்கியம். இது அவர்களின் சாதனைகளைப் பாராட்டுவது மட்டுமல்லாமல், பெரிய லீக்கில் அடியெடுத்து வைப்பதற்கு ஒரு பெரிய உத்வேகமாகவும் இருக்கிறது.

சண்டே ஒப்சர்வர் மற்றும் எஸ்.எல்.டி மொபிடெல் ஆகியவற்றின் அர்ப்பணிப்பு மற்றும் அர்ப்பணிப்பு காரணமாக, பாடசாலை கிரிக்கெட் வீரர்களை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதும் போது, அதன் விருது நிகழ்ச்சியை தடையின்றி நடத்த முடிகிறது.

அந்த மகத்தான அர்ப்பணிப்பு பேசப்படும்போது, ஸ்ரீலங்கா டெலிகொம் குழுமத்தின் தலை வருமான ரொஹான் பெர்னாண்டோவுக்கு நன்றி கூறப்படும். பெர்னாண்டோ விளையாட்டின் சிறந்த ஊக்கு விப்பாளர் மற்றும் இலங்கையின் அமெச்சூர் படகோட்ட சங்கத்தின் முன்னாள் தலைவர் மற்றும் தேசிய ஒலிம்பிக் குழுவின் முன்னாள் துணைத் தலைவர்.



1988 ஆம் ஆண்டு ஒப்சர்வர் பாடசாலை துடுப்பாட்ட வீரருக்கான விருதை வென்றதன் பின்னர், இலங்கையின் முன்னாள் தலைவர் சனத் ஜயசூர்ய, கடந்த 2013 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் (ஏப்ரல் மாதம் நடைபெற்ற) ஒப்சர்வர் SLT மொபிடெல் ஆண்டின் சிறந்த பாடசாலை கிரிக்கெட் வீரர்கள் நிகழ்ச்சியில் இரண்டு முறை பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

அவர் தனது கிரிக்கெட் வாழ்க்கையை மாத்தறை புனித சேர்வேஷியஸ் கல்லூரியில் ஒரு பாடசாலை மாணவராகத் தொடங்கினார். வெளி மாவட்ட ஒப்சர்வர் பாடசாலை கிரிக்கெட்டர் விருதை வென்றதைத் தவிர, ஜயசூர்ய மேலும் இரண்டு பெறுமதியான விருதுகளை வென்றார் 1988 இல் அதே ஆண்டில் சிறந்த துடுப்பாட்ட வீரர் மற்றும் சிறந்த சகல துறைவீரர் வெளி மாட்டவம் ஆகியன வாகும்

தனது கிரிக்கெட் வாழ்க்கையின் ஆரம்ப காலங்களை நினைவு கூர்ந்த ஜயசூர்ய, கடினமான பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் பருவத்தின் முடிவில் வெகுமதியாக இது தனக்கு ஒரு சிறந்த உணர்வைத் தந்ததாகக் கூறினார். "இன்றையதைப் போலல்லாமல், சிறந்த பாடசாலை கிரிக்கெட் வீரர்களுக்கு வெகுமதி அளிக்க இதுபோன்ற நிகழ்ச்சிகள் எதுவும் இல்லை" என்று ஜயசூர்ய கூறினார். ஒப்சர்வர் பாடசாலை கிரிக்கெட்டர் ஒஃப் தி இயர் விருதை வென்றது ஒரு பாடசாலைச் சிறுவன் கிரிக்கெட் வீரராக மிகவும் விரும்பப்படும் தருணம் என்றார்.

உயர் விருது பெற்ற பிறகு தனக்கு கிடைத்த உத்வேகமும் ஊக்கமும் அளப்பரியது என்றார். மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் தனது பெருமையான தருணத்தை நினைவு கூர்ந்த அவர், தனது பாடசாலையின் அப்போதைய அதிபர் ஜி.எல்.கலப்பதி மற்றும் இளம் வயதில் தனது பாடசாலை வாழ்க்கையை வளர்ப்பதற்கு உறுதுணையாக இருந்த பயிற்சியாளர் லயனல் முனசிங்க ஆகியோருக்கு நன்றி தெரிவித்தார்.

ஒப்சர்வர் ஆண்டின் சிறந்த படசாலை கிரிக்கெட் வீரர் விருதை வென்ற சில மாதங்களுக்குப் பிறகு, ஜயசூர்யா இலங்கை 23 வயதுக்குட்பட்ட அணிக்காக விளையாடி வளமான அறுவடை செய்தார். அடுத்த ஆண்டு டிசம்பர் 26, 1989 இல் மெல்போர்னில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இலங்கைக்கான ஒரு நாள் போட்டிக்கான அறிமுகத்தில் அது முக்கிய பங்கு வகித்தது.

அவர் இலங்கை அணியின் வெற்றிகரமான போமியுலாவின் முக்கிய அங்கமாக மாறினார். ஜூன் 28, 2011 அன்று அவர் ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றபோது, அவர் 445 ஒருநாள் போட்டிகளில் 13,480 ஓட்டங்கள் குவித்துள்ளார், 28 சதங்கள் மற்றும் 68 அரைசதங்கள் விளாசி னா ர். ஒருநாள் போட்டிகளில் 323 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார். அவர் தனது தொழில் வாழ்க்கையின் ஆரம்ப காலத்தில் வரையறுக்கப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் வீரராக முத்திரை குத்தப்பட்டாலும், அவர் தனது தகுதிகளை டெஸ்ட் ஆட்டத்திலும் நிரூபித்தார். 1997 இல் இந்தியாவுக்கு எதிராக ஜயசூர்யவின் சிறந்த 340 ஓட்டங்கள், அந்த நேரத்தில் டெஸ்ட் போட்டிகளில் இலங்கை துடுப்பாட்ட வீரர் ஒருவரின் அதிகபட்ச தனிப்பட்ட இன்னிங்ஸ் ஆனது.

110 டெஸ்ட் போட்டிகளில், ஜயசூர்ய 40.07 என்ற கவர்ச்சிகரமான சராசரியுடன் 14 சதங்கள் மற்றும் 31 அரைசதங்கள் உட்பட 6,973 ஓட்டங்கள் குவித்துள்ளார். ஒரு டெஸ்ட் வீரராக அவரது சகலதுறை வீரராக 98 விக்கெட்டுகள் மற்றும் 78 பிடிகள் அடங்கும்.

பின்னர் தேர்வாளர்களின் தலைவராக ஆன ஜயசூர்ய, ஒரு நல்ல கிரிக்கெட் வீரர் வெற்றிகரமான வீரராக மாறுவதற்கு நிறைய நேரம் ஒதுக்க வேண்டும் என்று தான் உணர்கிறேன் என்றார்.

"இளம் பாடசாலை கிரிக்கெட் வீரர்கள் விளையாட்டில் கவனம் செலுத்த வேண்டும், அதனால் அவர்கள் தங்கள் இதயங்களை வெளிப்படுத்தினால் வெற்றிகள் வரும். எனது வாழ்க்கையைத் தொடங்கும் போது நான் இவ்வளவு தூரம் சென்று இலங்கை கிரிக்கெட்டுக்கு இவ்வளவு வெற்றியை அடைவேன் என்று நான் நினைக்கவே இல்லை. இதற்கெல்லாம் எனது கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு தான் காரணம்" என்றார் ஜயசூர்ய.

"தற்போதைய பாடசாலை போட்டி அமைப்பு நல்லதும் கெட்டதும் கலந்ததாக இருக்கிறது. வெளிமாவட்டங்களில் உள்ள சில உயர்மட்ட பாடசாலை அணிகளுக்கு கொழும்பு முன்னணி பாடசாலைகளுக்கு எதிராக விளையாடுவதற்கான வாய்ப்பை வழங்கியுள்ளது. அந்த நேர்மறையான அறிகுறியைத் தவிர, கிரிக்கெட்டின் போட்டித்திறன் மற்றும் தரம் குறித்து சில கவலைகள் உள்ளன, அவை சில போட்டிகளில் இழக்கப்படுகின்றன, "என்று அவர் கூறினார்.

"இப்போது பாடசாலை கிரிக்கெட் போட்டிகள் அதிகம். ஒருபருவத்தின் போது ஒரு அணி கௌரவிக்க பல போட்டிகள் உள்ளன. அது விளையாட்டுக்கு நல்லதல்ல. எங்கள் பாடசாலை கிரிக்கெட் தரத்தை மேலும் மேம்படுத்த பாடசாலை கிரிக்கெட் அமைப்புக்கு ஒரு பெரிய பொறுப்பு மற்றும் பெரிய பங்கு உள்ளது, "என்றும் கூறினார்.

"உலகின் மற்ற தரங்களுடன் ஒப்பிடுகையில், அது இருந்த நிலையில் இருந்து முன்னேற்றம் அடையவில்லை. நாம் இருந்த புள்ளியில் இருந்து மேலும் மேலே செல்வதற்குப் பதிலாக அது தேக்கமடைந்துள்ளது. நாம் அதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும்," என்று அவர் மேலும் கூறினார். "இரண்டு முதல் மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் நமது நாட்டின் பாடசாலை கிரிக்கெட் அமைப்பு உலகிலேயே சிறந்ததாகக் கருதப்பட்டது. உதாரணத்திற்கு, அப்போது இந்தியா நமக்கு மிகவும் கீழே இருந்தது. ஆனால் இப்போது, இந்தியா ஒரு நல்ல 19 வயதுக்குட்பட்ட கட்டமைப்பைக் கொண்டுள்ளது, இது இ ளைஞர்களுக்கும் இந்திய தேசிய அணிக்கும் ஊக்கமளிக்கும் திறன் கொண்டது . மற்ற இரண்டு டெஸ்ட் நாடுகள் தங்கள் இளைஞர் அணிகளில் பெரும் முன்னேற்றங்களைச் செய்துள்ளன. எதிர்கால சவால்களை எதிர்கொள்ளும் வகையில் எங்களது உத்தி களை மாற்றி, போட்டியை மறுசீரமைக்க வேண்டும்" என்றும் கூறினார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 டிசம்பர் மாதம் 2ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.